# தமிழரசு

திங்கள் இருமுறை செப்.16-1970 35காசு



# உறுதியான கட்டடங்கள்: *நகரங்களில்-1*





# தமிழரசு

மலர் 1 1970 செப்டம்பர் 16 இதழ் 6

## இந்த இதழில்

முதலமைச்சர் எழுதும்

இனியவை இருபது

புலமைக் காஞ்சி போற்றுதும்

செவ்வாழை (அண்ணாவின் சிறுகதை)

சிட்டுக்குருவிகள் சிரிக்கின்றன

புத்துலகம் காணப் புறப்படுவீர்

எண்ண எண்ண இனிக்கும்
வண்ண வண்ண ஓவியம்

சின்னச் சின்ன இழை
பின்னிப் பின்னிவரும்

பறவைகள் பலவிதம்

கேளுங்கள் தரப்படும்

ஆற்றோரம் !

மலைபோல் வரும் தொல்லைகளைப்
பனிபோல் ஆக்கிடும் ஆட்சி

## கண்ணான அண்ணா !

**முகப்பில்:**

அண்ணன் பிறந்த நாளில்
எண்ணம் நிறைவேற
வண்ணம் சேர் மகிழ்ச்சிக் கோலம் !

**மத்தியில்:**

காஞ்சி நகரக் காட்சிகள்



# அன்று அண்ணா



செப்டம்பர் 15.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 62-வது பிறந்த நாள்!

அவர் நம்மிடையே உலவிடவில்லை.

ஆனால் . . . .

இந்தியாவின் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி சொன்னது போல் ''நம்முடைய நெஞ்சங்களில் அவர் நிறைந்திருக்கிறார்.''

* * *

ஈழத்து அன்பர் சொன்னார், ''அண்ணா இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழர்'' என்று.

இந்த நூற்றாண்டில், தமிழ் பேசும் மக்கள் உலகின் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும் அங்கெல்லாம், அவர்களின் உள்ளங்களில் எல்லாம் முடிசூட்டிக்கொண்ட இணையற்ற தமிழர் அவர்.

நம் நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள்—இயற்கை வளத்தைப் பயன்படுத்தி, தொழில் திறனை உண்டாக்குபவர்கள் — தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.

திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் ஐயப்பட வேண்டாம்.

—பேரறிஞர் அண்ணா

மலேசிய நாட்டுக்கு அண்ணா சென்றிருந்தபொழுது, அங்கு வாழும் தமிழர்களிடம் குறிப்பிட்டார்:—

''நீங்கள் வாழும் மலேசிய நாடுதான் உங்கள் தாய் நாடாகும். தமிழ் நாட்டை உங்கள் தாய் நாடாக எண்ண வேண்டாம். அது உங்கள் தாய் மொழி பிறந்த நாடு'' என்று.

பேரறிஞர் அண்ணாவின் பேருள்ளத்திற்கு இப்பேச்சு ஒன்றே போதும்.

* * *

முதன் முறையாக அண்ணா அமெரிக்கா சென்ற பொழுது, அவர் எப்பொழுது வருவார் என்று இந்தியத் தூதுவரகத்தைத் தொலைபேசி மூலம் கேட்டவண்ணம் இருந்தார்களாம் அங்கு வாழும் இந்தியர்கள்.

இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

பாரதி சொன்னார், தொழிலாளர்கள் பிரம்மாக்கள் என்று! பிரம்மாக்கள் என்றால் தெய்வங்களல்ல—உற்பத்தி செய்பவர்கள்! உற்பத்தி செய்பவர்தான் ஆக்குந் தொழில் தான் பிரம்மாவுக்கு உரியது என்று புராணங்கள் கதை சொல்லும். அதைப் போல, தொழிலாளர்கள் பிரம்மாக்களாகத் தான் இருக்க வேண்டுமென்று, நினைத்தால், தொழில் இருக்கும் ஆனால் வளமிருக்காது. தொழிலாளர் உரிமைகளையும் அவர்களின் நலனையும் எவ்வளவுக் கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ, அவ்வளவு விரிந்த அளவில் தொழில் வளம் பெருகும்.

—பேரறிஞர் அண்ணா

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து சென்றுள்ள வேறு எந்தத் தலைவரைப் பற்றியும் இந்த அளவுக்கு அங்கே ஆர்வத்தோடு மக்கள் விசாரித்தது இல்லையாம்!

அயல் நாடுகளில், அண்ணா அவர்களை, மைய அரசில் உள்ள கட்சியோடு மாறுபட்டவர் என்ற கருத்துடன் உள்நாட்டு அரசியலைப் பற்றிக் கேட்டபொழுதெல்லாம் பதில் சொல்ல மறுத்துவிட்டார்.

அரசியல் நாகரிகத்தின், பண்பாட்டின் பல்கலைக் கழகம் அவர்.

* * *

முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற பிறகு டில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய முதலமைச்சர்கள் கூட்டத்திற்கு அண்ணா அவர்கள் சென்ற பொழுது வாயில் காப்பாளர் அண்ணாவை உள்ளே விட மறுத்தாராம்.

ஏழை மக்களிடம் தான் பெரும்பாலான வியாபாரம் நடக்கிறது. அப்படி வியாபாரம் நடக்க வேண்டுமானால், அவர்களுடைய கைகளுக்கு எட்டும் விதத்தில் விலை இருக்கவேண்டும். அவர்களது கைகளுக்கு எட்டுகிற விலை என்பது என்ன? அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ற முறையில் விலை இருக்க வேண்டும்.

நாட்டில் வளம் இருந்தால் தான், வியாபாரம் நல்ல முறையில் இருக்கும்.''

—பேரறிஞர் அண்ணா

# அன்று அண்ணா





வேட்டி கட்டிக் கொண்டு சென்ற அண்ணாவின் எளிமையான தோற்றத்தைக் கண்டபோது அவர் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் என்று அந்த வாயில் காவலாளி கருத வில்லையாம் !

எளிமையின் சின்னமாக விளங்கிய அண்ணா காந்தீயத்தின் உண்மைத் தொண்டராகத் திகழ்ந்தார்.

* * *

இப்படி எத்தனை எத்தனையோ நினைவுகள் அண்ணாவைப் பற்றி எண்ணும்பொழுது தோன்றுகின்றன. அடுக்கடுக்கான அந்த நிகழ்ச்சிகளை விவரித்துக் கொண்டே சென்றால் இடம் போதாது.

அண்ணா தனக்குப் பிடித்தமான தொழில் எது என்பதைச் சில நேரங்களில் எடுத்துரைத்திருக்கிறார்.

செய்தியாளர்கள் பேரவையில் பேசும் பொழுதும் குறிப்பிட்டுள்ளார்.

''நான் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது எனக்கு அனுப்பப்பட்ட படிவத்தில், தொழில், என்று கேட்கப்பட்டிருந்த பகுதிக்கு ''பத்திரிகையாளன்'' (ஜர்னலிஸ்ட்) என்று குறிப்பிட்டேன். நான் விரும்பும் தொழிலும் அதுதான்''.

அண்ணா அவர்கள் விரும்பிய அந்தத் துறையில் உருவாகி வருவதுதான் ''தமிழரசு''.

* * *

தமிழக அரசின் சாதனைகளை நாட்டுக்கு விளக்கிடும் அரும் பணியில் ஆற்றல் மிகு கருவியாக விளங்குகிறது 'தமிழரசு'.

தமிழ்நாடு அரசு, இந்திய நாட்டின் பல்வேறு துறைகளில் வழிகாட்டியாய்ச் சிறப்பு மிக்கதாய்ச் சீரியதாய் விளங்குகிறது.

புகழ்மிக்க அப்பட்டியலில் 'தமிழரசு' இதழும் தன்னை இணைத்துக் கொள்கிறது.

அரசு ஏடு என்றால் மக்கள் விரும்பாத வகையில் ''புள்ளி விவரப் பட்டியலை மட்டும் தரும் தாள்'' என்ற நிலையை மாற்றிப் புதுப் பொலிவை உருவாக்கித் தருகிறது, தமிழரசு!

அண்ணா பிறந்த நாளில் . . .

அவர் புகழ் போற்றி . . . .

அனைத்துத் துறைகளிலும் அரசு விளைத்திடும் ஆற்றல் மிகு பணிகளை மக்களுக்கு விளக்கிடுவதில் ''தமிழரசு'' பெருங் கவனம் செலுத்தும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

'மக்களுடன் பழகிக் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் சர்க்கார் அதிகாரிகள் பணி ஆற்றினால் மாநிலத்தில் ஆள்கின்ற சர்க்காருக்குச் சிறப்பு வரும்.

ஒவ்வொரு சர்க்கார் அலுவலகமும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாக ஆக வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வளரும்.

—பேரறிஞர் அண்ணா

---

ஒரு காலம் இருந்தது; குழந்தைகளைச் செல்வம் என்ற காலம். அதுவும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை. குழந்தை குட்டி எத்தனை என்று தான் கேட்கிறோம்.

ஆகையால் குட்டி வேண்டாம், குழந்தை என்ற அளவோடு குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியது தான். ஒரு குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் நடுவில் இடைவெளி இருக்க வேண்டும். நாம் சினிமாவுக்குப் போகிறோம். மூன்று மணி நேரம் நடக்கக்கூடிய அந்தச் சினிமாவிலும் 15 நிமிடம் இடைவெளி விடுகிறார்கள். ஆனால் பிள்ளைகளைப் பெறுவதில் மட்டும் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்.


—பேரறிஞர் அண்ணா

---

தேள் கடிக்கு உடனே குணமளிக்கும் மூலிகை ஒன்று ஒருவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அது இன்னது என்பதை மற்றவர்களுக்குச் சொல்ல மாட்டார். சொன்னால் மருந்து பலிக்காது என்பார்கள். நமக்குத் தெரிந்த வித்தையைப் பிறருக்குத் தெரிவிக்காமலேயே அழிந்துவிடச் செய்வது நம்மிடையே உள்ள சித்தாந்தம்!

—பேரறிஞர் அண்ணா

# இனியவை இருபது



## முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

# 4. சிங்கப்போர்

ரோமாபுரியில் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று (collosseum) என்று கூறப்படும் பேரரங்காகும். அதனைக்காணச் சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வருகின்றனர். அங்கே விளையாட்டுத் திடலுக்கென அமைக்கப்பட்டுள்ள மேடை, போட்டியைப் பார்வையிடுவதற்கெனச் சுற்றிலும் உட்காருவதற்காகக் கட்டப்பட்டுள்ள அரங்கம் ஆகிய இரண்டும் மகத்தானவை. குற்றம் சாட்டப்பட்ட கிறித்துவர்களைச் சிங்கத்துடன் போரிடச் சொல்லி, அவர்களது உயிர்த்துடிப்பையும், ரத்தப் பெருக்கையும், சிங்கங்களின் ஆவேசப் பாய்ச்சல்களையும் கண்டு ரசிப்பதும், மது உண்டு மயங்கிச் சிரிப்பதும் அக்கால மன்னர்களின் விழாவாக இருந்தது அந்த இடத்தில்! அந்தப் பேரரங்கைக் காணும்போது; ''அய்யோ! எத்தனை வாலிபக் குற்றவாளிகள் இந்த இடத்தில் சிங்கத்தின் வயிற்றுக்குள், ரத்தமும் சதையுமாகப் புகுந்தார்களோ—அதிலே ஒரு ரசனையா அந்த அரசர்களுக்கு?'' என்றுதான் நினைக்கத் தோன்றியது. மன்னர்கள் மட்டும் பார்த்து மகிழ்ந்தனர் எனில், அவர்கள் மமதையாளர்கள்—மனிதாபிமானமற்ற கல்நெஞ்சர்கள் என்று எண்ணிடலாம்; ஆயிரமாயிரம் நகரமக்களும் அந்தப் பேரரங்கில் வீற்றிருந்து இளம் உயிர்கள் சிங்கத்தின் பற்களுக்கிடையே சிக்கித் தவிப்பதைக் கண்டு பூரிப்படைவார்கள் எனில், பழைய ரோமாபுரியின் ஆட்டபாட்டச் சேட்டைகளின் வரலாறு பயங்கரமானதன்றோ!

காலப்போக்கில் 13 ஆம் நூற்றாண்டில்தான் அந்தப் பேரரங்கு ரோமாபுரிக்கு ஒரு கோட்டையாகவும் மறுமலர்ச்சிக் காலத்தில் மாதா கோயில்கள் கட்டுவதற்கு மண் போன்ற பொருள்களை எடுக்கும் இடமாகவும் மாறத் தொடங்கியது. பல கிறித்துவத் தியாகிகள் இப் பேரரங்கில் முடிமன்னர்களின் கொடிய தண்டனைக்கு ஆளாகி உயிர் விட்டமையால் அந்தப் பேரரங்கு, போப்பாண்டவர்களால் புனித இடமாகவும் பிற்காலத்தில் கருதப்பட்டது. ஒரு கையில் மது, இன்னொரு கையில் மாது—இரண்டின் சுவையையும் பருகியவாறு பல்லாயிரம் மக்கள் தங்கள் எதிரே சிங்கத்தின் பலமான அடிகளைத் தாங்க முடியாமல் சுருண்டு விழுந்து குருதி கக்கிச் செத்திடும் தன்மையொத்த மனிதர்களைக் கண்டு கும்மாளம் போடும் அந்தப் பெரிய அரங்கத்தின் உயரம் 160 அடிகளாகும். 170 கஜம் குறுக்களவும், 573 கஜம் சுற்றளவும் கொண்டு விளங்குவதாகும். ஒவ்வொரு காட்சிக்கும் ஐம்பதாயிரம் மக்கள் உட்காரத் தக்க இடவசதி உண்டு. எந்த நேரத்திலும், இரவானாலும் பகலானாலும் இந்த அரங்கினைச் சுற்றுலாப் பயணிகள் காணத்தக்க அளவுக்கு இப்போது வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



ரோம் நகராட்சியினர் எங்களை வரவேற்று ரோமாபுரியில் அமைந்துள்ள கோட்டை கொத்தளங்களைக் காண ஏற்பாடுகளைச் செய்தனர். ரோம் கௌன்சில் சார்பாகப் பதக்கமொன்றினை எனக்கு வழங்கி வரவேற்பு நல்கிச் சிறப்புச் செய்தனர். ஓவியங்களும் சிலைகளும் நிறைந்த மண்டபங்கள் பலவற்றைக் கால் வலி தெரியாமல் கண்டு வியந்தோம். இத்தாலியில் பல இடங்களில் காணப்படும் கலைக்கூடங்களில் ஓநாய்ச் சிலையொன்று முக்கியத்துவம் பெறுகிறது.

இத்தாலி நாட்டில் வழங்கிடும் தொன்மை வாய்ந்த கதையின்படி ரோம் நகரம் கி.மு. 754—53 ல் ரோமுலஸ் என்பவனால் உருவாக்கப்பட்டது. இவன்தான் ரோமை ஆண்ட அரசர்களில் முதல் அரசன். அவன் பெயரைச் சூட்டித்தான் அந்த நகரை ரோம் என்று அழைக்கிறார்களாம். அந்த ரோமுலஸ் மன்னன், செவ்வாய்க் கிரகத்திற்குப் பிறந்தவன் என்றும் குழந்தையாக இருக்கும்போது பெற்றோர்களால் கைவிடப்பட்டு ஓர் ஓநாயினால் பாலூட்டி வளர்க்கப்பட்டான் என்றும் அதன் பின்னர் வேடுவன் ஒருவன் அவனை வளர்த்து ஆளாக்கினான் என்றும் கூறப்படுகிறது. நமது பாரதக் கதையில் கர்ணன், சூரியனுக்குப் பிறந்தவன் என்றும் பெற்றவளால் கைவிடப்பட்டு ஒரு தேர்ப்பாகன் எடுத்து வளர்த்தான் என்றும் கூறப்படவில்லையா; அதுபோல ரோமுலஸ் பற்றியும் ஒரு கதை! அவன் ஓநாயிடம் பால் குடித்த சிலைகள்




பல இத்தாலி நாட்டில் காணப் படுகின்றன.

ரோமுலசைத் தொடர்ந்து, ரோமாபுரியின் வரலாற்றைச் சற்றுத் தெரிந்து கொள்வது நல்ல தல்லவா? அந்த நகரத்தில் அது உருவாக்கப்பட்ட நாளில் இருந்து ஏறத்தாழ 240 ஆண்டுகள் முடி யாட்சி நடைபெற்றது. ரோமு லஸ் உட்பட ஏழு மன்னர்கள் அந்த அரசினைப் பரிபாலனம் செய்தனர். கி.மு. 509-ல் மன்னர்களின் கொடுங்கோல் முறையில் சீற்றங்கொண்ட மக்கள், முடியாட்சியின்மீது போர் தொடுத்தனர். மக்கட் பெருங்கடலின் முன்னே, மதுக் கலசமும் மங்கையர் சரசமும் சொர்க்கமெனச் சொக்கிக்கிடந்த மாமன்னர்களின் மமதையும், அதிகாரமும் நின்றிட முடிய வில்லை. ஏழை அழுத கண்ணீர் கூரியவாளாகும் என்ற மொழியின் உண்மை ரோமாபுரியில் செயல் வடிவம் கொண்டு எழுந்தது. முடியாட்சி மூலைக்குப் போய்ச் சுருண்டு கொண்டது. குடியாட் சிக் கொடி பறக்கவிடப்பட்டது. ரோம் நாட்டு வரலாற்றில் இந்த அத்தியாயத்தை ''முடிமன்னர் ஓட்டம்'' என்று தலைப்பிட்டு அழைப்பார்கள். குடியாட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவைகள் ''செனட்'' எனும் பிரபுக்கள் அவை, ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாக அதிகாரிகள் (Consel) ஆகியோர் குறிப்பிடத்தக்க பங்கேற் றனர்.

குடியாட்சியின் வரலாற்றில் நடந்த முக்கியமான நிகழ்ச்சி, அரசியல்—சமூக, பொருளாதார உரிமைகளைப் பெற்றவர்கள்—அவைகளைப் பெருதவர்கள் என்ற இரு சாராரிடையே நடந்த ஒரு போராட்டமாகும். இந்தப் போராட்டம் சட்ட வரம்புக்கு உட்பட்டு அமைதி அடிப்படை யில் நிகழ்ந்தது. வன்முறை துளியும் தலைகாட்டவில்லை. இறுதியில் உரிமையற்றவர்கள் வெற்றிபெற்று இருவர்க்கத்தின ரும் சம உரிமைகள் பெற்றனர். இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோதுதான், ரோம் நகரம் தன் ஆதிக்கத்தை இத்தாலியில் மற்றப் பகுதி களின்மீதும் பரப்பிடும் பணியில் ஈடுபட்டது. லத்தீன்கள், சாம் னைட்டுகள், எட்ரஸ்கர்கள், கிரேக்கர்கள் போன்ற இத்தாலி வாழ்மக்கள் ரோமின் ஆதிக் கத்தை எதிர்த்தனர். அதன் காரணமாக மூண்டெழுந்த போர் 250 ஆண்டுகள் நடை பெற்றது. எல்லா எதிர்ப்புச்





களையும் முறியடித்து ரோமாபுரி, இத்தாலி முழுவதிலும் தன் ஆதிக்கத்தை விரிவாக்கிக் கொண்டது.

ரோமின் ஆதிக்க ஆசை அத்துடன் அடங்கவில்லை. மத்திய தரைக் கடல் பகுதியிலும் தன் செல்வாக்குக் கொடியை ஏற்றி வைக்கக் குதித்தெழுந்தது. அந்தப் பாய்ச்சலைத் தடுக்க அந்தப் பகுதியில் இருந்த பெனிசியர்கள், மாசிடோனியர்கள், சிரியர்கள் ஆகியோர் ஆர்த்தெழுந்தனர். மத்தியதரைக் கடல் அரசுகளுடன் 150 ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய போராட்டத்தின் விளைவாக ரோமாபுரியின் ஆதிக்கச் சக்கரம் அங்கேயும் சுழலத் தொடங்கியது. வெற்றி வெறி தணியவில்லை ரோமாபுரிக்கு! சிசிலி, ஸ்பெயின், கிரீஸ் போன்ற நாடுகளின் மீதும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கியது.

முடிவில் ரோம் ஒரு பேரரசாக மாறியது. அதன் ஆதிக்கக்குடை நிழலில் பல நாடுகள் வாழ்ந்தன. ஆனால் சில ஆண்டுகளுக்கெல்லாம் ஆட்சிமுறையின் சீர்கேடுகள் காரணமாக மக்களிடையே தோன்றிய வெறுப்பு, மாபெரும் புரட்சியாக உருவெடுத்தது.

நூறு ஆண்டு காலம் இந்தப் புரட்சிக் கனல் நீடித்தது. இந்தப் புரட்சி, ரோமாபுரிப் பேரரசில் மாறுதல் பலவற்றுக்குக் காரணமாயிற்று. முதலில் புரட்சிக்குத் தலைமை ஏற்றவர்கள் பாமர மக்களின் நலனில் அக்கறை கொண்ட டைபீரியஸ் கிரேக்கஸ், கயஸ் கிரேக்கஸ் ஆவார்கள். ஆனால் நாளடைவில் தன்னலத்திலும் பதவி வேட்டையிலும் நாட்டங்கொண்டவர்களின் கையில் தலைமைப் பொறுப்புச் சிக்கியதால் புரட்சிகள், பலாத்காரத்தின் மூலமும் படை பலத்தின் மூலமும் வெற்றிகளை ஈட்ட முடியும் என்ற வேண்டாத நம்பிக்கையின் அடிப்படையில் நடைபெற ஆரம்பித்தன—இதன் முடிவு; ரோமானிய அரசின் அதிகாரம், படைத்தளபதிகளின் கைக்கு மாறியதுதான்! இங்கு தொடங்கித்தான் சீசர் போன்றவர்களின் அதிகாரப் பேரரசு வரையில், படை பலங்கொண்ட தளபதிகளின் ஆதிக்கம் வளரலாயிற்று. இன்று இத்தாலிய நாடு மத்தியதரைக் கடலுக்குள் வடமேற்கிலிருந்து தென்கிழக்கு வரையில் 725 மைல் தொலைவுக்குப் பரவியுள்ளது. இந்நாட்டின் அகலம் 80 மைல் முதல் 135 மைல் வரையில் ஆங்காங்கே வேறுபடுகிறது. வடக்குப் பகுதியில் இந் நாட்டின் அகலம் 735





மைல். பிரான்சு, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகள் இத்தாலிக்கு வடக்கில் உள்ள எல்லை நாடுகளாகும். தீபகற்ப நாடாகிய இத்தாலி நாட்டுக் கடற்கரையின் நீளம் சுமார் 2,500 மைல்களாகும். மேற்கில் டைரீனியன் கடல். தெற்கில் அயோனியன் கடல். கிழக்கில் ஏட்ரியாடிக் கடல் இவற்றை எல்லைகளாகக் கொண்டது இன்றைய இத்தாலி. இந்த நாட்டின் வீரவரலாறுகளையும் வீழ்ச்சிக் கட்டங்களையும் அறிந்துகொள்வதும், அறிந்த வரையில் எடுத்துரைப்பதும் என் பயணக் கட்டுரையின் நோக்கமாகவும் இருக்கவேண்டுமன்றோ ?

முடியாட்சி மாறி குடியாட்சி—பிறகு குடியாட்சி மாறி தளபதிகள் ஆட்சி—பிறகு அதிலும் ஒரு வகை மாற்றம்—இன்று வேறு வகையான அரசியல் சூழ்நிலை—இத்தகு கட்டங்களின் சிறப்பு அத்தியாயங்கள் சிலவற்றைத் தொடர்ந்து கண்டிடுவோம்.

(தொடரும்)

## தாய்மொழி படித்தால்தான்....

‘‘தமிழாசிரியர்கள், தலைமை ஆசிரியர்களாக ஆக வேண்டும் என்ற கோரிக்கையைக் கொள்கை பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

ஆங்கிலம் படித்தால்தான் தலைமை ஆசிரியராய் ஆகலாம் என்று இங்கு சொல்லுகிறார்கள்.

மேல் நாடுகளில் அது பெரிய நாடாக இருந்தாலும் சரி—சிறிய நாடாக இருந்தாலும் சரி—தாய் மொழிக்குத் தரப்படும் மதிப்புப் பிற மொழிகளுக்குத் தரப்படுவதில்லை. ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகத் தான் வைத்திருக்கிறார்கள்.

எல்லாத் துறைகளிலும் தாய் மொழி அறிவு பெற்றவர்களே தலைமை வகிக்கிறார்கள். ஆனால், இங்கு, தமிழ் கற்றவர்கள்—தமிழ் மாத்திரம் படித்தவர்கள்—அந்தக் காரணத்தினாலேயே— அவர்களுக்கு நிர்வாகத் திறமையில்லை—கட்டிக் காக்கும் திறமையில்லை என்று கூறப்படுகிறார்கள்.

தமிழாசிரியர்களை விட்டு விடுங்கள். என்னை எடுத்துக் கொள்ளுங்கள். ஆங்கிலத்தில் நான் பட்டதாரியில்லை. தமிழில் கூட—தமிழாசிரியர்கள் வேண்டுமானால் என்னைத் தமிழாய்ந்த தலை மகன் என்று கூறலாம்.

ஆனால், என்னைப் பொறுத்த வரை நான் தமிழில் போதிய பயிற்சி பெற்றேனா என்பது சந்தேகமே.

தமிழில் நான் பெற்ற இந்தப் பயிற்சியை வைத்துக்கொண்டே இந்த நாட்டையே ஆளும் போது, தமிழ் படித்தவர்கள், தலைமையாசிரியர்களாக இருக்கக் கூடாது என்பது எந்த வகையில் பொருத்தமாகும் ?’’

தமிழக முதல்வர்
9–8–70



# வெறுமை அணிகள்

தி.கு.நடராசன்.எம்.ஏ.,பி.டி.

இரவுத் தூரிகை இழுக்கும் திரைகள்
எங்கும் இருந்தும் எழில்நிலா இல்லை
சரிகை மலர்கள் சாயம் இருந்தும்
சந்தம் சிந்திடத் தந்திர வண்டில்லை

கனவு ராகங்கள் காட்டிடைப் படித்தும்
கற்பனைச் சிறகுகள் கலையிட வில்லை
மனித அலைகள் மடியிடைப் பரந்தும்
புனித மண்ணின் புத்துயிர் இல்லை

வசந்த மேடைகள் வடிக்கும் சிற்ப
வண்ண மிருந்தும் வாழ்வே இல்லை
அசையும் கப்பல் அழகே இருந்தும்
அசைக்க ஏறும் ஆட்கள் இல்லை

ஆசைத் தேதிகள் அரும்பி விரிந்தும்
ஓசை மேனிகள் உறவிட வில்லை
வாசப் பந்தல் மலர்கள் இருந்தும்
பூசும் அழகுப் பொலிவுகள் இல்லை


தேர்கள் ஓடும் தெருக்கள் இருந்தும்
தெய்வம் பார்த்துத் தேடுவார் இல்லை
சீர்கள் மிதக்கும் செய்யுள் இருந்தும்
சித்திர யாழில் சேர்ப்பார் இல்லை

விருந்து படைக்கும் விழாக்கள் இருந்தும்
விழுந்தவை ஏற்கும் விழைவுகள் இல்லை
வருந்தும் கண்கள் வடிவ மிருந்தும்
வடிக்கும் இதய வரிகள் இல்லை

உயர்ந்து விரிந்தே உதவும் உலகில்
உலவும் எல்லா உயர்பொருள் அனைத்தும்
அயர்ந்த மூச்சின் அசைவுகள் என்னும்
அணைப்பில் வெறுமை அணிகளே மிஞ்சும்

ஆளாய் நம்மை ஆக்கியோன் நினைவே
ஆழநம் உணர்வை அடைத்ததாம்; ஏனெனில்
மீளாத் துயிலில் மேவிய காரணம்
மேதினி முழுவதும் வெறுமையே நிறைந்ததே

# மற்றுமொரு சுரங்க வழி



சென்னை மாநகரம் கடந்த சில ஆண்டுகளாக வியக்கத் தகுந்த அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

அசோக்நகர், அண்ணநகர், இந்திராநகர், சாஸ்திரிநகர் என்று விரிந்து—பரந்து—வளர்ந்து வருகிறது. குறைந்த—நடுத்தர வருமானம் உள்ள பல்வேறு வகையினரான மக்கள் இப்பகுதியில் வாழ்கிறர்கள். தமிழக வீட்டுவசதி வாரியம் இப்பகுதியில், மக்களுக்கு வீடு கட்ட மனைகள் வழங்கியும் தனியாக வீடுகள் கட்டிக்கொடுத்தும் பணி புரிந்து வருகிறது.

சமீப காலத்தில், இதுபோல் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் பகுதி அசோக்நகர் பகுதியாகும்.

சென்னை நகரின் மேற்கில் இருக்கும் இப்பகுதி மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

இங்கு, கோடம்பாக்கம் புதூர் முதற் பகுதி—அதாவது அசோக் நகர், கோடம்பாக்கம் புதூர் இரண்டாம் பகுதி, ஜாபர்கான் பேட்டை, மேட்டுப்பாளையம், மேற்கு மாம்பலம் ஆகியவை உள்ளன.

தியாகராயநகரில் இருந்து மேலே கூறப்பட்ட பகுதிகளைப் பிரிப்பது ரயில் பாதையாகும்.

நகரில் ஆங்காங்கே பணியாற்றும் அலுவலர்களும், கல்லூரிகள்—பள்ளிகளுக்குச் செல்லும் மாணவ மாணவிகள் அனைவரும் இந்த ரயில் பாதையைக் கடந்துதான் வரவேண்டியுள்ளது.

இந்த ரயில் பாதையைக் கடக்கத் தியாகராயநகர் ரயில் நிலையத்தின் வடக்கில் இரண்டும், தெற்கில் இரண்டுமாக மொத்தம் நான்கு ''லெவல் கிராசிங்'' பாதைகள் உள்ளன.

வடக்கில் ரங்கராஜபுரம் சாலையும், துரைசாமி ரோடும், தெற்கில் மாட்லி சாலையும், கண்ணம்மாபேட்டை ரோடும் (சுடுகாட்டு ரோடு) இருக்கின்றன.

நகரின் முக்கிய இடங்களுக்கு வருகிறவர்கள் இவற்றின் வழியாகத்தான் வரவேண்டும். ''லெவல் கிராசிங்'' மூடிவிட்டால் சில நேரங்களில் முக்கால் மணி நேரம் வரை காத்திருக்க வேண்டும். பாதையின் கதவு மூடியிருந்தால் சாலையின் இரு பக்கத்திலும் வரிசை வரிசையாகக் கார்களும், பேருந்துகளும் நிற்கும்.

கதவு திறக்கப்படும்போது ஏற்படும் நெருக்கடி காரணமாகப் பல சமயங்களில் விபத்துக்கள் ஏற்பட்டதுண்டு.

தாமதம் காரணமாகவும், விபத்துக்கள் காரணமாகவும் உடனடியாக மேற்கு மாம்பலத்திற்குச் செல்லும் வழியில் ஒரு மேம்பாலமோ, அல்லது சுரங்கப் பாதையோ கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மேலே கூறப்பட்ட நான்கு ''லெவல் கிராசிங்'' களில் துரைசாமி ரோடில் உள்ளதில்தான் அதிகப் போக்குவரத்து உண்டு. அந்த இடத்தில் ரயில் பாதை அருகில் உள்ள பகுதிகளின் நில மட்டத்தை விட உயரமான இடத்தில் உள்ளது. ஆகவே இந்த இடத்தில் மேம்பாலம் கட்டுவதைவிடச் சுரங்கப் பாதை கட்டுவது சிக்கனமானது என்று முடிவு செய்யப்பட்டது.

கோடம்பாக்கம் ஆர்க்காடு சாலையில் உள்ள மேம்பாலத்தைப் போல் கட்டலாமா என்பது பற்றி ஆலோசனை செய்தாலும், இப்பகுதியில் நில ஆர்ஜிதம் செய்வதற்கு அதிகத் தொகை செலவு செய்ய வேண்டியிருந்தது. அதுமட்டுமல்லாமல் அங்கிருந்து முக்கால் மைல் தூரத்தில் கோடம்பாக்கம் மேம்பாலமும் உள்ளது. ஆகவே துரைசாமி ரோடில் சுரங்கப்பாதை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி 9 அடி உயரம் உள்ள சுரங்கப்பாதை அமைப்பதற்கு 12 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டுத் தமிழக அரசு அதற்கு ஒப்புதல் அளித்தது.

ஒன்பதடி உயரம் இருப்பதன் காரணமாகப் பேருந்துகள், லாரிகள் முதலியன இந்த வழியாக அனுமதிக்கக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனல், அந்தப் பகுதி மக்கள், 9 அடி உயரத்தை 12 அடியாக உயர்த்தி அதிகப் போக்குவரத்

துக்கு வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்படி, லாரிகளைத் தவிர வேறு எல்லா வாகனங்களும் அதன்வழி செல்ல அனுமதிக்க முடிவு செய்யப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட அத்திட்டத்தின்படியேதான் தற்போது சுரங்கப்பாதை கட்டப்பட்டு வருகிறது.

இந்தச் சுரங்கப்பாதைத் திட்டத்திற்காக எதிர்பார்க்கப்படும் செலவு 25 லட்சம் ரூபாய்.

இப்பாதை 34 அடி அகலம் இருக்கும். வாகனப் போக்குவரத்துக்கு 24 அடியும், இரு பக்கத்திலும் மக்கள் நடந்து செல்வதற்காக 5 அடி அகலப்பாதையும் இரண்டும் இருக்கும். அமைக்கப்பட விருக்கும் சுரங்கப் பாதையின் அடியில் இருந்து சுமார் ஓர் அடி உயரத்தில் நடைபாதை இருக்கும்.

மிக வேகமாக நடந்து கொண்டிருக்கும் இந்த வேலை அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முடிவடையும்.

பெரும்பெரும் திட்டங்களை எல்லாம், விரைவாகச் செயல்படுத்திவரும் தமிழக அரசு, இந்தச் சுரங்கவழித் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்ற நினைப்பதில் வியப்பில்லை. இந்தத் திட்டம் மட்டும் நிறைவேறிவிட்டால் ஆயிரக்கணக்கான மக்களின் அவதி குறையும்; சாத்தப்பட்ட கதவுகளுக்கிடையே நெடுநேரம் நின்று, ஏக்கத்துடனும் சோர்வுடனும் காத்துக்கொண்டிருக்கும் தொல்லை மறையும் என்பதில் ஐயமில்லை.

துரைசாமி ரோடு சுரங்கப் பாதையைப் போலவே கண்ணம்மா பேட்டையிலும் ஒரு சுரங்கப்பாதை கட்டப்படவிருக்கிறது.

இதற்கு 25 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவாகும். இது சம்பந்தப்பட்ட வேலைகள், துரைசாமி ரோடு சுரங்கப் பாதையில் ரயில்வே இலாகாவினரின் வேலைகள் முடிந்தபின் துவக்கப்படும்.

# சரிதம் படைக்கும் சரசுவதி மகால்



"தஞ்சை சரசுவதி மகால் உலகத்திலே உள்ள நூலகங்களில் மிகப் பெரியதும், மிகவும் முக்கியமானதும் ஆகும்"—என்கிறார் டாக்டர் ஏ. சி. பர்னெல் என்ற ஜெர்மன் நாட்டு அறிஞர்.

அங்கு மொத்தம் 40,000க்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் ஏட்டுச் சுவடிகளும் உள்ளன.

அவற்றில் 30,000 சமஸ்கிருத மொழியில் உள்ளவை. 5,000 மராத்திய மொழியிலும், 2,500 தெலுங்கு மொழியிலும், 2,000 தமிழிலும் 500 பிற மொழிகளிலும் உள்ளன. பிற மொழி நூல்களில், லத்தின், பிரெஞ்சு, இத்தாலியன், ஜெர்மன், கிரேக்க மொழி நூல்கள் அடங்கும்.

கி. பி. 9-ம் நூற்றுண்டு முதல் உள்ள ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், நூல்கள் ஆகியவை இங்கு உள்ளன. 12-ம் நூற்றுண்டைச் சேர்ந்த குறளைப் பற்றிய சுவடி தமிழிலுள்ளவற்றில் முக்கியமானதும் தொன்மையானதுமாகும்.

இந்த நூல்களின் பட்டியல்களை 1884-ம் ஆண்டில் முதல் முதல் தயாரிக்கத் தொடங்கியவர் டாக்டர் பன்னெல் ஆகும். அவர் தயாரித்த முதல் பட்டியல் லண்டன் மாநகரில் வெளியிடப்பட்டது.

1949 முதல் 1964 வரை சுமார் 130 கையெழுத்துப் பிரதிகள் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இதற்கான நிதி உதவியைத் தமிழ்நாடு அரசும், மத்திய அரசும், டெல்லியிலுள்ள சங்கீத நாடக சங்கம் போன்ற நிலையங்களும் அளித்துள்ளன.

இங்குள்ள ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றியவை:

(1) வேதங்கள், வேதங்களின் தத்துவம், காவியங்கள்.

(2) புராணங்கள், இதிகாசங்கள்.

(3) இசை, நுண்கலைகள், சிற்பம்.

(4) மந்திரம்.

(5) சித்த-ஆயுர்வேத வைத்திய நூல்கள்.

வைத்தியம் சம்பந்தப்பட்டவை மட்டும் சுமார் 2,000 நூல்கள் இங்கு உள்ளன. தமிழ், தெலுங்கு, மராத்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இவை உள்ளன.

நீரிழிவுச் சிகிச்சை, சுவாசகாச சிகிச்சை (ஆஸ்துமா), க்ஷயம் உளமாந்தை சிகிச்சை, குன்ம ரோக (வயிற்றிலுண்டாகும் சகல நோய்களுக்குமான) சிகிச்சை, விஷ வைத்தியம், அகஸ்தியர் 2,000 (பண்டைக் கால ஆயுர்வேத-சித்த வைத்திய முறைகள் நிறைந்த பழைய அபூர்வ ஓலைச் சுவடியினின்று பதிப்பிக்கப்பட்டவை), மாடுகள், குதிரைகள் இலக்கணமும் வைத்தியமும் போன்ற, பதிப்பிக்கப்பட்ட வைத்திய நூல்கள் இவற்றில் அடங்கும்.

'தொல்காப்பியம்— சொல்லதிகாரம், நச்சினார்க்கினியம்', இலக்கண நூலும், நாட்டிய சாஸ்திர சங்க்ரஹம், நாட்டியத்திற்கான சாகித்திய வகைகள், பரதார்ணவம் போன்ற நாட்டிய சாத்திரம் பற்றிய நூல்களும், தாளசமுத்திரம், ராக ஆலாபனைகளும் லயங்களும் போன்ற இசை நூல்களும், பின்னல் கோலாட்டம் என்ற கோலாட்ட வகைகள் பற்றிய நூலும், மானசாரம், சிற்பரத்தினம், மயமதம் போன்ற சிற்ப-கட்டடக் கலை நூல்களும் வெளியிடப்பட்ட பிற நூல்களில் சில.

சுமார் 1 ரூபாயிலிருந்து 15 ரூபாய் வரை நூல்களுக்குத் தகுந்தபடி பல்வேறு விலைகளில் உள்ளன, இந்த நூல்கள். சிறப்புச் செயலாளர் சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு இவைகளைப் பெறலாம்.




தண்ணார் தமிழகந்தான் தந்த தவப்புதல்வா !
அண்ணாவே ! எங்கள் தமிழமுதே—கண்ணாக
இந்நாட்டைக் காத்தவனே ! எங்கள் தமிழரசே !
எந்நா டடைந்தாய்நீ இன்று?

முத்தமிழின் உறைவிடமே ! மூவாத் தமிழுருவே !
சித்த மெலாம்கவர்ந்த செந்தமிழே—இத்தரையில்
'அண்ணா' 'அண்ணா'வென்றே அன்புடனே யாமழைக்கும்
கண்ணாவாய் உள்ளம் களித்து.

மேடையிலே ஏறிவிட்டால் மெச்சுமுன் சொல்கேட்டு
வாடை மழைகருதார் மாந்தர்தாம்—தேடுகின்ற
பூத்தேனில் தோயும் பொறிவண்டு போல்வாரே
ஏத்துமுன் சொற்குண்டோ ஈடு ?

கொள்கையி லேமாறு கொண்டிருந்த பல்லோரும்
உள்ளம் மறந்துன் உரைகேட்பர்—வள்ளலே !
மோனை யுடனெதுகை முந்திவந்தே உன்மொழியில்
தேனமுதாய்ப் பாய்ந்திடுமே சேர்ந்து.

நாடகமும் ஆடியிந்த நாட்டாரை மாற்றுவித்த
ஆட லரசேயெம் அண்ணாவே—வாடாத
சின்னக் கதையால் சிரிக்கவே வைக்கின்ற
உன்னழகுக் குண்டோவோர் ஒப்பு?

ஏறாத மேடையெதும் இந்நாட்டி லுண்டோநீ ?
கூறாத நற்கருத்தும் உண்டுகொலோ !—மாறாத
தேனருவி என்பேனோ ! சிந்தையெலாம் தித்திக்கும்
வானமுதம் என்பேனோ மற்று.

புன்னகையாய் ! இன்சொல்லாய் ! பொங்கும் பகையிடமும்
நன்னயமாய்ப் பேசுகின்ற நாவுடையாய்—ஒன்னாரும்
நாணும் படிநடக்கும் நல்ல செயல்அண்ணா
காணுமோ மீட்டுமுனைக் கண் ?

பாசொலி




செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப்பிள்ளை போல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும்கூட, வயலிலே அவன் பட்ட கஷ்டத்தைக் கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டுத் தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டு இருக்கிறதா என்று கவனித்து விட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும் போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால்; கரியனிடம் (அவனுடைய முதல் பையன்) காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கறையும் காட்டுகிறாரே, என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

"குப்பி! ஏதாச்சும் மாடு கீடு வந்து வாழையை மிதிச்சு விடப் போகுது. ஜாக்கிரதையாகக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று—ஆமாம் செவ்வாழைன்னு சாமான்யமில்லே; குலே, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும்—ரொம்ப ருசி—பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும்; பசியாறிப் போகும்'' என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள்—அதுமட்டுமா — பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம் இதே பெருமையைத்தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப் பற்றிப் பேசிக் கொள்ள முடியும்—அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றிப் பேசமுடியும்? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்த பையன், கரியன், செவ்வாழைக்குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்—என்று சொல்லுவான்.

"ஒண்ணுகூட எனக்குத் தர மாட்டாயாடா— நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன், கவ

னமிருக்கட்டும்—வறுத்த வேர்க்கடலை கொடுத் திருக்கிறேன், கவன மிருக்கட்டும்'' — என்று எதிர்க் குடிசை எல்லப் பன் கூறுவான்.

கரியனின் தங்கை, காமாட்சியோ கண்ணைச் சிமிட்டிக்கொண்டே ''உனக்கு ஒரு சீப்புன்னு, எனக்கு இரண்டு, தெரியுமா?—அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு—'' என்று குறும் பாகப் பேசுவாள்.

மூன்ருவது பையன், முத்து, ''சீப்புக் கணக்குப் போட்டுக் கிட்டு ஏமாந்து போகாதீங்க—ஆமா—பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துடுவாங்களோ, யாரு கண்டாங்க'' என்று சொல்லு வான்— வெறும் வேடிக்கைக்காக அல்ல—திருடியாவது மற்றவர்களை விட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்து விடுவது என்று தீர்மானித்து விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம், வயலில், பண்ணை மேனேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ் வளவையும், சகித்துக் கொள் வான்—செவ்வாழையைக் கண்ட தும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ் வாழையைக் காட்டித்தான் சமா தானப்படுத்துவான்! துஷ்டத் தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத் தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப் பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோட னுக்கு! பண்ணை வீட்டுப் பிள்ளை கள், ஆப்பிள், திராட்சை, தின்ன முடிகிறது—கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ் வாழையைத் தந்து தன் குழந் தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ் வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும் படிச் செய்தது. உழ வன் செங்கோடனிடம், எவ்வ ளவு பாடுபட்டாலும், குழந்தை களுக்குப் 'பழமும் பட்சணமும்' வாங்கித்தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும்—குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! உழைப்பின் பெரும் பகுதி வயலிலே செலவாகிறது—அதன் பலனில் மிகப் பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்து விடுகிறது. இந்தச் 'செவ் வாழை' ஒன்றுதான், அவன் சொந்தமாக — மொத்தமாக, பலன் பெறுவதற்கு உதவக் கூடிய உழைப்பு! இதிலே பங்குபெறப் பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்ச மிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே, பாடு பட்டுக் கண்ணைப்போல வளர்த்து வரும் செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான்பட்ட பாட்டுக்கு உரிய பலனைத், தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனத்திலே, தெளிவாகத் தோன்றிய கருத் துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும்; செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று, வளர்ந்தது, கள்ளங் கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோட னின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான். மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டு களுக்கும், ஏற்படும் பிரேமை போல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம், பாசம் ஏற்பட்டு விட்டது.

''இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?''—கரியன் கேட்பான், ஆவலுடன், செங் கோடனை.

''இரண்டு மாசமாகும்டா கண்ணு'' என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று—செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையைப் பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியார், தமது மருமகப் பெண் முத்து விஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைரமாலையைக்கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்க மாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை முத்துவிஜயாவின், வைரமாலையைவிட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று. குலை முற்ற முற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ, அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும், ஓங்கி வளரலாயின. "எப்போது பழமாகும்?" என்று கேட்பாள் பெண். "எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?" என்று கேட்பான் பையன். செங்கோடன் பக்குவமறிந்து தரவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப்பலனை நாம் பெறப் போகிறோம்—இடையே தரகர் இல்லை—முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும், முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது—அவர் எடுத்துக்கொண்டது போக மீதம்தான் நமக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ணவேண்டும் — அது தானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்!

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான்—பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால்; மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது—பழம் தரவேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, 'அச்சாரம்' கொடுத்தனர் பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம், இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப் பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும். செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது — ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால், பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது. எனவே, பலன் நமக்குக் கிடைக்கிறது—இது போல நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! அப்படி ஒரு காலம் வருமா? உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம்—பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா! என்றெல்லாம் கூட இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனத்தில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர் தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில்அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'குருக்க'ளிடம் சொல்லிவிட்டார். கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டுப் 'பட்டியல்' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும்போது, 'பழம் தேவை என்று தோன்றாமலிருக்குமா? இரண்டு சீப்பு வாழைப் பழம் என்றார் பண்ணையார்.

"ஏனுங்க பழம்—கடையிலே நல்ல பழம் இல்லை—பச்சை நாடன்தான் இருக்கு" என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப் பிள்ளை.

"சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்?— வேறே நல்ல பழம் எங்கே இருக்கு!" என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், "நம்ப செங்கோடன் கொல்லையிலே, தரமா ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க. அதைக் கொண்டுக்கிட்டு வரலாம்" என்றான். "சரி" என்றார் பண்ணையார்!

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அவனுடைய இன்பக் கனவு! உழைப்பின் விளைவு! குழந்தைகளின் தூகலம்!!

அதற்கு மரண ஓலை தயாரித்து விட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்துச் செங்கோடன் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து

## நாடும் வீடும்....

"வயல்களிலே கதிர் குலுங்கிடின், சர்க்கார் அலுவலகங்களில் மகிழ்ச்சி துள்ளும். தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும் நிம்மதியும் கிடைத்து உற்பத்தி பெருகிடின் நாட்டு நிலை உயர்ந்திடும். அங்காடியிலுள்ளோர், கொள்வன கொடுப்பன என்பவை நேர்மையின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும் என்று இருந்திடின், அகவிலையும் பதுக்கலும் அழிந்துபடும். பொது மக்களின் வாழ்வு சீர்படும். நாட்டின் நிலை உயர்ந்திட மாணவ மணிகள் கல்விக் கூடங்களில் பயிற்சி பெற்றிடின் நாடு மேம்பாடடையும்; இவை எல்லாவற்றின் கூட்டே ஆட்சி. சில மண்டபங்களிலே மட்டும் செய்யப்படுகிற காரியமல்ல ஆட்சி. நாட்டு ஆட்சி, வீட்டுக்கு வீடு காணப்படும் பண்பைப் பொறுத்திருக்கிறது."

பேரறிஞர் அண்ணா

வானொலிப் பேச்சு 15--3--67

வந்த அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது, குழந்தைகள், செவ்வாழையைப்பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று—நாக்குக் குழறிற்று—வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பித் தொண்டையில் சிக்கிக்கொண்டன.



மாட்டுப் பெண்ணுக்குப் பிறந்த நாள் பூஜை—என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை—அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச்செய்த ஆசை—இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல்—எனினும் எதைத்தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை, அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினால், முடியாது என்று சொல்லி விட்டாயே! அவருடைய உப்பைத் தின்றுபிழைக்கிறவனுக்கு இவ்வளவு நன்றிகெட்ட தனமா? கேவலம் ஒரு வாழைக் குலை அவருடைய அந்தஸ்துக்கு இது ஒரு பிரமாதமா! என்று ஊர் ஏசுகிறதுபோல் அவன் கண்களுக்குத் தெரிகிறது.

“அப்பா! ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான்கூடத் தான் தண்ணீர் பாய்ச்சினேன், மாடு மிதித்துவிடாதபடி பாதுகாத்தேன்—செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும்; கல்கண்டு போல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய் அப்பா! தங்கச்சிக்குக் கூட, ‘உசிர்’ அந்தப் பழத்திடம்; மரத்தை அண்ணாந்து பார்க்கும் போதே, நாக்கிலே நீர் ஊறும்; எங்களுக்குத் தருவதாகச் சொல்லி விட்டு, இப்போது ஏமாற்றுகிறாயே! நாங்கள் என்னப்பா, உன்னைக் கடையிலே காசுபோட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித்தரச் சொன்னோம்? நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா!” என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக் கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரிலே நின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். ‘அப்பா குலையை வெட்டப்போறாரு — செவ்வாழைக்குலை’ — என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின; செங்கோடனின் கண்களிலே நீர்த் துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான் - உள்ளே கொண்டு வந்தான் — அரிவாளைக் கீழே போட்டான்—‘குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்’ என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். ‘‘கண்ணு! இந்தக் குலை நம்மஆண்டைக்கு வேணுமாம்; கொண்டு போகிறேன்—அழாதீங்க—இன்னும் ஒரு மாசத்திலே பக்கத்துக் கண்ணு மரமாகிக் குலை தள்ளும், அதை உங்களுக்குக்கட்டாயமாகக் கொடுத்துவிடறேன்’’ என்று கூறிக்கொண்டே வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தையின் அழுகுரல், மனத்தைப் பிளப்பதற்குள்!

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்குவர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான்—அவன் மனத்திலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையைச் செல்லப்பிள்ளை போல் வளர்த்து, என்னபலன்..! அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல—ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! செங்கோடனுக்கு....? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான்—எத்தனை இரவு அதைப்பற்றி இன்பமான கனவுகள்—எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசைகாட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கறை எத்துணை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே ஒரு சீப்பு செவ்வாழைப்பழத்தை வைத்துக் கொண்டு, அன்னநடை நடந்து அழகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றாள்.

கடையிலே, செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப் பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பு முதலிலேயே தீர்த்துவிட்டான்—அவன் விற்றான் கடைக்காரனுக்கு!—அதன் எதிரிலே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! ‘‘பழம் ஒரு அணாடா, பயலே—காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமோ?—போடா’’ என்று விரட்டினான், கடைக்காரன். கரியன் அறிவானா பாவம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாவம்; எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்கும் என்று! பழம் இருக்கிறது, கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொறித்துக் கொண்டே! செங்கோடன், கொல்லைப்புறத்திலிருந்து வெளியே வந்தான்—வாழை மரத்துண்டுடன்.

‘‘ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?’’ என்று கேட்டான் கரியன்.

‘‘இல்லேடா, கண்ணு; நம்ம பார்வதிப் பாட்டி செத்துப் போயிட்டா—அந்தப் பாடையிலே கட்ட’’ என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக்காட்டிச் சொன்னான்.

‘எங்க வீட்டுச் செவ்வாழைடா’ என்று.

‘‘எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழை. குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்துவிட்டோம்—மரத்தை வெட்டிப் ‘பாடை’யிலே கட்டிவிட்டோம்’’ என்றான் கரியன்.

பாவம்! சிறுவன் தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் ‘செவ்வாழை’ தொழிலாளர் உலகிலே சர்வசாதாரணச் சம்பவம் என்பதை!

# சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும்...



செங்கதிரோன் தன் சிவந்த கரங்களினுல் உலகையே வாரி அணைத்துக்கொண்டிருந்தான். காலை இளம் வெய்யிலில் ஏகாம்பரநாதர் கோயில் கோபுரங்கள் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தன. வானளாவிய கோபுரங்கள்..நீண்ட பெரிய அகலமான சாலைகள்.. பெரிய பெரிய கட்டடங்கள்.. சுற்றிலும் பச்சைப்பசேலென்ற வயல்கள் மரகதப்படுதா விரித்துக்கொண்டிருந்தன. பல்லவப் பேரரசின் தலைநகராக விளங்கி, வரலாற்றில் கீர்த்திமிக்க புகழேடுகளைத் தனது சொந்தமாக்கிக்கொண்ட 'கல்வியில் கரையிலாத காஞ்சி' மாநகர எல்லையில் வண்டி நுழையும்பொழுது, 'அண்ணன் பிறந்த மண்' என்ற உணர்வு நம்மை அறியாமலேயே ஏற்படுகிறது! நம்மையறியாமலேயே நம் கரங்கள் கூப்புகின்றன!

முதலில் போன ஊர் அய்யம்பேட்டை. காஞ்சியிலிருந்து இரண்டு மைலில் உள்ளது. இரண்டாயிரம் தறிகள் இவ்வூரில் உள்ளன. இவ்வூர் பூராவுமே நெசவாளர் குடும்பங்கள்தான்; குடும்பம் பூராவுமே நெய்யும் தொழில்தான்! பரம்பரை பரம்பரையாக நெசவுத் தொழிலில்தான் ஈடுபட்டுள்ளார்கள். ஊரிலிருப்பவையெல்லாம் சின்னச் சின்ன வீடுகள். இச் சின்ன வீடுகளிலிருந்துதான் தமிழகத்திற்கே அழகூட்டும் கைத் தறிச் சேலைகள், படுக்கை விரிப்புகள், எல்லாமே தயாராகின்றன! நெசவாளப் பெருங்குடி மக்கள்- நெசவுத் தொழிலையே நம்பியிருப்பவர்கள் — அவர்களுக்கு என்ன வருமானம் வருகிறது தெரியுமா? தறி வேலையில் குடும்பமே வேலை செய்தாலும் மாதம் ரூ. 150 அல்லது 200 தான் வருகிறது.

'' சொந்தத் தறி வைத்திருப்பவர்கள் பாடு, ஏதோ பரவாயில்லை. என்னதான் கஷ்டப்பட்டாலும் தரித்திரம் தீரலே. . வருமானம் போதவில்லை. இப்ப எவ்வளவோ பரவாயில்லை. ஒரு மாதிரியா காலத்தை ஓட்டுறோம்..'' என்கிறார் அய்யம்பேட்டை நெசவாளியான முனிப்பெருமாள்.

'' பரம்பரை பரம்பரையாக உலகமே வியந்து பாராட்டும் இந்த நெசவாளப் பெருமக்களின் வாழ்வில் இன்னும் ஏற்றம் ஏற்படவேண்டியது மிக மிக நியாயமானதாகும்'' என்ற எண்ணம் நம் மனத்துள் ஏற்படுகிறது.

'' இதுதான் பயிற்சி நிலையம்'' என்கிறார் நண்பர்.

சின்னக் கட்டடம், ஒரு வீடு மாதிரி இருக்கிறது. முன்னால் '' நவீன நெசவுப் பயிற்சி நிலையம் —தமிழக அரசு உதவி—துவக்கம் 15-2-1970'' என்ற பெயர்ப் பலகை காணப்படுகிறது.

வண்டி வந்து நிற்கவே சிறு கூட்டமே கூடிவிடுகிறது. எல்லாமே நெசவாளர் குடும்பங்கள்!

'' எத்தனை பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது ?....விவரம் கூற முடியுமா ?....''

பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கும் திரு சுப்பிரமணியம் கூறுகிறார் :

'' இந்தப் பயிற்சி நிலையம் 15-2-1970-லிருந்து செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் இப்பொழுது 30பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் ரூ. 100 உதவித் தொகை, பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 45 நாட்கள்! பயிற்சி முடித்தோருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

''புடவை இரகங்கள் இங்கு நெய்யப்படுவதில்லை. மேஜை விரிப்புகள், துண்டுகள், சர்ட்டிங்குகள், கோட் துணிகள் போன்ற இரகங்களில் நெய்வதற்குப்பயிற்சி அளிக்கப்படுகிறது.... வாங்குகின்றவர்களின் இரசனைக்கேற்ப, காலத்திற்கேற்ற டிசைன்கள் கைத்தறியில் தயாரிக்கப் பயிற்சி அளித்தலே இத் திட்டத்தின் முக்கிய நோக்கம். இதுவரையில் மூன்று பிரிவுகளுக்குப் பயிற்சி அளித்தாகிவிட்டது. இங்கு 10 தறிகள் உள்ளன. ஒவ்வொரு தறிக்கும் 3 பேர் என்று 30 பேருக்கு ஒரு பிரிவில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சான்றிதழுடன் பயிற்சி முடிந்தவர்களுக்குத் தறி ஒன்றும் கொடுக்கிறோம். அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு வீட்டில் நெய்கிறார்கள். நல்ல தேர்ந்த நெசவ

வாளி என்றால் ஒரு நாளைக்கு இரண்டு பெட்ஷீட்டுகள் நெய்ய முடியும். ஒரு நாளைக்கு 6 ரூபாய் சம்பாதிக்கலாம். ஒரு தறியின் விலை 400 ரூபாயாகிறது. இதில் 75 சத விகிதத்தை மானியமாகவும், 25 சத விகிதத்தைக் கடனாகவும் அரசு வழங்குகிறது. தமிழகத்தில், சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் 15-2-1970 முதல் இத் திட்டம் தொடங்கப்பட்டுச்செயல் பட்டுவருகிறது. இப் பயிற்சி நிலையத்தில்பயிற்சி யளிப்போர் (Instructor) சேலத்தில் அகில இந்தியக் கைத்தறிபோர்டின் கைத் தறித் தொழில் நுணுக்கப் பள்ளியில் (Institute of Handloom Technology) பயிற்சிபெற்றவர்கள் ..''

அய்யம்பேட்டை நெசவாளப் பெருமக்களிடமிருந்து பிரியா விடை பெற்றுக்கொண்டு காஞ்சிபுரம் திரும்புகிறோம்.




செந்தமிழ்க் காஞ்சிக் கடைத் தெரு....உலகப் புகழ்பெற்ற காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண டிசைன்களில் — மாதர்களுடைய உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும் அங்காடி ! பணம்தான் வேண்டும் வாங்குவதற்கு!

திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினுள் நுழைகிறோம். கடை நிர்வாகி கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த திரு. சிவலிங்கம் அன்புடன் வரவேற்கிறார் ! வந்த காரியத்தைச் சொல்கிறோம். கடையில் தலைக்கு மேலே அண்ணா படம் ! அந்த மேதையின் கண்களிலே உள்ள ஒளி நம்மை மெய்சிலிர்க்கவைக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்கள் படத்தின் கீழே பொன்னெழுத்துக்களில் பொறிக்கப் பட்டு மனத்திற்கு நிறைவு தருகின்றன.

''பெரிய சொசைட்டிகளாக எங்கள் சொசைட்டி போல் பட்டு நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்கள் கீழ்க்கண்டவை காஞ்சிபுரத்தில் உள்ளன. (1) காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (2) வரத ராஜ சுவாமி கூட்டுறவுப் பட்டு நெசவாளர் சங்கம், (3) காமாட்சி அம்மன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (4) முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (5) பல்லவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (6) காஞ்சிபுரம் சில்க் சொசைட்டி, (7) காஞ்சிபுரம் பட்டு மார்க்கெட்டிங் சொசைட்டி........காஞ்சிபுரத்திலும் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் பட்டுத் துணிகள் நெய்யமட்டும் மொத்தம் 10,000 தறிகள் உள்ளன. கூட்டுறவுத் துறையில் மட்டும் 2,000 தறிகள் உள்ளன. இதே மாதிரி 15 சங்கங்கள் நூல் துணிகளுக்கென்றே இயங்குகின்றன....''

மிக உயர்ந்த ஒரு பட்டுப் புடவையை எடுக்கிறார் சிவலிங்கம்.. ''இதோ பாருங்கள், இதன் விலை சுமார் 1,175 ரூபாய். காஞ்சிபுரத்தில் மிக உயர்ந்த விலையுள்ளசேலைகளில் இதுவும்ஒன்று.''

கண்ணைப் பறிக்கிறது. சொன்ன விலை கூட நம் காதில் படவில்லை. புடவையின் வனப்பு நம்மைச் சொக்க வைக்கிறது...!

''அது சரி.. காஞ்சிபுரத்தில் நெய்யும் பட்டுச் சேலைகளுக்கு மட்டும் என்ன இப்படித் தனிப் புகழ்? என்ன காரணம்?''

''அதுங்களா.. முக்கியமாக மூன்று காரணங்களைச் சொல்லலாம் : (1) வண்ணச் சேர்க்கை, (Colour Combination) (2) சீரிய தொழில் நுணுக்கம் (High Craftsmanship) (3) நீண்ட நாட்கள் உழைத்தல் (Durability) இங்கு கிடைக்கும் தண்ணீர் கூட ஒரு காரணம் என்று சொல்கிறார்கள்.....

''ஆனால் இதில் ஒரு விசேஷம். பட்டுப்புடவை நெய்வதற்கான மூலப் பொருள்கள் ஒன்றும் காஞ்சியில் கிடைப்பதில்லை. தேவைப்படுகிற பட்டு நூல் மைசூரிலிருந்துதான் வருகிறது. சரிகை சூரத்தில்தான் கிடைக்கிறது. இருந்தும், காஞ்சியில் தான் இத்தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. வெளி நாடுகளுக்குக்கூடப் பட்டுச் சேலைகள் அனுப்பப்படுகின்றன. ஜப்பானில் நடைபெறும் எக்ஸ்போ 70-க்குக் கூட 100 புடவைகள் நாங்கள் அனுப்பியுள்ளோம்...''

பார்வையாளர் புத்தகத்தைப் புரட்டுகிறோம்....... ''இந்த சொசைட்டியின் அலங்கார அறையினை அண்ணாதான் 15-4-1967-ல் திறந்து வைத்தார். பார்வையாளர் புத்தகத்தில் அண்ணா எழுதியிருக்கிறார் பாருங்கள்.. '' திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு அமைப்பினர் துவக்கியுள்ள விற்பனை நிலையம் எடுப்பான முறையிலும் வசதியான வகையிலும் இருந்திடக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். பொதுமக்களிடம் இந்த அமைப்பு கொண்டுள்ள தொடர்பு மேலும் நேர்த்தியான அளவில் வளர்ந்திட இந்த விற்பனை நிலையம் பயன்படும் என்று நம்புகின்றேன் '' அண்ணா கைப்பட எழுதிய நற்சான்றிதழினைப் படித்துக் காட்டுகிறார் சிவலிங்கம்..

'' அமைப்பான வலுவான மார்க்கெட்டிங் வசதிகள் பட்டுத் துணிகளுக்கு இல்லை. இன்னும் நிறைய விளம்பரம் வேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் நிறையப் பேர் காஞ்சிக்கு வருகிறார்கள். பட்டுத் துணிகளை இன்னும் பிரபலப்படுத்தினால் இன்னும் நிறைய விற்பனையாகும்.

'' இன்னும் ஒரு முக்கியமான இடத்தைப் பார்க்க வேண்டும். அதுதான் அகில இந்திய கைத்தறி போர்டால் நடத்தப்பெறும் சேவா நிலையம் (Design Centre). அதையும் பார்த்து விடலாம் '' என்கிறார் நண்பர்.

ரயில்வே ஸ்டேஷன் ரோடில் உள்ள சேவா நிலையத்தின் நிர்வாகி திரு. வீரப்பன், டிசைன்கள் தயாரிப்பதில் மிகுந்த திறமைசாலி என்பது, பார்த்தவுடனே தெரிந்துவிடுகிறது.

'' இந்த டிசைன் சென்டரில் ஆறு தறிகள் உள்ளன. இதற்கு முன்னால் வடநாட்டு மக்கள் விரும்பும் டிசைன்கள் காஞ்சிபுரத்தில் கிடையாது. பம்பாய்க்கும், டெல்லிக்கும், கல்கத்தாவுக்கும் வேண்டிய டிசைன்களை நாங்கள் இப்



பொழுது தயார் செய்து, துணிகளைச் சங்கங்களிடம் தயார் செய்யச் சொல்கிறோம். இரண்டு பக்கம் பார்டர் முன்பெல்லாம் கிடையாது. இப்பொழுது இரண்டு பக்கம் பார்டர் போடுகிறோம். ஜப்பானில் நடைபெறும் எக்ஸ்போ 70க்குச் சேலைகள் அனுப்பியுள்ளோம். ஏர் இந்தியாவுக்கு 700 புடவைகளும் 2,200 மீட்டர் பட்டுத் துணிகள் ரவிக்கைக்கும் விமானப் பணிப்பெண்கள் உடைக்காகவும் அனுப்பியுள்ளோம். இதேமாதிரி, இந்தியன் ஏர் லைன்சுக்கு 1,250 புடவைகள் தந்துள்ளோம். வெளிநாட்டுக்காரர்களை இந்தப் புதுப் புது டிசைன்கள் நன்றாகக் கவர்ந்துள்ளன.

சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே வெளிநாட்டுக்காரர்கள்—பிரெஞ்சுக்காரர்கள், ஆணும் பெண்ணுமாக ஒரு கூட்டம் உள்ளே நுழைகிறது. அங்கு போடப்பட்டுள்ள டிசைன்களைச் கண்டு சொக்கிப் போகிறார்கள் அவர்கள்! 140 ரூபாய்க்குப் பெண்கள் அணியும் ஓர் பட்டு அங்கியை வாங்கிக் கொள்கிறாள் ஒரு பிரெஞ்சு மங்கை!

'' ஒரு நாள் சென்னையில் உள்ள அமெரிக்க மாது ஒருவர், 60 வயதிருக்கும், அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றுபவர், இங்கே வந்தார்கள். இங்குள்ள திருமண காலங்களில் அணியும் பட்டு அங்கியைப் பார்த்து விட்டு 'இந்தப் பட்டு அங்கியை அணிந்து கொள்வதற்காகவே .......... இன்னொரு கல்யாணம் கூடச் செய்து கொள்ளலாம்னு ஆசையா இருக்கு ' என்று தன் ஆசையைக் கொட்டித் தீர்த்துக்கொண்டார்! காஞ்சிப் பட்டு செய்த மயக்குவேலை அது! '' என்று சொல்லி விட்டுப் புன்முறுவல் உதிர்க்கிறார் வீரப்பன்!

'' இங்கே காஞ்சிபுரத்தில் நெய்யும் பட்டுத் துணிகளில் 80 சதவிகிதம் இந்த டிசைன் சென்டரில் போட்டுக்கொடுத்த டிசைன்களைப் போட்டுத்தான் செய்கிறார்கள். இந்த அளவுக்கு இங்கே தயார் செய்யப்படும் டிசைன்கள் மக்களிடையே பிரசித்தமாகியுள்ளன. ஜப்பான் நாட்டுத் தூதுவர் ஒருவர் இந்த டிசைன்களைப் பார்த்துப் பிரமித்துப் போய் விட்டார்! ''எங்க நாட்டில் உங்களைப் போன்ற தொழிற் கலைஞர்களை டெலிவிஷனில் போட்டு மக்களிடம் காட்டிப் பிரபலப்படுத்துவோம்'' என்று உற்சாகம் பொங்கிடச் சொன்னார்கள்! மதுரைமீனாட்சி அம்மன் கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது அம்மனுக்கு முதலில் உடுத்தின பட்டுச்சேலை நாங்கள் டிசைன் போட்டுக் கொடுத்தது! எலிசபெத் ராணி சென்னைக்கு வந்திருந்தபொழுது அவர்களுக்காகச் சிறப்பு முறையில் டிசைன்கள் வரைந்து துணிகளாக நெய்து கொடுத்திருக்கிறோம். இதுவரை இந்த சென்டரில் 7,200 டிசைன்கள் வரைந்து 6,765 டிசைன்கள் கைத்தறி உற்பத்தியாளர்களுக்குத் தரப்பட்டுள்ளன.''

'' காஞ்சிபுரத்திற்கு மட்டுமா பெருமை.... தமிழகத்திற்கே பெருமை....உங்கள் பணியினை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை.... வளர்க உங்கள் பணி..வாழ்க உங்கள்தொண்டு'' என்று உள்ளம் நெகிழக் கூறி விட்டு விடை பெறுகிறோம்!


குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள்: 26762 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

# பார்த்தோம்



## ஒருமைப்பாட்டின் உருவம்

ஆகஸ்டு 16 'தமிழரசு' இதழில் நம் நாட்டின் தந்தை காந்தியடிகளின் பொன்மொழிகளையும் ஆசியாவின் ஜோதி ஜவஹர்லால் நேருவின் கருத்துக்களையும் படித்தபொழுது தேச ஒருமைப் பாட்டிற்குத் 'தமிழரசு' ஆற்றிடும் பணி விளங்குகிறது. உயர்ந்த கருத்துக்கள் எங்கிருந்தாலும் மொழி, இனம், பேதம் காட்டாமல் வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டுவதற்குரிய ஒன்ருகும்.

— வி. ஜானகிராமன்,
சென்னை-28.

## நிறைவு செய்த 'தமிழரசு'

தமிழகத்திற்கு அரசு என்ன செய்திருக்கிறது, என்ன செய்து கொண்டிருக்கிறது, என்ன செய்யப்போகிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கும் பத்திரிகை எது என்று எண்ணிக் கொண்டிருந்த எங்களது எண்ணத்தை நிறைவு செய்யும் வகையில் 'தமிழரசு' புத்தக வடிவாக வந்ததுபற்றிப் பெரு மகிழ்வெய்துகிறேம்.

— கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

## வற்ருத ஊற்று

'தமிழரசு' ஆகஸ்டு 16 இதழைப் படித்துப் பார்த்து இன்புற்றேன். அண்ணுவின் வானெலிப் பேச்சு ஒரு வற்ருத ஊற்று. அது அணையா விளக்காக என்றும் நின்று நிலவும்; தமிழக முதல்வர் தமிழ்த்தாயின் தலைமகன் கலைஞர் வரைந்துள்ள கவினுறு பயணக் கட்டுரையைப் படித்துக் களிப்புற்றேன். வெண்டாளில் அச்சிடப்பெற்றுள்ள பத்திரிகை முத்துப் போன்ற எழுத்துக்களைத் தாங்கி முறுவல் செய்கின்றது.

— கோ. முத்துப்பிள்ளை,
சென்னை.

## வருமானம் வருவதற்கு வழி சொல்லுக

தமிழக அரசின் 'தமிழரசு, ஏடெல்லாம் தமிழ் அரசோச்சுகிறது. கலைஞரின் பயணக் கட்டுரை பயன் தருவதாகும். கலை, அறிவியல், அரசியல், பொருளாதாரம், சமூகம், ஆகிய எல்லாத் துறைகளிலும் பள்ளியிலே மாணவர்க்குப் பாடம் போதிக்கும் ஆசானுகத் 'தமிழரசு' ஏடு விளங்குகிறது.

ஓய்வு நேரத்தை, வருமானம் தரும் வகையில் பயன்படுத்திக் கொள்ளும்படியான வழி முறைகளைப் பற்றியும் தமிழரசு ஏட்டில் எழுதினுல் என்னைப்போன்ற குறைந்த வருமானமுடையோர் அமைதியாக வாழ்க்கை நடத்தப் பேருதவியாக இருக்கும்.

— எஸ். எம். பாபு,
ஈரோடு.

## அனைத்தும் நீயே !

செங்கனிச் சுவையே என்பேன்
தீந்தமிழ் அமுதம் என்பேன்
திங்களே என்பேன் ; இன்பத்
தேன்சுவைப் பாகே என்பேன்
பொங்கலே என்பேன் ; முல்லைப்
பூவிதழ் என்பேன் ; நன்மை
பொங்கிடத் தோன்றி யுள்ள
புகழ் 'தமிழரசே' உன்னை !

— செங்கைதாசன்,
சென்னை-2.

# படித்தோம்



## தனிச் சிறப்பு !

காலமெல்லாம் படித்துப்பயன் துய்க்கக்கூடிய வகையில் 'தமிழரசு' ஒவ்வோரிதழும் படைக்கப் பட்டு வருவது தமிழர்கட்கே தனிச் சிறப்பளிப்பதாகும்.

—ச. ஆ. கேசவன்,
புளியங்குடி.

## உங்கள் பொறுப்பு !

தமிழ் நாட்டிற்கு இப்படி ஓர் இதழ் அவசியம் என்பதை எழுத்தாளரும் கலைஞருமான நமது முதல்வர் உணர்ந்து அதனைக் காரியமாற்றியது வரவேற்க வேண்டியதே. அரசாங்கத்தின் செயல்களை, திட்டங்களை மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்ருல் அதற்கு வழி இதுதான் ! 'தமிழரசு' தமிழ் மக்கள் ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு பிரதி இருக்கச் செய்ய வேண்டியது தங்கள் பொறுப்பு.

—டி. எஸ். சீதாராமன்.
கும்பகோணம்.

## வெளிநாட்டிலும் விற்பனை செய்க !

வளர்ந்து வரும் நம் நாட்டின் சிறப்புகளை நாம் அறிந்தால் மட்டும் போதாது. வெளிநாடுகளிலும் 'தமிழரசு' பதிப்பை விற்பனை செய்தால், பெருமைப் படக்கூடிய விஷயங்களில் ஒன்ருகும். முக்கியமாக சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் விற்பனை செய்ய வேண்டும்.

—எஸ். தில்லைமணி,
மதுரை-1.

# மலைபோல் வரும் தொல்லைகளைப் பனிபோல் ஆக்கிடும் ஆட்சி!

கலைஞர் கருணாநிதியாரின் ஆட்சியில் கண்டறியாதவற்றைக் கண்டேன் என்கிறபடி, மிக அதிசயமும், ஆச்சரியமுமான சம்பவங்கள் பலவற்றைக் காண முடிகிறது.

இதுவரையிலும் எந்த ஆட்சியிலும் நடத்த முடியாததான பல சாமர்த்தியமான செயல்கள் எளிதில் செய்யப்பட்டிருக்கின்றன.

அவரது ஆட்சியில் தொல்லைகள் ஒவ்வொன்றும் மலைபோல் வந்தது, பனிபோல் மறைந்தது என்று சொல்லத் தக்கவண்ணம் ஒழிக்கப்பட்டுவிட்டன.

அவையாவன : முதலாவது, மின்சார இலாக்காச் சிப்பந்திகளால் செய்யப்பட்ட வேலை நிறுத்தமாகும். இந்த இலாக்கா பொது மக்களின் வாழ்வுக்கு முக்கியமான சாதனங்களில் ஒன்றாகும். என்னவென்றால் விளக்கு வெளிச்சம், யந்திரங்களுக்கு விசை தருதல், நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் உயிர் தருதல் முதலிய காரியங்களாகும். இதை அடியோடு மக்களுக்குக்கிடைக்காமல்செய்துவிட நினைத்த முயற்சி அழிக்கப்பட்டு பலரை மன்னிப்புக் கேட்கவும் செய்ததாகும்.

அடுத்து, பால் பண்ணைச் சிப்பந்திகள் மக்களுக்கெல்லாம் பால் கிடைக்காமல் செய்து அவர்களைப் பட்டினி போட்டு விடுவது என்ற முறையில் அரசுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற கருத்தில் வேலை நிறுத்தம் செய்தார்கள். பொது மக்களுக்கு எவ்விதத் தொல்லையும் ஏற்படாமல், புதிய முறையில், அதாவது ஜெயிலில் உள்ள சிறை செய்யப்பட்டவர்களைக் கொண்டு நடத்தி, வேலை நிறுத்தக் காரர்களில் பலர் மன்னிப்புக் கேட்கும்படியான சூழ்நிலையை உருவாக்கியதாகும்.

அடுத்து, தனியார் பஸ் சொந்தக்காரர்கள் பஸ்கள் போக்குவரத்தை நிறுத்திப்பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்துவதன் மூலம், அரசுக்குத் தொல்லை கொடுக்க நாள் நிச்சயித்தது. இந்த விஷயத்தைக் கலைஞர் ஒரு உத்தரவின் மூலம் பஸ் சொந்தக்காரர்களைப் பணிய வைத்து மக்களுக்குத் தெரியாதபடி அடக்கி விட்டார்.

நான்காவதாக, நிலப்பறி இயக்கம். இது 'உலகப்பிரசித்த' இயக்கமாக நடத்த இந்தியா முழுவதையும் சேர்த்துக்கொண்டு வன்முறை ஆயத்தமும் பக்குவமும் செய்து கொண்டு ஆயிரக் கணக்கான பேர் செய்கையில் நடத்த முன் வந்த மாபெரும் புரட்சி இயக்கமாகும். இதனை, ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம் என்று சம்பந்தப்பட்ட மக்களைக் கைது செய்து, அவர்களதுமுயற்சியேவெட்கப்படும்படி நாசப்படுத்தியதோடு, பலர் தண்டிக்கப்பட்டும், பலர் மன்னிப்புக் கேட்கப்பட்டும், பலருக்கு என்ன செய்வது என்று திகைக்கும்படியும் செய்து அப் புரட்சி அழிக்கப்பட்டு விட்டது.

இம்மாதிரிச் செயல்பட்ட அதிசய நிகழ்ச்சிகள் நம் நாட்டில் இதுவரை எந்த ஆட்சியிலும் நடந்ததே இல்லை என்றே சொல்லலாம்.

ஆகவே கலைஞர் ஆட்சிக்கு சபாஷ் பட்டம் கொடுக்க வேண்டியவனாக இருக்கிறேன் என்பதோடு, கலைஞர் ஆட்சி நீடூழி வாழ வேண்டுமென்று பொது மக்கள் சார்பாக ஆசைப்படு

> பெரியார் அவர்களின் 92 வது பிறந்த நாள் விழா செப்டம்பர் 17 ஆம் நாள் வருகிறது. அதன் நினைவாக, பெரியார் அவர்கள் தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பற்றிக் கூறியிருப்பதைப் பெருமையுடன் இங்கு வெளியிடுகிறோம்.

கிறேன். தமிழகத்தில் இன்று நடைபெறும் ஆட்சியானது தமிழர்களுடைய ஆட்சி, பகுத்தறிவு வாதிகளின் ஆட்சி. தமிழர்களின் நலத்தை இலட்சியமாகக் கொண்டு அதற்காகத் தொண்டாற்றக் கூடியவர்களின் ஆட்சியாகும். இது போன்ற ஆட்சி நமக்குக் கிடைத்தது ஒரு நல் வாய்ப்பேயாகும்.

இந்தியாவிலே அதிகமான மின்சாரம் பெற்றிருப்பது தமிழகத்தில்தான். இந்தியாவிலே தமிழகம் தான் பல துறைகளில் சிறப்பாக முதன்மையாக உள்ளது.

சமுதாயத் துறையில் இந்த அரசின் மூலம் நாமடைந்த முன்னேற்றங்கள், இது வரை வேறு எந்த அரசாலும் அடையாத முன்னேற்றமாகும். இந்த ஆட்சி இன்னும் 10 ஆண்டுகள் இருந்தால் நாம் நூற்றுக்கு நூறும் படித்தவர்கள் ஆகிவிடுவோம்.

இன்றைய அரசானது சுயமரியாதைத்திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும் என்று சட்டம் இயற்றியுள்ளது. அதனைப் பாராட்ட வேண்டியதும் நன்றி செலுத்தவேண்டியதும் மக்கள் கடமையாகும்.

இன்றைய ஆட்சியை நாங்கள் ஆதரிக்கிறோம் என்றால், எங்கள் சொந்த சுய நலத்திற்காக அல்ல. அதனால் எந்தப் பலனையும் நாங்கள் அனுபவிக்கவில்லை. நமது மக்கள் சமுதாயத்தின் நன்மையைக் கருதியே நாங்கள் இந்த ஆட்சியை வாழ்த்துகிறோம்.

பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்களின் நலனிலும் நல் வாழ்விலும் பெரும் அக்கறை கொண்டது இன்றைய அரசு. தேவையான நேரத்தில் பிற்பட்டோருக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் இன்றைய தமிழக ஆட்சியாளரைக் கோடான கோடி பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாகப் பாராட்டி, அதற்காக நன்றி செலுத்துகிறோம்.

இன்றைய அரசினர் ஆட்சிக்கு வந்ததும் கல்வியில் அதிக கவனம் செலுத்தியதோடு, பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற உத்தியோகத்துறையில் நிறைய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.



# உருளைக் கிழங்கு புராணம்

உருளைக்கிழங்கு மிகவும் சத்துள்ள உணவு. தானிய வகைகளைவிட இதில் புரதம் அதிகம். தானியங்களில் இல்லாத வைட்டமின்-சி, சுண்ணாம்புச்சத்து, கந்தகச்சத்து, இரும்புச்சத்து ஆகியவை இதில் அதிக அளவு இருக்கின்றன.

இது சிறந்த சத்துணவாக இருந்த போதிலும், இந்தியாவில் இதனை மக்கள் பெருமளவு பயன் படுத்துவதில்லை. இந்தியாவில் ஒரு மனிதன் ஆண்டு ஒன்றுக்கு உட்கொள்ளும் உருளைக் கிழங்கு 4 கிலோ தான். ஆனால் ஜெர்மனியில் 174 கிலோவும், இங்கிலாந்தில் 100 கிலோவும் அமெரிக்காவில் 47 கிலோவும் உட்கொள்ளுகின்றனர்.

உருளைக் கிழங்கின் தாய் வீடு தென் அமெரிக்கா தான். அங்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உருளைக்கிழங்குபயிரிடப் பட்டு வந்திருக்கிறது. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான் இந்தியாவுக்குள் உருளைக் கிழங்கு நுழைந்திருக்கிறது.

சாதாரணமாக இந்தியாவின் மற்றப் பகுதிகளில் உருளைக் கிழங்கு இருபோகம் தான் பயிரிடப்படுகிறது. ஆனால் நீலகிரியில் உள்ள பருவ நிலை மூன்று போகம் பயிரிட வசதியாகவுள்ளது.

வடநாட்டில் சிம்லா அருகே யுள்ள குப்ரி என்ற இடத்திலுள்ள உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சில உருளைக் கிழங்கு வகைகளின் பெயர்கள் ஜோதி, ஜீவன், நவீன், நீலமணி சிந்திரி, அலங்கார், சந்திரமுகி ஆகியவை. இதில் நீலமணி, நீலகிரியில் பயிரிடத்தோதுவானது.

முன்பெல்லாம் உருளைக்கிழங்கு மலைப்பிரதேசங்களிலேயே சாகுபடி செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது சமவெளிகளிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்ற உருளைக்கிழங்கு ரகம், தமிழ்நாடு அரசு அளித்த ஆதரவினாலும் ஊக்கத்தினாலும் வேளாண்மைத் துறையினால் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெயர் 'கோ-சிம்லா' எனப்படும். இந்த ரகத்தை வட ஆர்க்காடு, தர்மபுரி, கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் செப்டம்பர் மாதத்தில் சாகுபடி செய்யலாம். இது 110 நாட்களில் அறுவடைக்கு வரும்.

'கோ-சிம்லா' என்னும் ரகத்தைப் பயிரிட, நிலத்தை 4 அல்லது 5 முறை நன்கு புழுதியாகும் படி உழுதுவிடவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 200 கிலோ அமோனியம் சல்பேட், 60 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய இரசாயன உரங்களை இடவும். பின்பு 2 அடி தூரத்திற்கு ஒரு பார் வீதம் அமைக்கவும். விதைக் கிழங்குகளை நடுவதற்கு முன்பு மண்ணில் ஆல்ட்ரின் 5 சத தூளையோ (ஏக்கருக்கு 13·5 கிலோ) அல்லது ஹெப்டாகுளோர் 6 சத தூளையோ (ஏக்கருக்கு 15·5 கிலோ) தூவி விடவும். இதனால் உருளைக் கிழங்குச் செடிகளைச் சேதப் படுத்தும் வெட்டுப் புழுவையும், வெள்ளைப் புழுவையும் கட்டுப்படுத்தலாம்.

விதைக் கிழங்குகளை நடுவதற்கு முன்பு பார்களின் இடையில் நீர்பாய்ச்சவும். அதன் பின் பார்களின் சரிவில் 1 அங்குலம் ஆழத்தில், கிழங்குக்குக் கிழங்கு 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளி விட்டு முளைவிட்ட உருளைக் கிழங்கை நடவேண்டும். ஒரு ஏக்கர் நடுவதற்கு 400 கிலோ முளைவிட்ட உருளைக்கிழங்கு தேவைப்படுகிறது.

விதைக் கிழங்குகளை நட்ட இரண்டாம் நாளில் நீர்பாய்ச்சவும். அதன்பின்வாரமஒருமுறை நீர் பாய்ச்சவும். மேலும் விவரம் அறியப்பொறுத்திருக்கவும்.

### 120 ஆண்டுக்கு முன் சம்பளம்

சென்னையிலுள்ள சிற்பப்பள்ளி 1850-ஆம் ஆண்டு, டாக்டர் அலெக்சாண்டர் ஹண்டர் என்ற ராணுவ டாக்டரால் துவக்கப் பட்டது. அப்போது அங்கு பணியாற்றியவர்கள் வாங்கிய சம்பளப் பட்டியலை நோக்கினால் சற்று வேடிக்கையாகவுள்ளது.


ஆசிரியராகப் பணியாற்றிய திரு பாரென் பெற்ற மாதச் சம்பளம் ரூ. 28; கட்டடப் பொருள் கண்காணிப்பாளர் மார்ட்டின் பெற்றது ரூ. 20; புகைப்படக்காரர் பெற்றது ரூ. 11 அணா 4 பைசா 2; மண்பாண்டப் பொருள்கள் செய்த முனுசாமி பெற்று வந்தது மாதம் ரூ 3; பாலசுந்தரம் என்ற தொழிலாளி பெற்ற கூலி மாதத்திற்கு ஒன்றரை ரூபாய்க்கும் குறைவாம்.

### பூச்சிமருந்து தெளிக்கப் பயிற்சி

வேளாண்மையில் வீரிய விதைகளும், ரசாயன உரங்களும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது பூச்சிகொல்லி மருந்து தெளிப்பதும்! பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகளைக் கொல்லாவிடின் பட்டபாட்டிற்குப் பலனின்றிப் போகும்.

அதனால்தான் 'யந்திரத் தெளிப்பானை'ப் (Power Sprayer) பயன்படுத்த விவசாயிகளுக்குத் தனிப்பயிற்சி அளிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 7,200 விவசாயிகளுக்கு இந்தப் பயிற்சி இது வரை வழங்கப்பட்டுள்ளது.

'யந்திரத் தெளிப்பான்' பழுதடைந்துவிட்டால் கிராமத்தார் என்ன செய்யமுடியும்? அதற்கும் அரசு வழி செய்துள்ளது. இதற்காக ஆங்காங்குள்ள சைக்கிள் கடைக்காரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இந்த யந்திரத்தைப் பழுது பார்க்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் சுமார் 100 சைக்கிள் மெக்கானிக்குகளுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



# அறிவு தந்த பாறை

"நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்" குமரி முனை. இளந்துறவி ஒருவர் குமரி முனையிலே வந்து நிற்கிறார். துறவி என்றால் வெறும் போலித் துறவி அல்லர்! அவர் மனத்திலே ஒரு போராட்டமே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அவர் மனம் முக்திக்கான மார்க்கத்தைத் தேடுகிறது. ஆனால் இந்திய நாட்டு மக்களின் வறுமை, அறியாமை அவரை நாட்டுப்பணியில் ஈடுபட அழைக்கின்றன. இவற்றில் எதை ஏற்பது ?

கடற்கரையிலிருந்து சுமார் 1,600 அடி தூரத்தில் உள்ள ஒரு பாறை அவர் கண்களில் படுகிறது. 'வா' 'வா' என்று அழைப்பது போல் தோற்றமளிக்கிறது, அந்தப் பாறை. அங்கிருந்த படகோட்டியிடம், தன்னை அந்தப் பாறைக்கு அழைத்துச் செல்லும்படிக்கேட்கிறார். அவர் கையில் அவனுக்குக் கொடுக்கக் காசில்லை. படகோட்டி மறுத்து விடுகிறான். நீந்தியே பாறையை அடைகிறார் துறவி. அக் கருங்குன்றின் மீதமர்ந்து தியானம் செய்கிறார். அவர் உள்ளத்திலே ஒளியொன்று தோன்றுகிறது. இந்த நாட்டு மக்களின் வறுமையைப் போக்க, அறியாமை என்னும் பேயை அகற்ற, உழைப்பது என அவர் உள்ளம் அக்கணமே முடிவு செய்கிறது. போதி மரத்தடியிலே புத்தருக்கு ஞானம் பிறந்தது போல், அந்தப்பாறையிலே அவருக்கு உள்ளொளி பிறக்கிறது. "மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு" என்ற தெளிவு உண்டாகிறது. அன்றிலிருந்து அவர் பொது வாழ்வுக்கே தன்னை அர்ப்பணித்துக்கொள்கிறார். அந்தத்துறவி தான் அறிவுலகம் வியந்து பாராட்டிய சுவாமி விவேகாநந்தர்! அந்தப் பாறையின் பெயர் தான் விவேகாநந்தர் பாறை !

வட திசையிலிருந்து
தென்திசை வந்தார்
ஓர் இளந் துறவி.

தென்குமரிப் பாறையில்
அறிவெனும் இன்பத்தைக்
கண்டார்.

அந்தப் பாறையில்
அழகான ஆலயம்
இன்று
உருவாகி நிற்கிறது.

விவேகாநந்தர் உள்ளொளி பெற்ற அந்தப் பாறையிலே தக்கதோர் நினைவு மண்டபம் அமைப்பது என முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி நினைவு மண்டபம் எழுப்பப்பட்டது. இம் மண்டபத்தைத் தமிழக முதல்வர் தலைமையில் குடியரசுத் தலைவர் செப்டம்பர் 2 ஆம்நாள் திறந்துவைத்திருக்கிறார் !

எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது இந்த நினைவு மண்டபம். நினைவுச் சின்னம் முழுவதும் கருங்கற்களினால் ஆனது. இதற்கான கருங்கற்கள் முழுவதும் அம்பாசமுத்திரத்தில் இருந்தும் குமரி முனையின் அருகிலே உள்ள மருத்துவா மலையிலிருந்தும் தருவிக்கப்பட்டன. நம் நாட்டின் பல்வேறு மாநிலக் கலை அம்சங்களும் நினைவு மண்டபத்தில் உள்ள சிற்பங்களில் இடம் பெற்றுள்ளன. அழகான ஓவியங்கள் பலவும் மண்டபத்தை நன்கு அலங்கரிக்கின்றன. விவேகாநந்தரை ஈன்றெடுத்தது வங்க பூமி. ஆனால் உலகுக்கு அவரை அறிமுகப்படுத்தியது தமிழகம் தான்.

தமிழகம் எப்போதும், சிறப்புக் கண்ட விடத்துப் பாராட்டத் தவறுவதில்லை. அந்தத் துறவியாருக்கு நினைவு மண்டபம் ஒன்று குமரி முனையில் அமைந்துள்ளதே இதற்குச் சாட்சி.

தமிழகத்தின் அழகையெல்லாம் வடித்துக் கொடுக்கும் இடம் குமரி முனை. சுற்றுலா வருவோருக்குக் குமரி முனை மறக்க முடியாத, நெஞ்சை விட்டகலாத நினைவுச் சித்திரம். அந்த எழிற்கூடத்திற்கு மேலும் எழிலூட்டுவதாக அமைந்துள்ளது விவேகாநந்தர் நினைவு மண்டம் !

இடம் : ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கு.

**சந்திப்பவர்கள் :** வேளாண்மை வளர்ச்சி அலுவலர், ஊர்நல ஊழியர்—அமிர்தலிங்கம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஐவர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்.

(வேளாண்மை வளர்ச்சி அலுவலர், காலை 8 மணிக்கு அலுவலகத்தில் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது ஊர்நல ஊழியர் அமிர்தலிங்கம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 ஊராட்சி மன்றத் தலைவர்களை அழைத்துக் கொண்டு அங்கே வருகிறார் அமிர்தலிங்கமும், ஊராட்சி மன்றத் தலைவர்களும் வேளாண்மை வளர்ச்சி அலுவலருக்கு ''வணக்கம் சார்'' என்று சொல்லிக் கொண்டே வருகிறார்கள்.)

**வேளாண்மை வளர்ச்சி அலுவலர் :** வாங்க! எல்லோருக்கும் வணக்கம். உட்காருங்க.

**அமிர்தலிங்கம் :** சார்! இவங்க பெயர் மணி; ஆவினங்குடி பஞ்சாயத்துத் தலைவர். இவங்க பெயர் இளைய பெருமாள்; வையங்குடி பஞ்சாயத்துத் தலைவர்.

**மணி :** சார்! நான் உங்களைப் பலதடவை பார்த்துள்ளேன். பேசியதில்லை. அப்பாவே, வேளாண்மை வேலைகளைக் கவனித்து வந்ததால், உங்களைச் சந்திக்க எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை.


**வே. வ. அ. :** இப்பத்தான் தலைவராக ஆயிட்டிங்களே. அதனால் இனிமேல் உங்களுக்காக இல்லாவிட்டாலும் மற்றவர்களுக்காகவாவது என்ன விதை இருக்கு, என்ன மருந்து கிடைக்கும் என்று கேட்க வருவீர்கள் என்று நம்புகிறேன்.

**மணி :** ஊருக்கு நல்லது செய்வேன் என்றுதானே என்னைத் தேர்ந்தெடுத்தாங்க. அதனால் நானே இங்கே வந்து என்னென்ன கிடைக்கும் என்று தெரிந்து போய்ச் சொல்வதுடன், முடிந்தவரை வாங்கிச் சென்றும் கொடுக்க நினைக்கின்றேன் சார்! எனக்கு உங்கள் முழு ஆதரவும் தர வேண்டும், சார்!

**வே. வ. அ. :** என்னுடைய முழு ஆதரவையும் உங்கள் எல்லோருக்கும் எப்பொழுதும் கொடுக்கத் தயாராய் உள்ளேன்.

**இளையபெருமாள் :** மகிழ்ச்சி சார்! நம்ம ஊரில் ஒரு சில பெரிய மனிதர்கள் இருக்காங்க. அவங்க ''எங்க அப்பன் பாட்டன் காலத்திலெல்லாம் ரசாயன உரம் போட்டா பயிர் செய்தாங்க. அப்போ விளைஞ்ச மாதிரி இப்ப விளையுதா? உரமுன்னு

# புத்துலகம் கண்டிட ஒத்துழைப்பு நல்குவீர்!




சொல்லி என்னமோ கண்ட உப்புகளை எல்லாம், வாங்கிப் போட்டு வயலைக் கெடுப்பதோடு ஏராளமான பூச்சியையும் உண்டுபண்ணி விட்டார்கள்'' என்று சொல்லி மக்களைக் குழப்புகிறார்கள் சார்!

**வே. வ. அ. :** உரம் வாங்கிப் போடலாமா என்று ஆர்வமுடன் கேட்கும் சிறு உழவர்களைக் குழப்பும் அப்பெரிய மனிதர்கள், அவர்களுடைய வயலில் உரம் போடாமலா பயிரிடுகிறார்கள்? மற்றவர்களை மட்டும் ஏன் உரமிடவேண்டாம் என்று கூறி அவர்களது ஆர்வத்திற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். ஏழை எளிய உழவர்களும் உயர் விளைச்சல் விதைகளைப் பயிரிட்டு, உரமிட்டு, மருந்து தெளித்து விட்டால், மகசூல் பெருகிவிட்டால், நீங்கள் குறிப்பிடும் பெரியவர்களைப் போல் பணக்காரர்களாக ஆகிவிடுவார்கள். அதன் பின் அப்பெரிய மனிதர்களின் செல்வாக்குக் குறைந்து விடும். இந்தப் பயத்தினாலேயே பல பெரிய மனிதர்கள், ''உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடாதே, இரசாயன உரங்களைப் போட்டு வயலைக் கெடுக்காதே, மருந்து தெளிப்பதால் பயனில்லை'', என்றெல்லாம் பிதற்றி வருகிறார்கள்.

**மணி, மற்றும் இதர தலைவர்கள் :** எங்களுக்கும் இரசாயன உரம் பற்றித் தெரிந்து கொள்ள ஆசை. கொஞ்சம் விளக்கமாச் சொன்னீங்கன்னா புரிஞ்சுக்குவோம்.

**வே. வ. அ. :** விளக்கமாகச் சொல்கிறேனுங்க. எல்லாப் பயிர்களுக்கும் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகிய மூன்றும் மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகின்றன.

இளையபெருமாள் : நம்ம மண்ணில் தான் சத்து இருக்குமுங்களே. அப்படி இருக்க ஏன் சார் உரம் போடணும்?



வே.வ.அ. : தொடர்ந்து பயிரிடுவதால், மண்ணிலுள்ள சத்துக்கள் குறைந்து மண்வளம் குன்றி விடுகிறது. மண்ணின் விளை திறன் குறைவதைத் தடுக்கவும், செழிப்பான பயிர் வளர்ச்சிக்கு உறுதி ஏற்படுத்தவும், மண்ணிற்கு உரமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும். ஒரு உதாரணத்தின் மூலமாக விளக்குகின்றேன். உதாரணத்திற்கு நெல்லை எடுத்துக் கொள்ளுங்கள். ஹெக்டருக்கு அதாவது 2·47 ஏக்கருக்கு 8,000 கிலோ தானியமும், 8,000 கிலோ வைக்கோலும் கொடுக்கும் உயர் விளைச்சல் நெல் ரகமான ஆடுதுறை-27 நிலத்திலிருந்து 192 கிலோ தழைச்சத்து, 80 கிலோ மணிச்சத்து, 240 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை கிரகித்துக் கொள்கின்றன. ஆனால் ஆடுதுறை-27 நெல்லுக்கு ஹெக்டருக்கு 70 கிலோ தழைச்சத்து, 52 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை மட்டுமே அளிக்கின்றோம். ஆடுதுறை-27 நெல் கிரகித்துக் கொள்ளும் அளவு சத்துக்களை அளிக்கவில்லை. ஆனால், மேற்கூறப்பட்ட அளவு சத்துக்களை ஆடுதுறை-27 நிலத்திலிருந்து எடுத்துக்கொள்ளும் சூழ் நிலையை உருவாக்குவதற்குத் தேவையான அளவு சத்துக்களையே அளிக்கின்றோம். இப்பொழுது உரமிடுவதன் முக்கிய நோக்கம் புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

இளையபெருமாள் : தழைச்சத்துப் போட வேண்டியதன் அவசியத்தைச் சொல்லுங்க சார்.

வே.வ.அ. : தாவரங்களின் உடலமைப்புக்குத் தழைச்சத்து மிகவும் முக்கியமானது. செடிகள், அல்லது பயிர்களுக்குக் கரும்பச்சை நிறத்தைக் கொடுத்து, ஒளிச்சேர்க்கை மூலம் கார்போஹைடிரேட் எனப்படும் மாவுப் பொருள் தயாரிப்பதை ஊக்கப்படுத்தும் ; பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்; தூர்கள் ஏற்படுவதைத் துரிதப் படுத்தும் ; தூர்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் ; இலைவகைக் காய்கறிப் பயிர்களில் உயர்ந்த தரத்தை ஏற்படுத்தும் ; உணவு மற்றும் தீவனப் பயிர்களில் புரதச்சத்தை அதிகப் படுத்துகிறது ; கதிர்களில் மணிகளை அதிகமாக ஏற்படுத்தும் ; மகசூலைப் பெருகச் செய்யும்.

இளையபெருமாள் : தழைச்சத்து அதிகமாக இருந்தால் என்ன ஆகுமுங்க?

வே.வ.அ. : தழைச் சத்து அதிகமாக இருந்தால் இலை அல்லது தாள்களின் வளர்ச்சியை அதிக அளவு தூண்டிவிடும். பயிர்களின் தண்டுகள் வலுவிழந்து கீழே சாய்ந்து விடும். பூச்சிகள், நோய்கள் ஆகியவைகளின் தாக்குதலுக்குப் பயிர்கள் ஆளாகும். உற்பத்திப் பொருள்களின் தரம் குறைந்துவிடும். பயிரின் வயது அதிகமாகும்.

மணி : மணிச்சத்து ஏன் போடணுங்க?

வே.வ.அ. : தாவரங்களில் உள்ள கரு அமிலம், பைட்டின், போன்றவைகளுக்கு மணிச் சத்துத் தேவைப்படுகிறது. இனப் பெருக்கப் பாகங்களின் வேலைகளுக்கு மணிச்சத்து அடிப்படையாக இருக்கிறது. வேர்களின் வளர்ச்சியையும், பயிர்களின் வளர்ச்சியையும் ஆரம்பத்திலேயே தூண்டுவதால், பயிர்கள் விரைவாக நிலைத்து நிற்க உதவுகிறது ; ஆரம்பத்திலேயே விரைவாகவும் வலுவாகவும் வளரும் சக்தியைப் பயிர்களுக்குக் கொடுக்கிறது. பயிர்களின் பூக்கும் தன்மையைத் தூண்டிவிடுகிறது. விதை உற்பத்திக்கு உதவுகிறது ; பயிர்களின் முதிர்ச்சியை விரைவாக ஏற்படுத்துகிறது.

மணி : கொஞ்சம் பொறுங்க சார். பயிர்களின் முதிர்ச்சியை மணிச்சத்து விரைவாக ஏற்படுத்துகிறதென்று இப்பச் சொன்னிங்க. அப்படியானால், தழைச்சத்து மிகுதியாயிருந்தால் ஏற்படும் தீங்கினை மணிச்சத்துப் போடுவதால் சரிப்படுத்தி விடலாம் போலிருக்குதுங்களே!

வே.வ.அ. : ஆமாங்க ! நீங்க நினைக்கிறது முற்றிலும் சரியே. மேலும் மணிச்சத்து, உணவு தானியங்கள், பழங்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துகிறது ; கொழுப்பு, புரதச் சத்து ஆகியவைகளைத் தயாரிக்கவும் உதவுகிறது. காற்றிலுள்ள நைட்ரஜன் வாயுவைக் கிரகித்து மண்ணில் நிலைநிறுத்தும் வேர் முடிச்சுகளை உண்டாக்கும் பாக்டீரியாவின் வேலைகளிலும் உதவுகிறது.

மற்றொரு தலைவர் : சாம்பல் சத்து போட வேண்டியதன் அவசியத்தையும் சொல்லிடுங்க சார்.

வே.வ.அ. : பயிர்களுக்குத் தேவையான மூன்று முக்கிய சத்துக்களில் சாம்பல் சத்தே பொதுவாகத் தாவரங்களில் அதிகமாகக் காணப்படுகிறது ; தழைச்சத்து, மணிச்சத்து ஆகியவைகளுடன் சேர்ந்து பயிர்களின் வளர்ச்சியில் பங்கு கொள்கிறது ; தாவரங்களின் இலைகளுக்கும், தண்டுகளுக்கும் அதிக வலுவைக் கொடுக்கிறது. நோய்களைத் தாங்கிக் கொள்ளும் சக்தியை அளிக்கிறது. வேர்ப்பாகத்திலிருந்து இலைகளுக்கும், இலைகளிலிருந்து கதிர்களுக்கும் சத்துக்கள் செல்வதற்கு சாம்பல் சத்துத் தேவைப்படுகிறது ; கரும்பு, பழம், வேர்க்கடலை ஆகியவற்றின் தரத்தை உயர்த்துகிறது ; கரும்பு, பழவகைகளின் சுவையையும் அதிகப்படுத்துகிறது ; புரதச் சத்து உற்பத்தியாவதிலும் துணை நிற்கிறது.



மணி : நீங்க சொல்றதைப் பார்த்தா சாம்பல் சத்துதான் மற்றவைகளை விட முக்கியமாகத் தெரியுது. அப்படித்தானுங்களா ?

வே.வ.அ. : அப்படியில்லைங்க , தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகிய மூன்றுமே முக்கியமானவை தானுங்க.

இளையபெருமாள் : ''சமச்சீர் இரசாயன உரம்'' என்று சொல்கிறார்களே அது பற்றியும் கொஞ்சம் சொல்லுங்களேன் சார்.

வே.வ.அ. : நம் உடல் வளர்ச்சிக்கும் நல் வாழ்விற்கும் நாம் எப்படி அரிசி, கோதுமை, கம்பு, காய்கறி, பருப்பு, பழம், எண்ணெய், பால், முட்டை, மீன், மாமிசம் ஆகியவைகள் அடங்கிய சமச்சீர் உணவுகளை உண்ணுகின்றோமோ அது போல் பயிர்களின் வளர்ச்சிக்கும், அவைகளின் உற்பத்தித் திறனுக்கும் தழைச்சத்து, மணிச்சத்து சாம்பல் சத்து ஆகிய மூன்றும் அடங்கிய சமச்சீர் இரசாயன உரங்களை, வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் அளவில் ஒவ்வொரு பயிருக்கும் அளித்தால் வேளாண்மை உற்பத்தி பெருகும் ; உழவர்களின் வாழ்வும் உயரும்.

(இவ்வாறு வே.வ.அ. விளக்கம் அளித்துக் கொண்டிருக்கையில், பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவரும், ஆணையாளரும் அங்கே வந்து வெளியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்துவிட்டு பின் உள்ளே நுழைகின்றனர். பெருந்தலைவர் பேச ஆரம்பிக்கின்றார்.)

பெருந்தலைவர் : என்ன ஏ.ஈ.ஓ. சார், நம்ம புதிய தலைவர்கள் காலையிலேயே உங்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள் போலிருக்கிறது!

வே.வ.அ. : தொல்லை யில்லைங்க. அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் தந்துகொண்டிருந்தேன். அது என் கடமையாச்சுங்களே!

ஆணையாளர் : (வே. வ. அ. வைப் பார்த்து) நீங்க ரொம்ப நேரமா இங்கே பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். இன்னும் சாப்பிடக் கூடப் போகவில்லை போலுள்ளது. சீக்கிரம் சாப்பிட்டுட்டு வாங்க. சரியாக 10 மணிக்கே கவுன்சில் கூட்டத்தை ஆரம்பித்து விடலாம்.

பெருந்தலைவர் : நம்ம யூனியன் தலைவர்களில் பெரும்பாலோர் புதியவர்களாக உள்ளதால், நாம் இதுவரை வேளாண்மையில் என்ன செய்துள்ளோம், இனி என்ன செய்யப் போகிறோம் என்று ஒரு 10 நிமிட நேரம் கவுன்சிலில் பேசுங்க சார். மற்றவைகளைப்பற்றி ஆணையாளர் பேசட்டும். (என்று கூறிக்கொண்டே புறப்படுகிறார். ஆணையாளர் பின் தொடருகிறார்).

வே.வ.அ. : சரிங்க. இதோ வந்துவிடுகின்றேன். (என்று வே. வ. அ. செல்கிறார்.)

அன்புள்ள நண்பா,

"என்னிடமிருப்பதாகச் சொல்லப்படும் திறமைகளுக்கெல்லாம் காஞ்சிபுரம் தான் காரணம். என்னிடம் குறைகள் ஏதாவது இருப்பின், இங்கே பிறந்தும் இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றனவே என்று வருத்தப்பட வேண்டும்."

செந்தமிழ்க் காஞ்சி செங்கை மாவட்டத்தின் தலைநகராகியதே நினைவிருக்கிறதா நண்பா...... காஞ்சித் தலைநகர் விழாவில் உரையாற்றிய பொழுது மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா தான் மேற்கண்டவாறு பேசினார்கள். அந்த மாமேதைக்குத்தான் எவ்வளவு பண்புடைமை, அவையடக்கம் பார்த்தாயா? அண்ணன் பிறந்த மண்ணின் பண்பு அப்படி!

அப்படி என்ன காஞ்சி மண்ணுக்கு அவ்வளவு சிறப்பு, புகழ் என்று கேட்கிறாயா? புகழ் மண்டிக் கிடந்த மாநகரம் காஞ்சி, வரலாற்றில் பொன்னேடுகளைத் தனதாக்கிக் கொண்ட பெருமையை உடையது. வரலாற்றுப்புகழ், கலைச் செறிவு, அறிவு மணங்கமழும் அழகிய நகரம் காஞ்சி.

சங்க காலத்திலேயே புகழ் பெற்றுத் திகழ்ந்தது, காஞ்சி.

**இந்த இதழின் மத்தியிலுள்ள வண்ண மிகு புகைப்படங்களில் நீங்கள் காணும் எண்ணற்ற காஞ்சி நகர்க் காட்சிகளை இனிது விளக்குகிறது இக் கட்டுரை.**


பாலாறு வளம் சுரக்கும், பண்பாடு தலைசிறக்கும் தொண்டை நன்னாட்டின் மணிமகுடமான காஞ்சி மாநகரைச் சங்க காலத்தில் தொண்டைமான் இளந்திரையன் ஆண்டான், காடுமேடுகளைத் திருத்தி நாடு நகரங்கள் ஆக்கிய காவலன் அவன். தொண்டை நாட்டில் பயன்படுகிற தென்னேரி என்னும் ஏரி இம்மன்னனின் பெயர் தாங்கி நிற்கிறது. திரையன் ஏரியே தென்னேரி என மருவிற்று.

இமயத்தில் புலிக்கொடியை நாட்டி வந்தானே கரிகாற் பெருவளத்தான்—அந்த வீரத் திருமகன் தான் காஞ்சியைச் செப்பம் செய்து கடிநகர் ஆக்கியவன். மதில் சூழ்ந்த அம் மாநகரினைக் கண்டரும் பெருஞ் சித்திரனார் என்ற சங்க காலப் புலவர் "மயில் போன்ற மணிநகர்" என்று பாடி மகிழ்ந்தார். "காஞ்சியம்பதி ஓர் அழகிய மயில் போன்றது. நெடியமதில் அம்மயிலின் உடல்; இரு மருங்கும் அமைந்த ஏரி அதன் சிறகு; (இன்று சின்னக் காஞ்சி என வழங்கும்) அத்தியூரே அதன் வாய்; அடவியே அதன் தோகை" என்று பாடி மகிழ்ந்தார் அப்புலவர் பெருமகனார்!

பெரும்பாணாற்றுப் படை என்பது சங்க இலக்கியத்தைச் சேர்ந்தது. பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், பாடப்பட்ட காலம் கி.மு. முதல் நூற்றாண்டு! அப்பழைய நூல் காஞ்சியின் புகழ் பாடுகிறது:

"தேர் ஒலிக்க மாஒலிக்கத் திசை ஒலிக்கும் புகழ்க் காஞ்சி" அதன் பின்பு கி.பி. 275-ல் பல்லவர் வசமாகியது. கல்லெல்லாம் கதை சொல்ல வைத்த பல்லவர்களின் ஆட்சியிலே காஞ்சிமாநகரம் உச்ச நிலையை அடைந்தது. சிம்மவிஷ்ணு, மகேந்திர பல்லவன், நரசிம்ம பல்லவன், இராஜசிம்மன், மூன்றும் நந்திவர்மன் ............... காலவெள்






ணத்தால் அழிக்க முடியாத கலைப் படைப்புக்களை, கற்கோயில்களை அமைத்துத் தமிழகத்தின் புகழ்க் கொடியை வானளாவப் பறக்க விட்ட மாமன்னர்கள் இவர்கள். அவர்களின் பின்னால் வந்த பிற்காலச் சோழர்கள், விசயநகர மன்னர்கள் அனைவருமே காஞ்சியை ஒரு கலைப் பெட்டகமாகவே மாற்றி யமைத்தார்கள். காஞ்சியில் ஏகாம்பரநாதர் கோயில் கண்டு அன்று நீ ஒருநாள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போனாயே.... அந்தக் கோயிலின் முன் கோபுரம்—வானளாவி நிற்கும் அக் கோபுரத்தை எழுப்பியவன் கிருஷ்ணதேவ ராயன்! உலகமே வியந்து பாராட்டும் கைலாசநாதர் கோயிலைக் கட்டியவன் இராசசிம்மன் என்ற இரண்டாவது நரசிம்ம வர்மன்.

நரசிம்மவர்மன் என்றதும் நினைவுக்கு வருகிறது. சாளுக்கியர்களின் தலைநகரமான வாதாபியைப் படையெடுத்துச் சென்று தரைமட்டமாக்கினான் முதல் நரசிம்மவர்மன் என்பது உனக்குத் தெரியும். 'மாமல்ல பல்லவன்' என்று புகழ் பெற்றவன் இவன். வரலாறு திரும்பியது. பின்னால் சாளுக்கியர் களின் கை ஓங்கியது. வாதாபியை நிர்மூல மாக்கிய பல்லவர்களின் மீது வெஞ்சினம் கொண்டு காஞ்சிமீது பாய்ந்தான், பின்னால் வந்த சாளுக்கிய மன்னன்—இரண்டாம் விக்கிரமாதித்தன்; காஞ்சியைத் தரை மட்டமாக்கப் படை திரட்டி வந்தான். காஞ்சி எல்லையை அவன் நெருங்கும்போது அவன் முன்னே காஞ்சி எல்லையிலே கம்பீர மாக நின்றுகொண்டிருந்த கைலாசநாதர் கோயில் அவன் கண்களில் பட்டது. அக் கோயிலின் வனப்பிலே சொக்கிப்போய் விட்டான் அவன்! வெஞ்சினம் கூறி வந்த அந்த வேங்கை', கலைக்கோயில் கண்டு உருவிய வாளை உறையினுள் போட்டது! "இப்படிப்பட்ட உன்னதமான கோயில்கள் —கலைப் பெட்டகங்கள் மலிந்த காஞ்சி மாநகருக்கு யாரும் எந்த விதமான ஊறும் செய்யக் கூடாது" என்று ஆணை பிறப் பித்தான். காஞ்சியிலிருந்த கைதேர்ந்த சிற்பிகளுக்கு வாரி வாரி வழங்கினான் பொன்னையும் மணியையும்! அவர்களைத் தன்னாட்டிற்குக் கூடவே அழைத்துச்சென்று அங்கே கோயில்கள் பலவற்றை உருவாக்கி னான். எல்லோராவில் உள்ள கைலாசநாதர் கோயில் - காஞ்சிக்கோயிலைக் கண்டதில் ஏற்பட்ட உணர்ச்சியின் பிரதிபலிப்பே என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

காஞ்சியின் வரலாற்றுப்புகழ் மட்டும் கூறவில்லை தம்பி! சான்றோர்கள் பலரை ஈன்றெடுத்த பெருமையும் காஞ்சிக்கு உண்டு. "கல்வியில் கரையிலாத காஞ்சி" என்று காஞ்சியின் புகழ் பாடினார் திருநாவுக்கரசர். அந்தக் காலத்தில் வட நாட்டில் அரியதொரு அறிவாலயமாகச் சிறந்து விளங்கிய நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைவராகத் திகழ்ந்த தத்துவ ஞானி தருமபாலர் என்பவர் காஞ்சி மண்ணில் தோன்றியவர். அதே பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக விளங்கிய


தின்னாகர் என்பாரும் காஞ்சியில் பிறந்தவரே! புத்தமதக் கொள்கையைச் சிறப்புறக் கற்றுப் போதித்த போதிதர்மர் என்ற பெரியார் காஞ்சியில் தோன்றியவர். அண்மைக் காலத்தில் வாழ்ந்த இசைமேதை, இசைக் கலை முடி மன்னர் என்ற பட்டத்தைப் பெற்ற நயினாப் பிள்ளையும் காஞ்சியில் தோன்றியவரே! இங்கே தான் ஆதிசங்கரர் காம கோடி பீடத்தை நிறுவினார். இந்நகருக்கு வந்த மணிமேகலை, தன்னிடம் இருந்த 'அமுதசுரபி'யின் உதவியால், மக்களின் பசிப்பிணியைப் போக்கியதாக, ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை கூறுகிறது.

மணிமேகலை கண்ட காஞ்சியின் நடுவே புத்ததேவன்கோயில் சிறப்புற்று விளங்கியது. பௌத்த மதப் பண்ணையாக விளங்கியது காஞ்சி. சமண சமயத்தின் விளைநிலமாகவும் காஞ்சிபுரம் திகழ்ந்தது ஒரு காலத்தில். முன்பு ஜீன காஞ்சியென்று அழைக்கப்பட்ட திருப்பருத்திக் குன்றம் இன்றும் சமண சமயத்தின் உறைவிடமாகத் திகழ்கிறது. காஞ்சி மாநகரம் சமரச ஞானநெறியின் நிலைக் களனாக அமைந்திருந்தது, அந்த நாட்களில்!

காஞ்சியில் வாழ்ந்த ஆன்றோர்களில் ஒருவர் அறவண அடிகள். புத்த சமயத்தைச் சார்ந்தவர். 'அல்லவை கடிந்த அறவண அடிகள்' என்று மணிமேகலைக் காவியம் அவரைப் போற்றுகின்றது. துறவுள்ளம் வாய்த்த பெரியோரைத் தவநெறியில் உய்த்த அடிகள் காஞ்சியில் தங்கியிருந்த இடம் ''அறவணன் சேரி'' என்று பெயர் பெற்றது. காஞ்சிபுரத்தில் இன்று ''அறப் பணஞ்சேரி'' என்று அப்பெயர் மருவி வழங்குகின்றது.

திருமங்கை ஆழ்வாரால் பாடப்பட்ட பெரிய திருமொழி காஞ்சியின் பெருமையை விளம்புகிறது. ''அழகிய மாடங்களும் இனிய தடாகங்களும் நிறைந்த காஞ்சியைப் பல்லவன் ஆண்டான். அவன் கருவூரை வென்றவன். பாண்டியனை வென்றவன்'' என்று புகழ்கிறது, அந் நூல். செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி, காஞ்சியில் நால்வகைப் படையோடும், புகழோடும் வீற்றிருந்த குலோத்துங்கனின் புகழினைப் பாடுகிறது. கவின்மிகு காஞ்சியை நேரில் கண்ட சேக்கிழார் அறுபது பாக்களில் காஞ்சியை விவரிக்கிறார். காஞ்சி மாநகரை 'மாமதிற்கச்சி' என்று தேவாரம் பாடிற்று. கச்சி ஏகம்பத்தில் கண் பெற்றுப் பாடியவர் தேவாரம் அருளிய மூவருள் ஒருவர்; அந்தமில் அழகர்; சுந்தரமூர்த்தி. திருநாவுக்கரசர் ''கல்வியே கரையிலாத காஞ்சி மாநகரம்'' என்று கட்டுரைத்தார். வள்ளன்மை வாய்ந்த தெள்ளியர் அத்திரு நகரில் வாழ்ந்தனர் என்று புகழ்ந்துரைத்தார் திருஞானசம்பந்தர். வடமொழிக் கவி காளிதாசர் ''நகரேஷு காஞ்சி'' என்று காஞ்சிக்குப் புகழாரம் சூட்டுகிறார்........

நண்பா!........ காஞ்சியின் புகழைக் கூறின் விரியும். இப்படி வேறு ஒரு நகரத்தை எண்ணிலர் புகழ்ந்தது கிடையாது. அத்தனைப் புகழுக்கும் தகுதி வாய்ந்தது



அந்நகர். வெளி நாட்டுக்காரர்களும் விட்டு வைத்தாரில்லை காஞ்சியை! காஞ்சியின் எழில் கண்டு மயங்காதார் யார்! பாரவி பாரவி என்று ஒருகவிஞன். இவன் காஞ்சியை எப்படி எப்படியெல்லாம் புகழ்ந்து வர்ணித்திருக்கிறுன் தெரியுமா? சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி இந்த வர்ணனையைக் கேட்டுக் காஞ்சி சுந்தரிமீது காதலே கொண்டு விட்டான்! அதன் விளைவு தான் மகேந்திரப் பல்லவனுக்கும் அவனுக்கும் இடையே நிகழ்ந்த போர். யாரை மறந்தாலும் இரண்டாம் நந்திவர்ம பல்லவனை மறக்க முடியவில்லை. 'பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி' என்று பாராட்டப் பெறும் நந்திவர்ம பல்லவன் தமிழுக்காக உயிரையே விட்ட உத்தமன். 'நந்திக் கலம்பகம்' கதை தான் உனக்குத் தெரியுமே......!

காஞ்சியின் வனப்பிலே வெளி நாட்டாரும் தங்கள் உள்ளங்களைப் பறிகொடுத்திருக்கிறுர்கள். யுவான் சுவாங் என்ற சீனப் பெரியாரைப்பற்றி உன் வரலாற்றுப் புத்தகத்தில் படித்திருப்பாய்! அவர் ஏழாம் நூற்றுண்டில் இந்தியாவுக்கு வந்தார். காஞ்சிபுரத்திற்கும் வந்தார். செழிப்பான காஞ்சி நகரின் வனப்பு அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. கல்வி கேள்விகளிற் சிறந்தவர் வாழும் நகரம் காஞ்சிபுரம் என்றும், வாய்மை நெறி வழுவாத மக்கள் அங்கு வாழ்பவர் என்றும் நெஞ்சாரப் பாராட்டினுர் அவர். அவரது குறிப்புப்படி கி.மு. 5-ம் நூற்றுண்டில் இருந்த புத்தர் காஞ்சிபுரத்திற்கு வந்து சமய உண்மைகளை உரைத்தார்; அசோக மன்னன் பல தூபிகளை இங்கே நாட்டி, புத்த சமயக் கொள்கைகளைப் பரப்பினுன் என்றும் நாம் அறிகிறோம்.

இந்நூற்றுண்டில் வாழ்ந்த கெட்டிஸ் என்னும் மேனுட்டுக்காரர் காஞ்சியைப் பற்றி மிகவும் மேம்படவே கூறியுள்ளார். ''காஞ்சியின் நகரமைப்புக்கு இணையாக ஒன்று உலகில் உள்ள வேறு எந்த நகரத்திலும் இல்லை. வீடுகள் தெரு மட்டத்திற்குப் பல அடிகள் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளன. மேனுட்டு நகரங்களில் காணப்படும் சந்துகளும் அழுக்கும் காஞ்சியில் இல்லை'' என்று பாராட்டுகிறுர் கெட்டிஸ்.

நண்பா.. காஞ்சிமாநகரம் இருக்கிறதே அது கலைத்தெய்வம் மணக்கும் திரு நகரம். எம்மருங்கும் கோயில்களும், கோட்டங்களும் நிறைந்து கலையொளி வீசும் இந்நகரில், செல்வம் நிறைந்த இத்திரு நகரில் கோயில்கள் பல உள்ளன. கைலாயநாதருக்கு ஒரு கற்கோயில் கட்டினுன் ராஜசிம்மன் என்னும் பல்லவ மன்னன். காஞ்சியில் பசுமையான வயல்கள் மரகதப் படுதா விரிக்க நடுவில் பெருமிதத்துடன் நிற்கிறது இக் கோயில். கட்டடக் கலையில் பல்லவர் கண்ட புதுமையின் அழியாச் சின்னமாகத் திகழ்கிறது கைலாசநாதர் கோயில். ஒப்பற்ற சிற்பங்களைத் தன்னகத்தே கொண்ட இக் கோயில் எட்டாம் நூற்றுண்டில் கட்டப்பட்டது. ஆனுல், இன்றும் நம் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு, காலவெள்ளத்தையும் மீறி, நமக்கெல்லாம் உவகை ஊட்டுகிறது. இப்படி எத்தனை எத்தனையோ கோயில்கள்! வரதராசப் பெருமாள் கோயில் வரலாற்றுப் புகழ் பெற்றது. இக்கோயிலினுள் அமைக்கப் பெற்றுள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் ஒவ்வொரு தூணும் ஒரு கதை சொல்லும்; கண்டவர் உள்ளங்களைக் கிறங்க வைக்கும்; அவ்வளவு அற்புதமான சிற்பங்கள் ஒவ்வொரு தூணிலும் உள்ளன. இக் கோயிலில் விலை உயர்ந்த ஆபரணங்கள் உள்ளன. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடி கோலினுனே ராபர்ட் கிளைவ். அவன் ''மகரகண்டி'' என்னும் நவரத்தினங்கள் இழைக்கப்பெற்ற விலையுயர்ந்த ஆபரணத்தையே இக்கோயிலுக்குக் கொடுத்துள்ளான்!


உலகம் கண்டு வியந்து பாராட்டும் ஏகாம்பரநாதர் கோயில் கி.பி. ஏழாம் நூற்றுண்டுக்கு முன் கட்டப்பட்டது. இக் கோயிலின் கம்பீரமான வானளாவிய கோபுரங்கள் நம்மைப் பிரமிக்க வைத்து விடுகின்றன. உன்னதமாக நிமிர்ந்து நிற்கும் தென் கோபுர வாயிலை விசய நகர மன்னன் கிருஷ்ணதேவராயன்தான் கட்டினுன். இக் கோபுரம் 192 அடி உயரம் உள்ளது. தமிழகத்தின் உயர்ந்த கோபுரங்களில் இதுவும் ஒன்று. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த வைகுண்டப் பெருமாள் கோயில் தவருமல் பார்க்க வேண்டிய ஒன்ருகும். காமாட்சி அம்மன் கோயில், குமரக் கோட்டம், உலகளந்த பெருமாள் கோயில், கச்சபேசுவரர் கோயில், இப்படிக் காஞ்சியில் உள்ள கோயில்களை அடுக்கிக் கொண்டே போகலாம்! காஞ்சியில் திரும்பிய பக்கமெல்லாம் கோயில்கள் தான்! இப்படி ஒரு நகரத்தை எங்குமே பார்க்க முடியாது. சுற்றுலா வருவோர்க்குக் கண் நிறைந்த, கருத்துச் செறிவுள்ள, கலைப் பெட்டகங்கள் ஏராளமாக உண்டு காஞ்சியிலே!

வேகவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ள பொன்னகர்க் காஞ்சிக்கு மேலும் பெருமை தேடித் தருவது கன்னியர் கருத்தைக் கவரும் பட்டுப்புடவைகள். உலகப் புகழ் பெற்ற காஞ்சிப் பட்டுக்கு இணை காஞ்சிப்பட்டு தான். இன்னும் காஞ்சிபுரம் இட்லி, பன்னீர் சோடா என்று அடுக்கிக்கொண்டே போகலாம்!

"நிறுத்து! எல்லாவற்றையும் சொல்லிவிட்டாயே; முக்கியமான ஒன்றை விட்டுவிட்டாயே!" என்று நீ முணு முணுக்கிறது எனக்குப் புரிகிறது. உண்மை தான். இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற தலைவர் அண்ணுவைப்பற்றிச் சொல்லவில்லையென்ருல், காஞ்சியின் புகழ் நிறைவு பெற்றதாகாது என்பது முழுக்க முழுக்க உண்மை தான். பார் புகழ் மன்னர்களைப்பற்றி, அறிவுசால் ஆன்ருேர்களைப் பற்றியெல்லாம் சொன்னேன். காஞ்சி தந்த செம்மல் அண்ணுவைப் பற்றி என்ன சொல்ல வேண்டியிருக்கிறது? மகேந்திரப் பல்லவனின் சாணக்கியம், கரிகாற்பெருவளத்தானின் கம்பீரம், தர்மபாலரின் நுண்ணறிவு, மாமல்ல பல்லவனின் வீரம், இராசசிம்மனின் கலை ஆர்வம், நந்திவர்மனின் தமிழ்ப்பற்று—இவற்றின் மொத்த உருவம்தான் அண்ணு! இப்பொழுது புரிகிறதா நண்பா, காஞ்சி மண்ணில் அண்ணு பிறந்ததின் உட்பொருள்?

உன் நண்பன்.


YALE




சீரணி துவக்க விழா

# வண்ணப் படங்களில்

## முதல்வர் அண்ணா

### 42-ஆம் பக்கத்தில்..!

* சீரணித் துவக்க விழா 1967-ல் நடைபெற்றபோது அண்ணாவும் இந்நாள் முதல்வர் கலைஞர் அவர்களும் பங்கு கொள்ளும் காட்சி.

* சீரணித் துவக்க விழாவைக் கண்டு களிக்கும் மக்கள் கூட்டமும்—சீரணித் தொண்டர்களும்.

* சிகிச்சைக்காக அமெரிக்காவுக்குப் புறப்படுகிறார் அண்ணா. அருகிலே கலைஞரும், மறைந்த டாக்டர் சதாசிவம் அவர்களும் உள்ளனர்.

* உலகத்தமிழ் மாநாட்டு ஊர்வலக் காட்சியை (மறைந்த) குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்களுடனும் தமிழக ஆளுநர் உஜ்ஜல்சிங், அவர்தம் துணைவியார் ஆகியோருடனும் அண்ணா காண்கிறார்.

* ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தின் போது ரோமாபுரியில் போப் ஆண்டவரைச் சந்தித்துக் கை குலுக்குகிறார் அண்ணா.

* பார்போற்றும் படியரிசித் திட்டத்தை 15—8—1968 அன்று வில்லிவாக்கம் பகுதியில் துவக்கி வைக்கிறார் அண்ணா.

* 15—5—1967 அன்று, ஊட்டியில் நடைபெற்ற பத்தாவது தென் மண்டலக்குழுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்களுடனும் மாநில அமைச்சர்களுடனும் காட்சி தருகிறார் அண்ணா.

* தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை 15—8—1968 அன்று துவக்கி வைத்து, ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களிடம் பரிசுச் சீட்டை விற்பனை செய்கிறார் அண்ணா.

* காமராசருடன் அன்போடு உரையாடுகிறார் அண்ணா.

* 13—12—1967-ல் சென்னைக்கு வருகை புரிந்த லாவோஸ் மன்னருடனும் இளவரசியுடனும் அண்ணா.

* தருமபுரம் தம்பிரான் தமிழ்த் தாயின் தவப்புதல்வர் அண்ணாவுக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.

* 24—3—1967 அன்று, ஊட்டியில் உள்ள தோடர்களைச் சந்தித்து அவர்களுடன் அளவளாவுகிறார்.

# செடிகளுக்கு டானிக்

ஆரஞ்சு, எலுமிச்சை, கொடி எலுமிச்சை, பப்ளிமாஸ், துருஞ்சி, கடார நாரத்தை ஆகியவைகள் நாரத்தை (Citrus) வகையில் அடங்கும். பொதுவாக நாரத்தை வகைகளில் நுண்ணூட்டகங்களின் குறைவால் நோய் ஏற்படும். நாம் 'டானிக்' சாப்பிட்டு உடல்நலம் பெறுவதுபோல், நாரத்தை வகைச் செடிகளுக்கும் 'டானிக்' தெளித்து, நோய்களைத் தவிர்த்து மகசூலைப் பெருக்கலாம். கீழ்க் காணும் நுண்ணூட்டகங்கள் கலந்த டானிக்கை 3 மாதத்திற்கு ஒரு முறை, நாரத்தை வகைச் செடிகளின் மேல் தெளித்தால் செடிகள் செழிப்புடன் வளர்ந்து பெரும் பலன் அளிக்கும்.

| | |
|---|---|
| மயில் துத்தம் (காப்பர் சல்பேட்) .. | 1,350 கிராம். |
| துத்தநாக சல்பேட் (சின்க் சல்பேட்). | 2,250 ,, |
| மக்னீசியம் சல்பேட் .. .. | 900 ,, |
| மாங்கனீஸ் சல்பேட் .. .. | 900 ,, |
| போராக்ஸ் .. .. .. | 450 ,, |
| பெர்ரஸ் சல்பேட் .. .. | 900 ,, |
| யூரியா .. .. .. | 900 ,, |
| சுண்ணாம்பு .. .. .. | 4,050 ,, |
| ஈரக் கந்தகம் .. .. .. | 2,250 ,, |
| தண்ணீர் .. .. .. | 450 லிட்டர் (100காலன்) |

முதலில் காப்பர் சல்பேட்டையும், சுண்ணாம்பையும் கொண்டு போர்டோக் கலவையைத் தயார் செய்து கொள்ளவும். பின் மற்றவைகளை ஒவ்வொன்றாகக் கலந்து தெளிக்கவும்.

* 4—8—1968அன்று மாநகராட்சித் தொடக்கப்பள்ளிச் சிறுவர் சிறுமியருக்குப் புத்தகங்கள், சிலேட்டுகள் ஆகியவற்றை அண்ணா வழங்குகிறார்.

### 39-ஆம் பக்கத்தில்..!

* சென்னைக்குக் குடிநீர்ப் பெருக்கத் திட்டத்தைத் துவக்கி வைக்கிறார் அண்ணா.

* காவிரி அன்னை சிலை வடிவில் காட்சி தருகிறாள்.

* அந்தமான் செல்லும் வழியில் தமிழகத்துக்கு வந்திருந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களை சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மலர்மாலையுடன் வரவேற்கிறார் அண்ணா.

* மாநில சங்கீத நாடக சங்கத்தார் நடத்திய விழாவில் பங்கேற்று, அவர்கள் தனது தம்பி கலைஞர்க்குப் பரிசளித்த விருதினைப் பெருமகிழ்வுடன் அவரிடம் கொடுக்கிறார் அண்ணா.

* யேல் பல்கலைக் கழக வரலாற்று நூலை 24—4—1968 அன்று, அண்ணா பார்வையிடுகிறார்.

* 22—11—1968-ல் உலக வங்கித் தலைவர் மக்னமாராவை, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் சந்திக்கிறார் அண்ணா.

* இந்தியாவிலுள்ள இங்கிலாந்து நாட்டு தூதர் சர் மோரிஸ் ஜேம்சுடன் அண்ணா.

* இன்று, மாட மதுரையில் பிரம்மாண்டமாகக் காட்சி தரும் மதுரை—இராமநாதபுரம் மாவட்டங்களுக்குரிய நீதிமன்றக் கட்டடத்திற்கு 16—4—1967 அன்று அடிக்கல் நாட்டுகிறார் அண்ணா.

* பேருந்து நாட்டுடைமையாக்கல் துவக்க விழாவில் அண்ணாவும் கலைஞரும் கலந்து கொள்ளும் காட்சி.

* வரலாற்றை மாற்றி வைத்த 6—3—1967 அன்று, ராஜாஜி மண்டபத்தில் பதவி ஏற்கிறார் அண்ணா.

* 19—9—1967 அன்று, கூவம் சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார் அண்ணா. மறைந்த உணவமைச்சர் ஏ. கோவிந்தசாமி, அண்ணாவின் அருகில் அமர்ந்திருக்கிறார்.

உணவுப் பழக்க வழக்கங்களை எளிதில் உடனடியாக யாரும் மாற்றிக்கொள்ள முடியாதுதான். ஆனால், பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் உணவு முறைகளைத்தான் நாம் கடைப்பிடித்து வருகிறோம் என்றும் சொல்லவும் முடியாது.

வளர்ந்து வரும் உலகில் நமது தேவைகளை ஒட்டிச் சில மாற்றங்களை நம்மை அறியாமலேயே செய்து கொள்ளுகிறோம். நாம் நாகரிகம் என்ற பெயராலும் பல மாற்றங்களைச் செய்து கொள்ளுகிறோம்.

எடுத்துக்காட்டாகக், கற்றுணர்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள் கூடக் கைக் குத்தல் அரிசி உணவை உட்கொள்வதை அநாகரிகம் என்று எண்ணுகிறார்கள். இப்படி, சத்துணவா ? சத்துணவில்லையா ? என்பதைக் கூட நினையாது நாகரிக மோகத்தால் உணவை மாற்றிக்கொள்ளுகிறார்கள்.

அந்த அளவுக்கு, எந்தக் காரணம் கொண்டும் அடியோடு உணவு முறைகளை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று நாம் வலியுறுத்தவில்லை. ஆனால், காலமறிந்து நாட்டின் சூழ்நிலை அறிந்து உணவு முறைகளில் நாம் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். அப்படி நாம் பழக்கப்படுத்திக் கொள்ளும் புதிய உணவு முறைகள் சத்துள்ள உணவுகளாக அமைதல் வேண்டும். அந்த அடிப்படையில் தான் அயல் மாநிலங்களில் வழக்கத்திலுள்ள சில உணவு வகைகள், செயல் முறைகளை இங்கே குறிப்பிடுவோம்.




### பசரட்டு.

இது மராட்டிய மாநிலம் குஜராத் மாநிலம் ஆகிய இடங்களில் வழங்கும் சிற்றுண்டியாகும்.

பத்துப் பேருக்குச் செய்ய வேண்டிய அளவு தேவையான பொருள்கள் வருமாறு :

| | |
|---|---|
| பயத்தம்பருப்பு | 500 கிராம் |
| கொத்தமல்லித்தழை | 50 கிராம் |
| வெங்காயம் | 150 கிராம் |
| இஞ்சி | 50 கிராம் |
| பச்சை மிளகாய் | 50 கிராம். |
| உப்பு | 30 கிராம். |
| வதக்க எண்ணெய் | போதிய அளவு |
| சீரகம் | 10 கிராம். |
| தண்ணீர் | 738 மிலி. |

செய்முறை :

1. பயத்தம்பருப்பை முதல் நாள் இரவு ஊறவைத்து இட்லி மாவு மாதிரி அரைத்துக் கொள்ளவும்.

2. நறுக்கிய கொத்தமல்லி வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய், சீரகத்தைக் கலக்கவும்.

3. உப்பைச் சேர்த்துப் போதுமான தண்ணீர் விட்டுத் தோசை மாவு மாதிரி செய்து கொள்ளவும்.

4. தோசைக் கல்லில் தோசை மாதிரி வார்த்துச் சூடாக உண்ணலாம்.

சுவையான இந்தச் சிற்றுண்டியைப் பத்துப் பேர் சாப்பிட்டால் ஒவ்வொருவருக்கும் 12·8 கிராம் புரதச் சத்துக் கிடைக்கும்.

### சேப்பங்கிழங்கு உருண்டை.

இதுவும் மராத்தி, குஜராத் மாநிலங்களில் வழக்கத்திலுள்ளதாகும்.

தேவையான பொருள்கள் :

| | |
|---|---|
| சேப்பங்கிழங்கு | 225 கிராம் |
| தேங்காய் | 55 கிராம் |
| வெங்காயம் | 30 கிராம் |
| மிளகாய் வற்றல் | 5 கிராம் |
| உப்பு | சுவைக்கு ஏற்றபடி |
| சோடா உப்பு | ஒரு சிட்டிகை |
| கடலைமாவு | 55 கிராம் |
| இஞ்சி | 5 கிராம் |
| வதக்க எண்ணெய் | 30 கிராம் |

செய்முறை :

1. சேப்பங்கிழங்கைக் கழுவித் தோலைச் சீவவும். வேகவைத்து நசுக்கிக் கொள்ளவும்.

2. தேங்காய், மிளகாய், வெங்காயம், இஞ்சி, இவற்றுடன் சிறிது உப்பைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

3. சிறிது எண்ணெய்யில் தேங்காயையும், எல்லா மசாலாவையும் வறுக்கவும்.

4. கடலை மாவையும் உப்பையும் சேர்த்துக் குழம்பாக்கிக் கொள்ளவும்.

5. நசுக்கிய சேப்பங்கிழங்கைச் சிறு சிறு உருண்டையாக்கிக் கொள்ளவும்.

6. தேங்காயை உருண்டைக்குள் வைத்து மூடவும்.

7. உருண்டையைக் கடலே மாவுக் குழம்பில் நனைத்து எண்ணெய்யில் பொறிக்கவும்.

சுவையாக உள்ள இவ்வுருண்டைகளை நான்கு பேர் சாப்பிடலாம்.

## துதி மூத்தியா.

' துதி மூத்தியா ' என்ற பெயரைக் கேட்கும் பொழுதே குழப்பம் ஏற்படுகிறதல்லவா ? இது கேரள மாநிலத்தில் வழக்கிலுள்ள ஒரு கலவை உணவுப் பொருளாகும்.

பத்துப் பேருக்குத் ' துதி மூத்தியா 'சமைத்திடத் தேவையான பொருள்கள் வருமாறு :

கடலே மாவு 500 கிராம்.
கோதுமை மாவு 115 கிராம்.
பூசணிக்காய் 500 கிராம் (நறுக்கியது).
பச்சைமிளகாய் 6 கிராம்.
கறிவேப்பிலே 1 கொத்து.
இஞ்சி 1 துண்டு.
பச்சைக் கொத்தமல்லி கொஞ்சம்.
சீரகப்பொடி 1/4 தேக்கரண்டி.
மிளகாய்ப்பொடி 1 தேக்கரண்டி
மஞ்சள் கொஞ்சம்.
கடுகு கொஞ்சம்.
உப்பு, சர்க்கரை—சுவைக்கு ஏற்றபடி.
எண்ணெய் 30 மிலி.
எண்ணெய் தாளிக்க 60 மிலி.

**செய்ம்முறை :**

1. கடலே மாவு, கோதுமை மாவு, பச்சை மசாலா ,மசாலாப் பொடிகள், நறுக்கிய பூசணிக்காய், எண்ணெய், உப்பு, சர்க்கரை ஆகியவைகளை நன்ருகச் சேர்த்துக் கலக்கவும்.

2. எண்ணெய் ஊற்றிய பாத்திரத்தில் கலவைகளைப் போட்டு வேக வைக்கவும்.

3. எண்ணெய்யை அடுப்பில் வைத்துக் கடுகையும், பெருங்காயத்தையும் சேர்க்கவும்.

4. கடுகு வெடித்தவுடன் சமைத்த பொருளைப் போட்டுக் கலக்கவும்.

சூடாகச் சாப்பிடவும். சுவை மிகுதியாகத் தெரியும்.

—அஞ்சனு




சிறு அளவு நிலமுடைய உழவர்களும், வேளாண்மைத் துறையினரால் பரிந்துரைக்கப்படும் அளவு இரசாயன உரங்களை வாங்கிப் பயன்படுத்தி. உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்பதற்காகவே, தமிழ்நாடு அரசு ஐ.எம்.எஸ். (Intensive Manuring Scheme) என்னும் திட்டத்தின்கிழ், இரசாயன உரங்களுக்காகக் கீழ்க்கண்டபடி கடன் கொடுத்து உதவுகிறது.

| பயிரின் பெயர். | ஏக்கருக்குக் கொடுக்கப்படும் கடன் தொகை. (ரூபாய்). | ஒருவருக்குக் சொந்தப் பொறுப்பில் கொடுக்கப்படும் உச்ச அளவுக் கடன் தொகை. (ரூபாய்). | அதிகப்படியாக ஈடு காட் பிணையில் கொடுக்கப்படும் உச்ச அளவுக் கடன் தொகை. (ரூபாய்). |
|---|---|---|---|
| சாதாரண நெல் வகைகள் | 80 | 750 | 1,000 |
| சாதாரண சோளம், கம்பு, ராகி வகைகள். | 75 | 750 | 1,000 |
| கரும்பு | 400 | 1,500 | 1,750 |
| இறவை மணிலா | 65 | 750 | 1,000 |
| மாஞவாரி மணிலா | 35 | 500 | 750 |
| இறவைப் பருத்தி | 80 | 75 | 1,000 |
| மாஞவாரிப் பருத்தி | 40 | 500 | 750 |
| புகையிலே | 115 | 800 | 1,000 |
| தென்னே, பாக்கு | 130 | 1,000 | 1,250 |
| காய்கறிகள் | 130 | 1,000 | 1,250 |
| மிளகாய் | 115 | 800 | 1,000 |
| வெங்காயம் | 130 | 1,000 | 1,250 |
| எள் | 50 | 500 | 750 |
| வேர்க்கிழங்குகள் | 180 | 1,000 | 1,250 |
| உருளேக்கிழங்கு | 310 | 1,000 | 1,250 |
| வாழை | 600 | 1,500 | 1,750 |
| கரும்பு தவிர மற்றப் பயிர்களே இணைத்துப் பயிரிட்டால். | .. | 1,250 | 1,500 |
| கரும்பும், மற்றப் பயிர்களும் இணைத்துப் பயிரிட்டால். | .. | 1,500 | 1,750 |

உரம் வாங்கப் பணம் இல்லேயே என்று கவலேப்படாமல், உடனடியாக உங்கள் ஊர்ப் பணியாளர் மூலமாக ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு விண்ணப்பம் அனுப்புங்கள்.

## யார் முட்டாள்?



அந்த இளைஞன் புதிதாக ராணுவத்தில் சேர்ந்தவன். அவனுக்கு ஜெர்மானிய மொழி தெரியாது. ஆனால் அணிவகுப்பின் போது புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள வீரர்களை ஜெர்மன் நாட்டு மன்னர் மூன்று கேள்விகள் கேட்பது வழக்கம்.

முதல் கேள்வி: உனது வயது என்ன? இரண்டாவது கேள்வி: ராணுவத்தில் சேர்ந்து எவ்வளவு நாளாகிறது? மூன்றாவது கேள்வி: துணி, உணவு எல்லாம் வசதியாக உள்ளதா?

எனவே, ராணுவத்திலுள்ள பழைய வீரர்கள், அந்தப் புதிய வீரனுக்கு அந்தக் கேள்விகளுக்கான பதில்களை மட்டும் ஜெர்மானிய மொழியில் சொல்லித் தந்திருந்தனர். வீரனும் அதை மனப்பாடம் செய்து கொண்டான்.

அணிவகுப்பு நாளும் வந்தது. மன்னர் புதிய வீரனைப் பார்த்தார். கேள்விகளைத் தொடுத்தார். ஆனால் கேள்விகளைத் தான் மாற்றிக் கேட்டு விட்டார். விஷயம் தெரியாத வீரன் தனக்குச் சொல்லித் தந்தபடியே மனப்பாடம் செய்து பதில்களை உதிர்த்தான்.

மன்னர்: நீ ராணுவத்தில் சேர்ந்து எவ்வளவு நாளாகிறது?

வீரன்: 25 வருடங்கள்

மன்னர்: உன் வயது என்ன?

வீரன்: மூன்று நாட்கள்.

மன்னர்: என்னை முட்டாள் என்று நினைத்துக் கொண்டு இப்படி பதிலுரைக்கிறாயா?

வீரன்: ஆமாம் மன்னவா!

---

## உங்களுக்குத் தெரியுமா?


நெற்பயிர்களுக்குள் எலிகளினால் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பதற்கு ஆடுதுறை விவசாயப்பண்ணையில் ஒரு புதிய முறையினைக் கையாளுகிறார்கள்.

நெல் வயலைச் சுற்றிக் கம்பிகளினால் ஒன்றரை அடி உயர வேலியை அமைத்திருக்கிறார்கள். இரவு நேரங்களில் இந்தக் கம்பிகளில் மின்சாரம் பாய்ச்சப்படுகிறது. எலிகள் இந்தவயல்களுக்குள் நுழைய முயன்றால், இந்தக் கம்பிகளில் ஓடும் மின்சாரம் அவற்றைத் தூக்கித் தூர எறிந்துவிடும். எனவே, எலிகள் உள்ளே புகமுடியாது.

தஞ்சாவூர் மாவட்டம் கொண்டாங்குடி கிராமத்தில் வயல் வெளிகளில் எலிகள் நெற் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்காமல் தடுப்பதற்காக எலி பிடிப்பவர்களுக்கு எலிக்கு 15 காசு வீதம் பணம் தருகிறார்கள்.


அந்தக் கிராமத்தில் ஒரு தகப்பனும் மகனும் நாளொன்றுக்கு சுமார் 100 எலிகளைப் பிடித்து அதன் மூலம் மாதம் ரூ. 150 சம்பாதிக்கின்றனர்.

---




ஆபீசுக்கு, அல்வா டிபன் செய்து அனுப்பினேனே! எப்படி இருந்தது?

100 கவர் ஒட்டுவதற்குச் சரியா இருந்தது.




சர்வர்: சார்! வடையையென்ன அப்படிப் பார்க்கிறீங்க?

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்: கி. மு.-வா? கி. பி.-யா? எப்போது செய்தது என்று கண்டு பிடிக்கிறேன்.




'' என்னப்பா ! எப்போ பார்த்தாலும் வீட்டிலே இருக்கச் சொல்றே ; எல்லாரும் வெளியூர் போறாங்க ; ராமன் திருநெல்வேலி போறான்; அவன் அண்ணன் சங்கர் பம்பாய் போகிறான் ; நான் மட்டும் வீட்டிலேயே...... எப்போ பார்த்தாலும். . . .''

''எங்கேடா நாம் போகிறது ? வெளியூர் போகப் பணம் வேணுமடா ; நம்ம வருவாய்க்கு அப்படியெல்லாம் போக முடியுமா?''

''என்னப்பா இது? எப்போதும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுறே ; பணமில்லை ; பணமில்லைண்ணு நீ சொல்லிக்கிட்டே இருக்கிறே ; சரி. ரொம்ப தூர ஊருக்குப் போக வேண்டாம் ; பக்கத்து ஊருக்கு எங்கேயாவது போகலாமா ?''

'' சரி ; நீ விடமாட்டே ! வேடன் தாங்கல் போகலாமா?''

'' அப்படீன்னா ! அது எங்கே இருக்கு ?''

'' அதுவா ? அது நம்ப பட்டணத்திலிருந்து 52 மைல் தூரத்திலே இருக்குது ; அங்கே போகலாம் ''

''அங்கே கடல்இருக்கா ? மலையிருக்கா ? சினிமா பார்க்க முடியுமா? என்ன ஊரப்பா அது ?''


''அடே சாமிநாதா ! அங்கே கடலும் இல்லை ; மலையும்இல்லை; பரந்து விரிந்த கடல்போன்ற ஏரி; கரையை மோதும் அலைகள் ; 30 ஏக்கர் பரப்புள்ள தோப்பு; அத்தோப்பிலே 550க்கும் மேற்பட்ட எத்தனையோ வகையான மரங்கள் ; அவற்றிலே பல தண்ணீரிலே சாய்ந்து பாதிக்கும் மேலாக மூழ்கிக் கிடக்கும் தோற்றம் ; அந்தப் பெரிய மரங்களின் கிளைகளிலே கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் பறவைகள் ! அவை நீரிலே மூழ்கி இரைகளைப் பிடிப்பதும், பல வகை ஒலிகளை எழுப்பி வானிலே பறப்பதும், குஞ்சுகளோடு கொஞ்சிக் கொண்டு இரை ஊட்டுவதும் எவ்வளவு அழகான காட்சி தெரியுமா ?''

''அப்பா! அப்பா! இந்த வேடன்தாங்கல் எங்கே இருக்கிறது ? நாம் போய் வரலாமா?''

''பொறுடா சாமி ! அவசரப்படாதே ; இது செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கிறது; தலைநகரிலிருந்து 52 மைல் என்று முன்னரே சொன்னேனல்லவா ? இந்த வேடன் தாங்கலிலுள்ள சிற்றேரியின் இடையே கடப்ப மரத் தோப்பு இருக்கிறது ; அந்தக் கடப்ப மரங்கள் இருபதடிக்குமேலே உயரமுள்ளவை ; பரந்து பருத்த கிளைகளை உடையவை ; இக் கிளைகளில் சரஞ்சரமாய்த் தொங்கும் சின்னஞ்சிறுபூக்களைக் காண இனிமையாய் இருக்கும்''

'' அப்பா ! கடப்பமரம் என்றாயே ! அது என்ன மரம் ? தினந்தோறும் - 'கந்தா ! கடம்பா ! 'கதிர்வேலா' என்று கண்ணை மூடிக் கொண்டு யாரையோ கூப்பிடுவாயே ! அந்தக் கடம்ப மரமா ?''

''போடா ! குறும்புக்காரப் பயலே ! இது அந்தக் கந்தனுக்குரிய கடம்ப மரமில்லை ! கடம்பு என்று ஒரு மரம் உண்டு ; உண்மைதான் ; கடம்புப் பலகை படுக்க நல்ல பலகை ; உழைத்து வந்தவர்க்கு ஓய்வு கொடுக்கக் கடப்ப மரம் மிகவும் உதவியாக இருக்கும். 'உடம்பை முறித்துக் கடம்பிலேபோடு' என்று சொல்வார்கள்.''




'' சரியப்பா ! அது இருக்கட்டும் ; வேடன் தாங்கலில் என்ன என்ன பறவைகள்இருக்கின்றன?

# இரட்டிப்பு லாபம்!



## இன்ப வாழ்வுக்காக நீங்கள் தரப்போவதோ மிக மிகச் சொற்பம்

நீங்கள் வாங்கும் பரிசுச் சீட்டு; உங்கள் வாழ்க்கையில் வாய்க்க இருக்கும் வளத்துக்கு ஏணிப்படி! உங்கள் லட்சியக் கனவில் மலர்ந்துள்ள சொகுசு இல்லம்!

தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தில் பரிசு பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. நீங்கள் லட்சாதிபதியாகும் பேற்றினை நழுவ விடாதீர்கள்!

அதிக உணவு, உடை, நல்ல வீடுகள், இலவசக் கல்வி, தேவையான மருத்துவ வசதிகள் எல்லாம் சரிவரக் கிடைப்பதற்காக தேசிய திட்டங்களில் உங்கள் முதலீடு செலவழிக்கப்படுகிறது.

தேசம் வளமாக உங்கள் பணம் பயன்படட்டும்.

**அடுத்த குலுக்கலுக்கான பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000**

**ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000**

**குலுக்கல் தேதி: 25-9-1970**

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 181 பேர்

**பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!**

**இன்றே வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**




வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு
செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

எத்தனை பறவைகள் இருக்கின்றன ?''

'' சாமிநாதா ! இங்கே தண்ணீரில் வாழும் பறவைகளில் மட்டும் பதினான்கு வகைகள் இருக்கின்றன ; அவை நீர் மட்டத்தின் மேலுள்ள கிளைகளில் அடுத்தடுத்துக் கூடுகட்டிக் கூட்டம் கூட்டமாய் வாழ்கின்றன; மொத்தம் எத்தனை பறவைகள் என்று எப்படிச் சொல்ல முடியும்? மக்களைப்போல நிலையாகப் பறவைகள் வாழ்வதில்லையே ! இயற்கை அன்னை அவற்றிற்கு இறகு கொடுத்திருக்கிறாள். வானிலே பறந்து ஊர் ஊராக, தேசம் தேசமாக அவை செல்லுவது இயல்பு ; 'விட்டு விடுதலையாகி நிற்பாய் சிட்டுக் குருவியைப் போலே ' என்று நீ பாடப் புத்தகத்தில் படித்திருக்கிறாயல்லவா ? ஆனாலும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகள் இருப்பதாகப் பறவை நிபுணர்கள் சொல்கிறார்கள்''

'' பத்தாயிரமா ? அப்பப்பா ! இந்தப் பத்தாயிரமும் நம் ஊர்ப் பறவைகளா? வெளியூரிலிருந்தும் ஏதாவது வருவதுண்டா ?''

'' என்ன கேள்வியடா இது ? நாம் சிறகில்லாமலே வெளியூர் போக விரும்புகிறோம் ; போயும் வருகிறோம் ; பறக்க வசதியான இறகும், சிறகும், உள்ள பறவைகள் இங்கிருந்து வெளியூர் செல்வதும், வெளி நாடுகளிலிருந்து நமது ஊருக்கு வருவதும் இயற்கைதானே ! வட நாட்டிலிருந்து வருகின்றன ; சைபீரியா, ரஷ்யா முதலிய நாடுகளிலுமிருந்தும் வருகின்றன ; இங்கே சில மாதங்கள் தங்குகின்றன. பின் தம் தாய்நாடு நோக்கித் திரும்பியும் போகின்றன.''

'' என்னப்பா இது ? ரஷ்யாவிலிருந்து பறவை வருகிறது என்பதை எப்படி நம்ப முடியும் ? சும்மா ஏனப்பா கதை சொல்கிறாய் ? அவ்வளவு தூரத்திலிருந்து வருகிறது என்பதை எப்படி நீ சொல்கிறாய் ?''

'' ஆதாரமில்லாமலா நான் சொல்வேன் ? ஏறக்குறைய இருபதாண்டுகட்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் சொல்கிறேன். வேடன் தாங்கலிலே குண்டுபட்டுக் கிளுவைப் பறவை ஒன்று கீழே வீழ்ந்தது ; அதை எடுத்தபோது அதன் காலிலே காப்பு ஒன்று பூட்டப்பட்டிருந்தது : அதைப் பார்த்த போது அதில் 'மாஸ்கோ' என எழுதப்பட்டிருந்தது; 'மாஸ்கோ' ரஷ்யாவின் தலை நகரமல்லவா ? ஆகவே இந்தக் கிளுவைப் பறவை ரஷ்யாவிலிருந்து இங்கே வந்திருக்க வேண்டுமெனப் பறவை நிபுணர்கள் முடிவு செய்தனர் ''.

'' ஏனப்பா, இந்தப் பறவைகளின் கால்களில் பெயர் பொறித்துக் காப்புக் கட்டுகிறார்கள் ?''

'' உன் தம்பி செயராமன் எங்கெல்லாம் போகிறான் என்பதை மாலையில் அம்மா துப்புத் துலக்குவதில்லையா? அதுபோலப் பறவைகள் செல்லுமிடங்களை அறியப் பறவை நிபுணர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் பறவைகள் குஞ்சுகளாக இருக்கும்பருவத்திலேயே அவற்றின் கால்களில் அந்த ஊரின் பெயர் எழுதிய காப்புக்களைக் கட்டுவது வழக்கம்.''

'' ஏனப்பா, அப்படிக் கட்ட வேண்டும் ?''

'' சரியான கேள்விதானடா இது ; இப்படிப் பெயர் எழுதிய காப்புக் கட்டப்பட்ட பறவை ஏதாவது அயல் நாடுகளில் சுட்டுக் கொல்லப்பட்டால் இன்ன விடத்தில் அது சுடப்பட்டது என்ற குறிப்புடன் அந்தக் காப்பை அதில் குறித்துள்ள ஊருக்கு அனுப்புவது வழக்கம்''

'' ஆமாம் அப்பா ! போன மாதம் நானும் அண்ணன் வேலுவும் நம் தோட்டத்தில் ஒரு நாள் உட்கார்ந்திருந்த போது கிணி கிணி' என்று சின்ன மணி ஓசை கேட்டது ; திரும்பிப் பார்த்தோம் ; ஒரு காக்கை மரக்கிளையில் வந்து உட்கார்ந்தது ; அதன் காலில் இரு சிறு மணிகள் தொங்கின. யாரப்பா அந்த மணிகளைக் கட்டினார்கள் ? ஏன் கட்டினார்கள் ?''



## வாழைக்கு நிகரேது?

அந்நியச் செலாவணியைத் திரட்டித் தருவதில் வாழைக்கு நிகரான பயிர் எதுவுமில்லை. தற்பொழுது அந்நியச் செலாவணியை அள்ளிக்கொடுத்திடும் மிளகு, முந்திரிப்பருப்பு, சர்க்கரை, காப்பி ஆகியவைகளைக் காட்டிலும் வாழை அதிக அளவு அந்நியச் செலாவணியை அளித்திடும். 1,000 ஏக்கரில் விளைந்த மிளகு 4·3 லட்சம் ரூபாயையும், முந்திரிப்பருப்பு 12 லட்சம் ரூபாயையும், சர்க்கரை 16·6 லட்சம் ரூபாயையும், காப்பி 19·7 லட்சம் ரூபாயையும் அந்நியச் செலாவணியாகக் கொடுத்திடும். ஆனால் 1,000 ஏக்கரில் விளைந்த வாழைப்பழமோ ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியைத் தேடித்தரும்.

எனவேதான் தமிழ்நாடு அரசு, தூத்துக்குடியைச் சுற்றியுள்ள உவர்மண் நிலப் பகுதிகளைப் (தேரி நிலங்கள்) பண்படுத்திப் படிப்படியாக 6,000 ஏக்கர் பரப்பளவுக்கு மேல் '' மோரிஸ் '' வாழை இனத்தைப் பயிரிடத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வேளாண்மைக் கடனுதவிக் கழகம் ரூபாய் 443 லட்சம் கடனுதவியளிக்க முன்வந்துள்ளது. தூத்துக்குடித் துறைமுக வேலை முடிந்த பின், 15 நாட்களுக்கு ஒரு கப்பல் வீதம் வாழைப் பழங்களைத் தூத்துக்குடியிலிருந்து ஜப்பானுக்கு அனுப்ப முடியும். இதனால் 6000 ஏக்கர் வாழையிலிருந்து ரூபாய் 6 கோடி அந்நியச் செலாவணியாக ஆண்டு தோறும் கிடைத்திடக்கூடும். இத்திட்டத்தினால் தூத்துக்குடித் துறைமுகம் மேம்பாடு அடையும் ; உழவர்களும் நல்ல லாபம் பெறுவார்கள் ; தமிழ்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

'' யார் கட்டினார்கள் என்பது எப்படிச் சொல்ல முடியும்? வேடிக்கைக்காக யாரேனும்கட்டி யிருக்கலாம் ; அல்லது பறவை நிபுணர்கள் குறிப்பிட்ட அந்தக் காக்கையைப் பற்றி ஆராய அப் படி மணிகளைக் கட்டியும் இருக் கலாம்.''

'' இருக்கட்டும் அப்பா; இவை எத்தனை நாளாய் இங்கே இருக் கின்றன ; நாம் போகும்போது அவையெல்லாம் அங்கே இருக் குமா ? பறந்து போய்விடுமே ; சீக்கிரம் போகலாம்பா ; நாளைக்கே போகலாமா ?''

'' அவசரப்படாதே சாமி ; இந்தப் பறவைகள் இன்றல்ல, நேற்றல்ல, ஏறக்குறைய இரு நூறு ஆண்டுகளுக்குக் குறை யாமல் இங்கே பரம்பரையாய் வாழ்கின்றன என்று சொல்ல லாம் ; இந்த வேடன்தாங்கலைத் தவிர வேறு சில இடங்களிலும் பலவகைப் பறவைகள் கூடுகட் டிக் குஞ்சு பொரித்து வாழ்கின் றன ; ஆனாலும் முப்பது ஏக்கர் பரப்புள்ள இவ்வளவு பெரிய இடத்தில் பத்தாயிரம் பறவை களைப் பார்க்க முடியாது.''

'' ஏனப்பா இங்கு மட்டும் ஏன் அவ்வளவு பறவைகள் வாழ வேண்டும் ?''

''இந்த வேடன் தாங்கலில் அமைந்துள்ள ஏரியின் நடுவே அழகிய பெரிய மரங்கள் அடிப் பாகம் நீரிலே மூழ்கியும், கிளைகள் மேலோங்கியும் நிற்கின்றன என்று முன்னேயே நான் சொன் னேனல்லவா, தண்ணீரில் மூழ்கி நிற்கும் மரங்களைத் தேடுவது நீர்ப்பறவைக்கு இயல்பு; இதனால் அவற்றிற்குச் சில பாதுகாப்புக் கள் ஏற்படுகின்றன ; நிலத்தில் வாழும் பறவைகளைத் தின்னும் பூனை, கீரி போன்றவற்றால் தண் ணீர் சூழ்ந்த மரங்களை நெருங்க முடியாது. மக்களாலும் எளிதில் அவற்றின் பக்கம் செல்ல இய லாது. வேடன் தாங்கல் பக்க முள்ள மதுராந்தகம் முதலிய ஊர்களருகே ஏரிகள் இருந்தா லும் இப்படிப்பட்ட மரச் சூழ் நிலை கிடையாது. பறவைகளும் தம் குஞ்சுகளுக்கு இரை தேடு வதைக் கடமையாகவே கருது கின்றன. மீன்கள், தவளைக் குஞ்சுகள் நத்தைகள் போன்ற வையே இவற்றின் நல்ல உணவு; இவை வேடன்தாங்கலைச் சுற்றி யுள்ள மருத நிலச் சதுப்பு நிலங்




என்னய்யா, பத்திரிகையிலே போட போட்டோ எடுத்திட்டு வரச்சொன்னா தலையில்லாமே உடம்பை மட்டும் எடுத்திட்டு வந்திருக்கீங்க ?

நீங்கதானே சார் சொன்னீங்க ! தலைகளா போட்டு அலுத்துப் போச்சு ! புதுமாதிரியா எடுத்துட்டுவான்னு !

---

களில் ஏராளமாகக் கிடைக்கும். இதனாலும் வேடன்தாங்கலைப் பறவைகள் விரும்புகின்றன என்றும் சொல்லலாம்.''

''அப்பா ! அப்பா ! என் னென்ன பறவைகள் இங்கிருக் கின்றன என்று நீ சொல்லவில் லையே ! ஏதோ நீர்ப்பறவை என்று சொன்னாய்; நிலப் பறவை என்று சொன்னாய்.''

'' இந்த வேடன்தாங்கலில் நத்தைக்குத்தி, நாரை, கங் கணம், நீர்க்காக்கை, நரை யான், வெண் கொக்கு, பாம்புத் தாரா, சிறிய வெண் கொக்கு, உண்ணிக் கொக்குகள், துடுப்பு மூக்கு நாரை, இளம் வக்கா, மடையான் முதலிய பல் வகைப் பறவை யினங்களைப் பார்க்க லாம்.''

'' என்னப்பா ! நாரை, கீரை என்று என்னவெல்லாமோ சொல்கிறாயே ! அவை எப்படி இருக்கும் ? சொல்லமாட் டாயா ?''

'' சாமிநாதா ! நாமே நேரிலே பார்க்கப் போகிறோமே, அந்தப் பறவைகளின் வடிவை, வண்ணத் தை, அழகை எல்லாம் எப்படிச் சொல்ல முடியும் ? ஆனாலும் சொல்லுகிறேன், பாம்புத் தாரா என்று ஒரு பறவை ; இது பெரிய நீர்க்காக்கை அளவு இருக்கும்; அதற்கு நீண்ட கழுத்து உண்டு; அதன் அடிப்பாகம் வளைந்திருக் கும். சற்று நீண்ட வாலும் உண்டு. நீருள் மூழ்கி நீந்தி இரை பிடிப்பதிலே இது திறமை வாய்ந்தது. வெண் கொக்கு மற் றொரு பறவையினம் ; இதன் நிறம் தூய வெள்ளை, இதன் நிறத்தையும் அளவையும் கொண்டே இதனைத் தூரத்தி லிருந்தே இனம் கண்டுகொள்ள முடியும்.''

''இந்தப் பறவைகள் எப்போது இந்த வேடன்தாங்கலுக்கு வரும்; அதை மட்டும் சொல்லேன்.''

'' ஆவணி மாதத்தில் நல்ல மழையிருந்தால் வேடன் தாங்க லில் புரட்டாசிக்கு முன்பே பறவைகள் வந்து சேரும் ; புரட்டாசியில் பெரு மழை பெய்யாமல் லேசாக மழை தூறிய காலங்களில் சில பறவை களே இங்குக் காணப்படும் ; ஆனால் வேடன் தாங்கலில் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் தான் பறவைகள் கூடுகள் கட்டு கின்றன. சில கூடுகளில் கார்த்தி கையிலே குஞ்சுகள் இருக் கும் ; சித்திரை மாதப்பிறப்பின் போதும் சில பறவைகளைக் காண லாம். நம் நாட்டில் மழைக்கால மாகவும், குளிர் மிகுந்த வட நாடுகளில் வெண்பனிக்காலமா கவும் இருக்கும்போது குள்ள வாத்து, உள்ளான் வகைகள், சில வகை வாலாட்டிக் குருவிகள், வேறு சில பறவைகளும் தூர தேசங்களிலிருந்து புறப்பட்டுத் தெற்கேயுள்ள இங்கே வந்து சேரும்.''

''அப்பா, வேடன் தாங்கல் வேடன் தாங்கல்' என்று சொன் னாயே ; எப்படி அப்பா அந்தப் பெயர் வந்தது ?''

''வேடன் என்ற பறவை முதலில் இங்கே கூடு கட்டித் தங்கி வந்த தால் 'வேடன் தாங்கல்' என்ற பெயர் வந்தது என்று சிலர் சொல்கிறார்கள். வேடர்களிட மிருந்து காப்பாற்றிப் பறவை களுக்கு அடைக்கலம் கொடுத் துத் தாங்குவதால் இப்பெயர் வந்ததாகவும் சொல்வார்கள். ஆனால் 'தாங்கல்' என்ற சொல் மருத நிலத்துக் குளத்தையோ, தடாகத்தையோ குறிப்பதாக நினைவு. ஆனால் வேடர்களோ மற் றவர்களோ பறவைகள் சுடாமல் தாங்கும் இடம் இது என்பதை வரலாற்றுச்சான்றுகள் நிரூபிக் கின்றன. சரி சரி நேரமாச்சு! நாளைக்குப் பேசிக்குவோம்.''

# கஞ்சை

மாவட்டத்தில் மட்டும்...

அன்று ® 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 வரை)
ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**1971 ஏக்கர்**


**இன்று * 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை)**
**ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்**
**12,335 ஏக்கர்**

அன்று ® 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 1454 பேர்

**இன்று * 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 10,445 பேர்**

அன்று ® 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**1666 பேர்**

**இன்று * 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்**
**12,843 பேர்**



## சேலம்

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**21,818 ஏக்கர்**

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**22,374 ஏக்கர்**

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 6894 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 8518 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**1580 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**5263 பேர்**

## வட ஆர்க்காடு

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**16,037 ஏக்கர்**

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**34,884 ஏக்கர்**

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 6566 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப் பட்டா பெற்றோர் 19,164 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**4517 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**14,330 பேர்**

## சட்டத்தின் துணைகொண்டு

## பட்டா பெற்றோர்

## தென் ஆர்க்காடு

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
**11,294 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
**13,687 பேர்**

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் **2662 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் **30,241 பேர்**

## ராமநாதபுரம்

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**5115 ஏக்கர்**

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**41384 ஏக்கர்**

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 2137 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 15,220 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**709 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**1793 பேர்**

## திருச்சி

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**20,504 ஏக்கர்**

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**29,166 ஏக்கர்**

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 9293 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 11343 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 4622 பேர்

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**20,117 பேர்**

## கோவை

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**9981 ஏக்கர்**

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**14,105 ஏக்கர்**

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 3117 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 4865 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
**8578 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் **14,309 பேர்**

குறுகிய காலத்தில்
விரைவாக வழங்கிய
நிலப்பட்டா விவரங்கள்-
மாவட்டந் தோறும்
சுவரொட்டி
வாயிலாக
விளக்கியுள்ளது
தமிழ்நாடு அரசு.

## செங்கல்பட்டு

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1961 மார்ச் முடிய)
ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**1989 ஏக்கர்**

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை)
ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**18,259 ஏக்கர்**

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 894 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 7646 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டு மனைப்பட்டா பெற்றோர்
**1280 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் வீட்டு மனைப் பட்டா பெற்றோர்
**13,621 பேர்**

## திருநெல்வேலி

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய)
ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**1270 ஏக்கர்**

இன்று 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை)
ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**10132 ஏக்கர்**

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
**462 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
**3709 பேர்**

## மதுரை

மாவட்டத்தில் மட்டும்...

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய)
ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**12567 ஏக்கர்**

இன்று 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை)
ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
**18855 ஏக்கர்**

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
**4578 பேர்**

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
**7527 பேர்**



# சிட்டுக் குருவிகள் சிரிக்கின்றன

கீச்......கீச்......கீச்......

மெல்லோசைகளின் கூட்டுச் சிலிர்ப்பு காற்றலைகளிலே மிதந்து வருகிறது.

அதைக் கேட்டதும், சுமை இறங்குவதுபோல்—சூடு தணிவதுபோல்—ஏதோ ஓர் இனம் விளங்காத ஆறுதல்! உடையாமல் வலிகொடுத்துப் பழுத்துக் கொண்டிருக்கும் கட்டியை ஒரு பிஞ்சுவிரல் சுற்றிச் சுற்றி வருடிக் கொடுப்பது போன்ற ஓர் இதமான உணர்வு!

எத்தனை நாழிகைதான் படுக்கையிலேயே வெடிக்கும் நெஞ்சுடன் புழுவாய் நெளிவது?

நிர்மலா கட்டிலைவிட்டுக் கீழே இறங்குகிருள்; கலைந்து சிதறிய கருங்குழலை அள்ளிச் செருகியவாறே மெள்ள நடக்கிருள்; சன்னல் அருகே செல்கிருள்; அதன் கம்பிகளைப் பற்றி நின்றவாறே தன் விழி வலையை வெளியே விசிறுகிருள்.

அவளது கைக்கு எட்டக்கூடிய தூரத்தில் வேப்பந் தளிர்கள் கண்ணுக்குக் குளுமை தந்து பொன்னூஞ்சல் ஆடுகின்றன; உழைத்துக் களைத்து ஓய்ந்து போன பாட்டாளிப் பகலவனின் மஞ்சள் ஒளியில் நீராடித் தங்கத் தகடுகளாகவே அவை பளபளக்கின்றன.

சற்று அப்பால், அதே வேப்ப மரக் கிளையில் இரண்டு சிட்டுக் குருவிகள் எதையுமே இலட்சியம் செய்யாத இளங் காதலர்களாகச் சிரிக்கின்றன; சிணுங்குகின்றன; குதிக்கின்றன; கிசுகிசுக்கின்றன. அவற்றின் இல்லற நுழைவுக்கு ''நலங்கு'' பாடுவதுபோல, எங்கிருந்தோ ஒரு திரைப்படப் பாட்டு மெள்ள இழைந்து வருகிறது.

'சிட்டுக் குருவி முத்தங்
கொடுத்துச்
சேர்ந்திடக் கண்டேனே !..'

—அந்தப் பாட்டும், இந்தக் குருவிகளும்....

அவற்றின் கும்மாளத்தைக்—குதியாட்டத்தைப் பார்க்கப் பார்க்க, நிர்மலாவின் நெஞ்சு விம்முகிறது; நெடுமூச்செறிகிறது.

ஒருவேளை பொருமையோ? இல்லை, புழுக்கமோ?

இருக்கலாம்.

இன்று காலைவரை அவளும் இப்படிக் கும்மாளமிட்டுக் குதியாட்டம் போட்டவள் தானே! ஆனல் இனி..?

அ. மனோமலையாள்

அதை நினைத்தாலே நெஞ்சு 'பகீர்' என்கிறது!

அவளது மேலாடை தோளைவிட்டு நழுவுகிறது.

அவளது தன்னம்பிக்கை—தைரியம்—கனவுகள் — திட்டங்கள் எல்லாமே இதயத்தை விட்டும் நழுவுமோ?

அவள் யாரையும் கெடுத்ததும் இல்லை; கெடுக்க வேண்டும் என்று நினைத்ததும் இல்லையே! 'தான் கெட்டாலும் மற்றவர்களைக் கெடுக்கக் கூடாது, தான் ஏமாந்தாலும் மற்றவர்களை ஏமாற்றக் கூடாது'—என்பதையே இலட்சியமாக—இரும்புப் பிடியாகப் பற்றி நிற்பவள் தானே! அவளுக்குப் போய் இப்படி ஒரு சோதனையா? அவளது எண்ணங்கள்—ஏற்பாடுகளுக்கு இப்படி ஒரு அவலம்—திருப்பம்—அழுகை—அழிவா?

அவளைப்பற்றி அந்தக் குருவிகளுக்கு என்ன கவலை? அவை 'கீச் கீச்' என்று சிரிக்கின்றன; சிரித்துக்கொண்டே இருக்கின்றன.

அந்தச் சிரிப்பொலியையும் மீறி, அவளது காதற் கனவுகள் அவளைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கின்றனவோ ?

அந்தத் தங்கும் விடுதியின் முதல் மாடியிலுள்ள ஓர் அறையில் நெஞ்சொடிந்து நிற்கும்

நிர்மலாவின் நீள விழிகள், இப்போது சிட்டுக் குருவிகளின் மாளிகையான வேப்பமரத்தோடு திரும்பவில்லை; அதோ, அந்த அசோக மரங்கள், அவற்றுக்கு அடியில் பூஞ்செடிகள் புடைசூழ, தாமரைப் பூக்கள் மலர்ந்து சிரிக்கும் சிறிய தடாகம், விடுதியின் சுற்றுச் சுவர் எல்லாவற்றையும் தாண்டி, நெடுஞ்சாலையை நோக்கிச் செல்கின்றன.

அங்கே, தன் அங்கப் பூரிப்பையெல்லாம், மற்றவர்களின் பார்வைக்குப் பொதுவுடைமை ஆக்கிப் பகட்டாக உடையணிந்த ஓர் இளம் பெண்ணும் ஆடவனும் ஒருவரையொருவர் இடித்துக் கொண்டு சிரிப்பலைகளை எழுப்பிச் செல்வது தெரிகிறது.

ஏன், இவளும்கூடத்தான், தன் மனத்துக்கினிய மணவாளனின் கையைக் கோர்த்துக் கொண்டு, தோளோடு தோள் உராய்ந்த வண்ணம் அந்தச் சாலையிலே எத்தனையோ தடவைகள் உற்சாகமாக நடந்திருக்கிறாள்.

ஆனால் இனி... ?

அதற்குமேல் அவளால் சன்னலருகே நிற்க முடியவில்லை. கட்டிலுக்குத் திரும்பிவந்து 'பொத்' தென்று விழுகிறாள். அழுகையோ, ஆடிப் பதினெட்டாம் பெருக்குப் போலப் பொங்கிப் பொங்கிவருகிறது; தலையணையையும் தெப்பம் தெப்பமாக நனைக்கிறது. தன்னை அடித்துச் செல்லும் துயர வெள்ளத்திற்கு அணைபோடத் தெரியாமல் — அதிலிருந்து கரை யேறவும் முடியாமல் நிர்மலா துடியாய்த் துடிக்கிறாள். குப்புற விழுந்து கிடக்கும் அவளது முதுகுப்புறம் குலுங்கிக் குலுங்கி அதிர்கிறது.

முப்பது வயதுவரை தன் இதயக் கூட்டை, இடுகாடாக— இடிவிழுந்த பனையாக—வெறுமைப் படுத்தி வைத்திருந்தவள் தான் அவள்; உணர்ச்சிகளின் கழுத்தை நெரித்துவிட்டு, உயிரில்லாத சிலையாக உலா வந்தவள் தான் அவள்.

அப்படியே கடைசிவரை தன் காலத்தை ஓட்டியிருக்கக் கூடாதா? தன்வைராக்கியத்தைக் காப்பாற்றியிருக்கக் கூடாதா? அந்த மணவாளனைச் சந்திக்காமலே தவிர்த்திருக்கக் கூடாதா?

ஆனால் மணவாளனைப் பொறுத்தவரை நிர்மலா அவசரப்பட்டு ஆற்றில் இறங்கிவிட்டாள் என்று தூற்றவே முடியாது. பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே அவனைத் தெரிந்திருந்தும், கடந்த பத்து வாரங்களாகத்தான் அவனோடு நெருங்கிப் பழகுகிறாள்; அவனைத்தன் நெஞ்சக் கோவிலின் நிலையான தெய்வமாகவும் ஏற்றிருக்கிறாள்.

அதற்குள் . . . ?

அழுகை மீண்டும் மீண்டும் பொங்கிப் பீறிடுகிறது.

இவளுடைய துயரத்தைப்பற்றியெல்லாம் கவலையே படாமல் அதோ அந்தச் சிட்டுக் குருவிகள் சிரிக்கின்றன; 'தேனிலவில்' திளைக்கின்றன..!

அதேசமயம், பழைய நிகழ்ச்சிகள் சில, படத் துணுக்குகளாக நிர்மலாவின் மனத் திரையிலே நிழலாடுகின்றன.

பெண்கள் மட்டுமே பயிலக் கூடிய அந்த ஆசிரியைப் பள்ளிக் கட்டடத்திலே தான் அடி வைத்த பொழுது, அங்கே ஒரு பாரதியார் தன்னை வரவேற்கக் கூடும் என்று நிர்மலா நினைக்கவே இல்லை! தலையிலே முண்டாசும். முகத்திலே (பெரிதாக இல்லாவிட்டாலும்) மீசையும், எதையுமே ஊடுருவித் துழாவக் கூடிய கரிய பெரிய விழிகளும், கம்பீரமான முறுவலுமாக ஓரளவுக்குப் பாரதியாரின் சாயலையே உரித்து வைத்துக் கொண்டு நின்றிருந்தான் மணவாளன். அவன்தான் முதன் முதலில் அவளைத் தலைமை ஆசிரியையிடம் அழைத்துச் சென்று வழிகாட்டியவன். பிற்காலத்தில் தன் வாழ்க்கைக்கே வழிகாட்டி யாவான் என்று அப்போதெல்லாம் அவள் எண்ணியதே இல்லை!

'என்ன இருந்தாலும் அவன் சாதாரணப் பணியாள், (பியூன்) தானே?'—என்கிற அலட்சியமும்



1969-ஆம் ஆண்டு சனவரி 6-ஆம் நாள். அண்ணா மறைவதற்கு ஒரு திங்களுக்கு முன்னால்; தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம், பட்டி தொட்டிகளில் எல்லாம் சிங்கநாதம் செய்து மக்களைத் தட்டி எழுப்பிய—அத் தானைத் தலைவன் நோய்வாய்ப்பட்டு மெலிந்து போய்ப், படுத்த படுக்கையாக இருக்கிறார். அண்ணாவைப் பார்க்க, அவர் இல்லமான ''தாயகத்'' தினுள் நுழைகிறார் திரு. நிஜலிங்கப்பா. அண்ணாவைப் பார்த்ததும் அவரது உள்ளம் நெகிழ்ந்து விட்டது. "போதுமான ஓய்வு எடுக்காமல் விட்டு விட்டீர்களே!" என்று அண்ணாவிடம் வருத்தப்பட்டுக் கொண்டார். ''கட்சி அரசியல் இருக்கட்டும். அதற்கெல்லாம் அப்பாற்பட்ட, இந்த நாட்டுக்கு, நாட்டின் எதிர்கால நல்வாழ்வுக்கு, நீங்கள் கிட்டரிய தலைவர்....'' என்றார்.

அவர் அண்ணாவைப் பார்த்துவிட்டுப் புறப்படுவதற்கு முன்னால் அருகில் நின்று கொண்டிருந்த திரு. கஜேந்திரனிடம் "அண்ணா நல்ல உள்ளம் படைத்தவர். பார்வையாளர்கள் வந்து அவரைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அண்ணா மிகவும் அருமையான தலைவர். அவர் இந்த நாட்டின் விலைமதிக்க முடியாத சொத்து" என்று உள்ளம் நெகிழக் கூறிவிட்டுச் சென்றார்.

அவள் மனத்தினுள் கரும் புள்ளியாய்ப் பதிந்திருந்ததையும் மறைப்பதற்கில்லை. ஆனால் அவளுடன் ஒன்றாகப் பயின்ற பல பெண்கள், அவனுடைய பார்வைக்கும் பேச்சுக்கும் கிறங்கித்தவிப்பதையும் அவள் அறிவாள்; அவன் வாயைப் பிடுங்கி வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கேலி செய்து அவனைத் திணற அடித்தவர்களும் உண்டு.

பொதுவாக எந்தப் பெண்ணையும், அவளுடைய பெயருக்குப் பின்னால் 'அம்மா' என்பதையும் சேர்த்துச் 'சரசம்மா, சரளம்மா, அனுசூயாம்மா, அகிலாம்மா' என்று மரியாதையாக அழைப்பது தான் மணவாளனுக்கு வழக்கம். அந்த மரியாதையின் அருமையை அறியாத அந்தப் பெண்களோ அவனை எப்படி மடக்கினார்கள் தெரியுமா?

"இந்தா மணவாள்! எங்களைப் பார்த்தா 'அம்மா' மாதிரி தான் உனக்குத் தோணுதா?"— என்று கேட்டாள் ஒருத்தி.

"ஏதோ ஒரு மரியாதைக்கு அழைச்சா நீங்க என்னம்மா இப்படிக் கோவிச்சுக்குறீங்க? ஆனா, உங்களைப் பார்த்தா எனக்கு உண்மையிலேயே எப்படித் தோணுது தெரியுமா?"—என்று நமுட்டுச் சிரிப்புடன் விநயமாக வினவினான் மணவாளன்.

"ஏன், எப்படித் தோணுகிறோமாம்?"—ஏழெட்டுப்பேர்களின் கூட்டுக் குரல்.

"அசல் 'பாட்டி' மாதிரி?"

"ஐயோ! உனக்கு அவ்வளவு கிண்டலா? அப்போ நாங்களும் உன்னை இனிமே தாத்தான்னு தான் அழைப்போம்."

பெண்கள் ஒன்றை நினைத்து விட்டால் அடுத்த கணமே அதை அவர்கள் செயல்படுத்திவிட மாட்டார்களா?

"என்ன மணவாள் தாத்தா?"

"ஏன் சரசுப்பாட்டி? என்ன சக்குபாய்—பாட்டி?.."

ஒரே சிரிப்பு வெடிதான். அதற்குப் பிறகு 'தாத்தா—பாட்டி' வார்த்தைகள் அங்கே மிகச்சரளமாகத் தவழலாயின.



அண்ணா முதலமைச்சராக இருந்த நேரம். குறிப்பிட்ட தினத்தில் என்னென்ன நிகழ்ச்சிகள் உள்ளன என்பது பற்றி முன் கூட்டியே அவர் கேட்டுத் தெரிந்து கொள்ள மாட்டார். அலுவலக வேலை முடிந்து, மாலையில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் காரில் செல்லும்பொழுதுதான் அண்ணாவிடம் சொல்வேன். "அண்ணா எழும்பூர் புத்தர் சொசைடியில் முதல் நிகழ்ச்சி... இன்ன இன்னார் பேசுகிறார்கள்...." என்று நான் சொல்வேன். உடனே அண்ணா கேட்டுக் கொள்வார். நுங்கம்பாக்கம் அவின்யூ ரோடிலிருந்து காரில் எழும்பூர் வருவதற்குள், அந்தச் சில நிமிடங்களுக்குள், அந்த நிகழ்ச்சிக்குத் தயாராகி விடுவார் அண்ணா! புத்தரைப் பற்றி, அவர் கொள்கைகள் பற்றி அருமையான சொற்பொழிவினை ஆற்றி விடுவார்! அந்த நிகழ்ச்சி முடிந்து, அடுத்த நிகழ்ச்சி பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில்! காரில் போகும் பொழுதுதான், அந்தச் சில நிமிடங்களுக்குள் அதற்கான சொற்பொழிவு தயாராகி விடும்! எந்த நிகழ்ச்சிக்கும் முன்கூட்டியே சொற்பொழிவினைத் தயாரித்துக்கொள்வதில்லை அவர். ஒருசில முக்கிய நிகழ்ச்சிகள் தவிர, அவர் கலந்து கொண்ட கூட்டங்கள் அனைத்திலும் அண்ணா முன்னேற்பாடின்றி, அங்கு வந்து மனத்தில் பட்டதைத்தான் பேசினார்!

தகவல்—கஜேந்திரன்.

இதில் வேடிக்கையென்னவென்றால், மற்ற பெண்களெல்லாம் அவனை முற்றுகையிட்டுக் கேலியுங் கிண்டலுமாகச் சூழ்ந்த நிலையிலும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், மணவாளனும் இவளைப் 'பாட்டி' என்று கூப்பிட்டதும் இல்லை; இவளும் அவனைத் 'தாத்தா'—என்று மடக்கியதும் இல்லை. நிர்மலா ஒதுங்கியேதான்—ஒட்டாமலேதான்—நின்றாள்.

இன்னொரு சமயம். கீதா என்பவள் கேட்கிறாள்:

"நாங்கள்தான் இங்கே எல்லாரும் பெண்களாக இருக்கிறோமே! இங்கே ஒரு பெண்ணைப் பியூனாகப் போடாமல் உன்னை ஏன் போட்டிருக்காங்க? இப்படித் தனியா வந்து மாட்டிக்கிட்டது உனக்குச் சங்கடமா இல்லே?"

"நீங்க கேட்கிற கேள்வியைத் தான் நானும் அதிகாரிங்ககிட்டே கேட்கிறேன். ஆனா, அவங்க எங்கே நான் சொல்றதைக் காதிலே வாங்கிக்கிறாங்க?"

"ஒருவேளை போன சென்மத்திலே பெண்வாடையே இல்லாமல், 'டார்சான்' மாதிரி காட்டிலே கிடந்திருக்கலாம்; அந்த ஏக்கந் தீர வேண்டாமா? அதற்காகவும் இப்படிக் கொண்டு வந்து போட்டிருக்கலாம்"—என்று, 'பொடி' வைத்துப் பேசுகிறாள் புவனா.

"ஊம்.. அப்படி இருந்திருக்காது. போன பிறவியிலே நான் பெண்ணாகவே பிறந்திருப்பேன்; பல ஆண்களைப் பாடாய்ப் படுத்தியிருப்பேன்; ஏங்க விட்டிருப்பேன்; ஏமாத்தியும் இருப்பேன்; அலட்சியம் செய்து அவமானமும் படுத்தியிருப்பேன்; அதுக்கெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்த்துதான் 'முழியோ முழியென்று முழிடா'ன்னு இங்கே கொண்டுவந்து போட்டிருக்காங்க நீங்களும் கொஞ்சம் **ஆண்கள்** கிட்டே இரக்கத்தோடேயே நடந்துக்கங்க;.... இல்லே,

அடுத்த பிறவியிலே நீங்க கண்டிப்பா ஆணாப் பிறந்து அவதிதான் படுவீங்க ?''

சாபமே கொடுக்கிறான் மணவாளன் அதனைக் கேட்டுப் பெண் சிட்டுக்கள் அத்தனையும் பெருத்த குரலில் சிரிக்கின்றன ?

ஆண்டு விழா வருகிறது.

இப்போதுதான் 'கெரோ'— என்பது புதிதாக அரசியலில் அடிபடுவதாக நினைக்க வேண்டாம். அந்தக் காலத்திலேயே மணவாளனிடம் அதைக் காட்டத் தொடங்கி விட்டார்கள் பெண்கள் ! எதற்குத் தெரியுமா ? மாறுவேடப் போட்டியில் அவன் பெண்ணாக வரவேண்டுமென்று?

வேறு வழியில்லை. தழையத் தழையப் புடைவை உடுத்தி, வயிறுதெரிய இடையைநெளித்து விழியைச் சுழற்றி, மோவாயை இடித்து அவன் நடந்துவந்த நளினம் இருக்கிறதே, அதற்கு எந்தப் பெண்தான் ஈடாக முடியும்? எல்லாருமே கையொலி எழுப்பி அவன் அழகைப் பருகும் இனிய வேளையில் இந்த எஸ்தர் குட்டி சும்மா இருக்கக் கூடாதா?

'' அய்யோ ! மீசை ! மீசை !'' —என்று கத்தியே விட்டாள்.

உடனே மணவாளன் எப்படிச் சமாளித்தான் தெரியுமா ?

'' நானும் உங்க மாதிரி மஞ்சள் பூசிக் குளிக்க மறந்திட்டேன் ; அதனாலேதான் எனக்கு இந்த கதி !''

—என்று சொன்னானே பார்க்கலாம் ! அந்தப் பள்ளிக்கட்டடமே இடிந்துவிடும் போல் அதிர்ந்தது சிரிப்பின் எதிரொலி !

:: :: ::

ஆண்டுகள் பல ஆவியாகப் பறக்கின்றன.

நிர்மலா இப்போது வெறும் 'சகண்டரிகிரேட்' ஆசிரியை அல்லள்; பி. ஏ., பி. டி., பட்டம் பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆசிரியை. கல்வித் துறையில் நுழைந்து விட்டால் தான் படித்துப் படித்து முன்னேறிக் கொண்டே போகலாமே !

ஒருநாள் தான் கணக்குவைத்திருக்கும் வங்கியில் (பேங்கில்) பணம் போடச் செல்கிறாள் நிர்மலா, அங்கே பொருளாளருக்கு உரிய இடத்தில் அமர்ந்திருக்கும் புதிய மனிதனைக் கண்டதும் அவளுக்கு ஒரே வியப்பாக இருக்கிறது.

அவளிடமிருந்து பணத்தை வாங்கி எண்ணியவாறே,

'' என்னைத் தெரிகிறதா ? '' என்று மெல்லக் கேட்கிறான் மணவாளன்.


முன்னைவிடச் சற்றுப் பருத்த மாதிரி, கொழுகொழுப்பாக புதுப் பொலிவோடு மாறி இருந்தாலும், அவனுடைய அந்தப் பெரிய விழிகள், இளஞ் சிரிப்பு, வீணையின் நாதம் போன்ற கம்பீரக் குரல் இவற்றை அவளால் மறக்கமுடியுமா ?

'' ஊம்.......... ''

—தனக்கே உரிய அடக்கத்துடன் ஆனால் உற்சாகத்துடன் தலையை ஆட்டுகிறாள் அவள்.

'இந்த அளவுக்கு அவனால் எப்படி உயர முடிந்தது ? '

—என்று நிர்மலாவின் நெஞ்சினுள் ஓடும் நினைவோட்டத்தை ஆரூடமாய் அறிந்தவனைப்போலத் தன்னைப் பற்றித் தானே முந்திக்கொண்டு சொல்கிறான் மணவாளன்.




'' அங்கே இருந்தபோதே மெட்ரிக் எழுதியிருந்தேன். அப்புறம் டெல்லிப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் மூலமாகவே பி.ஏ., பட்டமும் பெற்று விட்டேன்..........நாட்கள்தான் ரொம்ப வேகமா ஓடுதே !''

—அவன் குறிப்பிடும் கால விரைவுக்குச் சாட்சியம் பகர்வது போல அவனது காதோரத்தில் இளநரையும் தெரிகிறது.

அதற்குப் பிறகு...... ?

அந்தப் பேங்கிலே பணத்தை எடுக்கவும் பணத்தைக் கொடுக்கவும்தான் நிர்மலா சென்றாளா? இல்லை ; மனத்தை எடுக்கவும், மனத்தைக் கொடுக்கவுமே சென்றாள் !

இப்போது இருவரும் முன்போல ஒரே ஊரில் அலுவல் பார்க்கவில்லை. இவள் ஒரு நகரத்தில், அவன் ஒரு நகரத்தில். இடையிலுள்ள ஒரு பெரிய நகரத்தில் விடுமுறை நாட்களில் இருவரும் வந்து சந்திக்கிறார்கள்; சங்கமம் ஆகிறார்கள். விரைவிலேயே திருமணம் செய்யத் திட்டமிட்டு இருக்கிறார்கள். எங்கே, எப்படி என்பதெல்லாம் இன்னும் முடிவாகவில்லை. அதைப்பற்றி ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட வேண்டும் என்கிற எண்ணத்தோடுதான் இன்று காலை தாங்கள் வழக்கமாகத் தங்குகிற அந்த விடுதிக்கு வந்து சேர்ந்தாள் நிர்மலா.

அதற்குள் ;

மணவாளன் வெளியே போய் விட்ட சமயத்தில் ஒரு மூன்றாவது மனிதன் அறையிலே புகுந்து அவளுடைய மூளையையே சிதற அடித்து விட்டானே ! தென்றல் தவழ வேண்டிய வாழ்க்கையில் புயலைக் கிளப்பி விட்டுப் போய் விட்டானே !

நினைக்க, நினைக்க, மீண்டும் அழுகை பொங்குகிறது.

அழுது தீர்த்து விட்டால் இதயத்தை அழுத்திய இரும்புச் சுமை சற்று இறங்கி விட்ட தெளிவு ஏற்படுமல்லவா? அந்த வலி குறைந்த நிலையில், நிர்மலாவின் சஞ்சல நெஞ்சில் ஓர் உறுதிப்பாடு மெள்ளத் தலை யெடுக்கிறது.

'' ........அவர் வந்ததும் உண்மையைச் சொல்லிவிட வேண்டியதுதான்; என்னுடைய தன்னல இன்பத்திற்காக அவரை ஏன் நான் பாழடிக்க வேண்டும்? நான் சொல்லப் போவதைக் கேட்டு, அவர் இடிந்துதான் போவார். அதைப் பற்றியெல்லாம் நான் அலட்டிக் கொள்ளக் கூடாது; என்னை வாழ வைக்க வந்தவர்க்கு நானே எமனாக மாறலாமா?''

விட்டு விட்டுப் பெய்யும் மழையைப் போல அழுகை மீண்டும் மீண்டும் பீரிடுகின்றது. வெளியிலோ வேப்பமர மாளிகையில் குடியிருக்கும் அந்தச் சிட்டுக்குருவிகள் சிலுசிலுவென்று சிரித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

:: :: ::

அறைக்கதவு தட்டப்படும் ஓசை. புடைவைத் தலைப்பினால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு, கூந்தலை ஒடுக்கிக் கோதிய வாறே நிர்மலா கட்டிலை விட்டு இறங்குகிறாள்.


'அவரிடம் இந்தச் சிக்கலை பற்றி எப்படித் தொடங்குவது, எப்படி ஒரு முடிவுக்கு வருவது?' என்னும் திகைப்பு அவளது மனக் கூட்டை 'நங்கு ...... நங்கு' என்று அடிக்கிறது. அந்த வேதனையின் விம்மல் தாளாமல் கால்கள் பின்னுகின்றன. எனினும் கதவைப்போய்த் திறக்கிறாள்.

பிற்பகல் இரண்டு மணிக்கு, அவளைத் தன்னந்தனியாகத் தவிக்க விட்டு விட்டுத் தன் நண்பனைப் பார்க்கச் சென்றிருந்த மணவாளன்தான் நான்கு மணி நேரங்கழித்து இப்போ திரும்பியிருக்கிறான்.

'' என்ன நிர்மலா, ஒரு மாதிரியா இருக்கிறே? உடம்புக்கு முடியவில்லையா?''

—என்று கேட்டவாறே அவன் உள்ளே நுழைகிறான்.

அவள் பதில் ஏதும் பகராமல் அறைக் கதவைச் சாத்தித் தாழ் போடுகிறாள்.



" நன்ருக இருட்டி விட்டது. விளக்கைக் கூடப் போடாமல் இருக்கிருயே!''

—என்றவாறே தான் வாங்கி வந்த இரண்டு ஆப்பிள் பழங்களையும், துணிப் பொட்டலத்தையும் அறைநடுவே கிடக்கும் சிறிய மேசையில் வைக்கிருன்.

அவள் விளக்கைத் தட்டி விடுகிருள்.

அந்தப் 'பளீர்' என்னும் வெளிச்சம் அவளுடைய சோக மயமான முகத்தையும், நிலையையும் துல்லியமாகக் காட்டுகிறது.

அவளது அழுகைக் கோலம் மணவாளனைத் திடுக்கிட வைக்கிறது. கட்டிலில் வந்து அமர்ந்து விட்ட அவளின் அருகே சென்று நெற்றியைத் தொட்டுப் பார்க்கிருன். அவளது மனத்தின் பிரதிபலிப்பாக அது கொதிக்கிறது.

" நான் போகும்போது நன்ருகத்தானே இருந்தே? அதற்குள்ளே இப்படிக் காய்ச்சல் வந்து விட்டதே!''

—என்று பதறியவன், மின் மணிக்கு உரிய பொத்தானை அழுத்துகிருன்.

பையன் வந்ததும்;

" சூடா இரண்டு காப்பியும், இரண்டு கோடாபைரின் மாத்திரையும் வாங்கி வா " என்கிருன்.

பையன் சென்றதும், நிர்மலாவின் அருகில்போய் அமர்ந்து அவளை ஆரத்தழுவித் தன் மார்பிலேயே சாய்த்துக் கொள்கிருன். அவளது கண்ணீர் முத்துக்கள் அவனது நெஞ்சப் பரப்பிலே சொட்டுச் சொட்டாய் விழுகின்றன; 'சுள்' ளென்று சுடுகின்றன.

மேலாடை நழுவிட்ட அவளது முதுகை வருடிக்கொடுத்தவாறே, அவளுடைய பூங்கழுத்து ஓரமாகத் தன் உதடுகளை மிதக்க விட்ட அவன்,

" டாக்டரையே, அழைத்து வந்து விடவா?''

—என்று கலக்கமடைந்து போய்க் கேட்கிருன்.

'தேவையில்லை!'—என்பதற்கு அறிகுறியாக, அவள் தலையை ஆட்டுகிருள்.

" அந்தப் படுபாவி எப்போதுமே இப்படித்தான்; பேச்சிலே பிடித்துக் கொண்டால் ஆளை விடவே மாட்டான். இல்லையென்ருல் முன்னலேயே வந்திருப்பேனே!"

—என்று புலம்புகிருன் மணவாளன்.

சிறிது நேரத்தில் பையன் கொண்டு வந்த காப்பியும் மாத்திரையும் நிர்மலாவின் வயிற்றில் இடம் பிடிக்கின்றன.

அவை உள்ளே சென்றதாலோ என்னவோ, ஒருவிதக் கலகலப்பு உண்டாகிறது, அவளிடம்.

இலேசாக, ஆனல் வலிந்து தான் புன்னகை பூக்கிருள் அவள்.

அவனது மார்பிலே சாய்ந்து பின்னர் மடியிலே தலைவைத்துப் படுத்திருந்தவள், நிமிர்ந்து எழுகிருள்; அவனை விட்டுச் சற்றுத் தள்ளியே உட்காருகிருள். அவனையே விழுங்கி விடுவது போல் தன் விழிகளால் தழுவுகிருள். குரலைக் கனைத்துக் கொண்டு மெள்ளக் கேட்கிருள்:

" ஆமா, இந்தச் சோதிடம் — கைரேகை — இவைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? எல்லாம் உண்மைதானே?''

—அவள் இப்படிக் கேட்டதும், மணவாளன் 'ஓ' வென்று உரக்கச் சிரிக்கிருன்.

" ஏன் சிரிக்கிறீர்கள்? அவைகள் எல்லாம் உண்மை இல்லையா?''—மீண்டும் கேட்கிருள் அவள்.

" உண்மையோ பொய்யோ? ஆனல் அவற்ருல் நன்மையே இல்லை. பிறகு ஏன் அவற்றை நாம் கட்டிக்கொண்டு அழ வேண்டும்?''

" என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?''

" எனக்குப் பட்டதைத்தான் சொல்கிறேன். அவைமட்டும். நன்மையளிக்கும் உண்மைகளாக இருக்குமானல், இந்த நாட்டில் எந்தப் பெண்ணுமே விதவையாக நடமாடக் கூடாதே? எந்த விபத்துமே ஏற்படக் கூடாதே! ஏன், கொலை, களவுகளைக் கண்டு பிடிக்கும் துப்பறியும் துறைக்கே வேலை இருக்கக் கூடாதே? ஆனல் என்னைப் பொறுத்த வரை, சோதிடக்கலை என்பது விண்வெளி ஆராய்ச்சிக்குரிய அரிச்சுவடி; அதைச்சரியான முறையில் நாம் பயிலவும் பயன்படுத்தவும் தவறிவிட்டோம். முன்னேற வேண்டிய மனிதன் வெறும் அரிச்சுவடியிலேயே ஆழ்ந்துகிடக்கலாமா? அதற்கும் மேலே என்ன? என்று நம் தமிழர்கள் அப்போதே சிந்தித்து முற்பட்டிருந்தால் இன்று அமெரிக்காவையும், ரஷ்யாவையும் விட நாம்தானே விஞ்ஞானத்தில் முன்னணியில் நின்றிருப்போம்? முதன்முதலாக வெண்ணிலாவிலும் அடிவைத்திருப்போம்! ஒரு சிலர், தங்களுடைய வயிற்றை வளர்ப்பதற்காக மனித மனத்தில் புரையோடிப்போயிருக்கும், அச்சத்தை — அவநம்பிக்கையைப்



**1968 செப்டம்பர் 8-ம் நாளில் அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையை அண்ணு நிகழ்த்தினர். அன்று அவர் ஆற்றிய உரை புத்தறிவுப் பேருரை; கருத்துக் கருவூலம்;**

**அவ்வுரை அண்ணுவின் கைப்பட எழுதியது. கையெழுத்தில் சுமார் 120 பக்கங்கள் அண்ணுவே ஒரே மூச்சில் அந்த நீண்ட பொருள் செறிந்த உரையினைத் தயாரித்து விட்டார்.**

**இரவு பன்னிரண்டு மணி அளவில் அண்ணு உரையை எழுதத் தொடங்கினர். அவர் அதை எழுதி முடித்தபொழுது காலை 5 மணி! ஒரே மூச்சில், தொடர்ந்து இரவு பூராவும் உட்கார்ந்து தன் கைப்படவே அப்பேருரையை எழுதி முடித்தார் அண்ணு!**

பயன்படுத்திக்கொ... டத்தின் தத்துவத்தையே திசை திருப்பி விட்டு விட்டார்கள்.''

'' அப்படியானால் அது முழுக்க முழுக்கப் பொய் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள் இல்லையா ?''

'' அது ஒரு கணக்கியல் அறிவு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இன்று அதனால் நன்மையே இல்லை என்பதுதான் என்னுடைய வாதம். சோதிடம் என்பது எதிரே தெரியும் பொருளைக் காட்டும் கண்ணாடியாக இருக்கலாம் ; ஆனால் அதுவே அந்தப் பொருளை இடம் பெயர்த்து வைக்கக்கூடிய கருவி இல்லை. நமக்கு ஏற்படக்கூடிய ஒரு விபத்தை நாம் முன்கூட்டியே தெரிந்துகொள்ளலாமேசோதிடத்தால் என்று நீ கேட்கலாம். அப்படித் தெரிந்து கொண்டதால் நீ சஞ்சலத்திற்கு ஆட்பட்டுச் சாகாமல் சாவாயே தவிர அந்த விபத்தை உன்னால் தவிர்த்துவிட முடியுமா ? கண்டிப்பாக முடியாது. அதுமட்டுமல்ல சோதிடத்தில் உனக்குப் பிடிப்பு அதிகமாக ஏற்பட ஏற்பட உன் தன்னம்பிக்கை தளர்கிறது ; சோம்பல் தலையெடுக்கிறது ; முயற்சி முனை மழுங்குகிறது ; எதையும் சாதிக்க முடியும் என்கிற ஆர்வமேஅழிந்து போகிறது. இப்படி நன்மையளிக்காதது மட்டுமல்ல, தீமையையும் கொடுக்கக்கூடிய ஓர் உண்மையினால் நமக்கு என்ன இன்பம் வரப் போகிறது ? ஏற்றம் ஏற்படப் போகிறது ? ஆகையால் தீமையையே தருகின்ற ஓர் உண்மையை விட நன்மையைத் தருகின்ற பொய்யே கூடத் தேவலாமே என்று தோன்றவில்லையா ?....''

—அடுக்கடுக்காக மணவாளன் சொல்லிச் செல்லும் வாதங்களைக் கேட்ட பிறகு நிர்மலாவின் சஞ்சல நெஞ்சிலும், மூட்டம் போட்டிருந்த வானம் வெளி வாங்கியதைப் போல், ஒரு வகையான தெளிவு அரும்பி வருகிறதோ ?

''ஆமாம், எதற்காக நிர்மலா, என்றைக்கும் இல்லாமல், இன்று வந்து சோதிடத்தைப் பற்றி அக்கறையோடு கேட்கிறாய் ?''

'' ஒன்றுமில்லை ; சும்மா தெரிந்து கொள்வோமே என்றுதான் கேட்டேன் .''



**சஞ்சீவியார் உள்ளம்.**

திருப்பதியில் 1969-ஆண்டு சனவரியில் திரு. சஞ்சீவி ரெட்டியின் மகன் திருமணம். அண்ணாவுக்கு அழைப்பிதழ் கொடுத்து நேரில் அழைக்க வந்தார் சஞ்சீவி ரெட்டி. அண்ணா நோய்வாய்ப்பட்டிருந்தநேரம். '' அண்ணா....இந்த நிலையில் தாங்கள் நேரில் திருமணத்திற்கு வரவேண்டுமென நான் கேட்கமாட்டேன். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாழ வேண்டும். இந்த நாட்டிற்கு, சிறப்பாகத் தென்னகத்திற்கு உங்கள் உழைப்பு, பணி எல்லாம் மிக மிகத் தேவையானது '' என்று நெக்குருகக் கூறிவிட்டு, அண்ணாவிடம் விடை பெற்றுக்கொண்டார். போவதற்கு முன்னால் திரு. சஞ்சீவி ரெட்டி சொன்ன வார்த்தைகள் : '' நீங்கள் நெடு நாள் வாழவேண்டும். அரசியல் வேறுபாடுகள் எவ்வளவுதான் இருந்தாலும் இந்த நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தலைவர் நீங்கள்.... ''.

'' ஊஹூம்.. நீ எதையோ மறைக்கிறாய் ? உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே !

'' சொன்னால் கோபிக்கமாட்டீர்களே !''

'' என் செல்லக் கண்ணே நான் என்றைக்காவது கோபித்திருக்கிறேனா ? ''

—அவளுடைய மடியிலே தலையை வைத்து மல்லாந்து படுத்திருந்த மணவாளன், அவளது பட்டுப் போன்ற மாதுளங் கன்னத்தைத் தன் விரல்களால் அதுக்கிப் பற்றி உலுக்கியவாறே கொஞ்சலாகக் கேட்கிறான்.

( அவனது நெடுங் கரத்தை, வளையல் குலுங்கும் தன் இரு குருத்துக்களாலும் கன்னத்தோடு சேர்த்து அணைத்துக் கொண்ட நிர்மலா, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டவளாகப் பேசத் தொடங்குகிறாள் :

'' சரி, உங்களிடம் சொல்லாமல் நான் எதற்குத்தான் மறைக்கணும் ? நீங்கள் மத்தியானம் வெளியே போன பிறகு, பக்கத்து அறையில் தங்கியிருக்கிறாளே ஒரு நாட்டியக்காரி——அவள்தான் நளினி—— அவள் அவசரம் அவசரமாக ஒரு வயதான ஆளை அழைத்து வந்தாள். '' இவர் ரொம்ப அற்புதமா கைரேகை பார்க்கிறார் ; நீங்களும் உங்கள் கையைக் காட்டுங்களேன் ; எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்!'' —என்றாள். எனக்கும் ஓர் ஆசை வந்து விட்டது. கையைக் காட்டினேன்.''

'' ஓகோ !அப்படியா சங்கதி? அந்த ஆள் என்ன சொன்னார்?''

'' ......அவர் சொன்னதையெல்லாம் இப்பச் சொன்னா நீங்க அதிர்ச்சி அடைவீங்களோன்னு எனக்குப் பயமா இருக்கு !''

—சட்டென்று நிர்மலாவின் முகம் இருண்டு வருகிறது ; விழிகள் பளபளக்கின்றன ; குரலும் தழுதழுக்கிறது.

'' நான் ஏன் அதிர்ச்சி அடைகிறேன் ? என்னுடைய குறுகிய கால வாழ்க்கையில் நான் அனுபவிக்காத துன்பம், அடையாத தோல்வி, சந்திக்காத ஏமாற்றம், சகித்துக் கொள்ளாத அவமானம் ஒன்றா ? இரண்டா ? அதனாலே, பழுக்கப் பழுக்க அடிக்கப்பட்ட இரும்புத் தகடாகத்தான் என் உள்ளம் இறுகிப் போய் இருக்கிறது. அறிஞர் அண்ணா சொன்னாரே அந்த ' எதையும் தாங்கும் இதயம் '..எனக்கும் ஓரளவுக்கு அமைந்திருக்கிறது. ஆகையாலே எந்த அதிர்ச்சியையும் என்னால் தாங்கிக் கொள்ள முடியும். நீ எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்.''

—விரக்திச் சிரிப்போடு அவளுக்குத் தைரியம் மூட்டுகிறான் மணவாளன்.

எனக்குத் தாலி பாக்கியமே இல்லையாம்!....''

—என்ற நிர்மலா

''உங்களைப் பறி கொடுத்திட்டு நான் எப்படி அத்தான் உயிரோடு இருப்பேன்?''

—என்று ஒரேயடியாக அலறியவாறே மணவாளன் மீது அப்படியே சரிந்து விழுகிறாள். அவன் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு தன்னுடைய தளிருடலே நடு நடுங்க, விம்மி விம்மி அழுகிறாள்.

''அடிப் பைத்தியமே! இதுக்கா இப்படி அழுவுறே? எவனோ ஒரு அரை வேக்காட்டுக்காரன் எதையோ வந்து உளறினான் என்றால் உடனே அதை நீ நம்பி விடுவதா? அதற்காக மனசையே உடைய விடுவதா? நான் சொன்னது சரியாகி விட்டது பார்த்தாயே? வாதத்திற்காகக் கைரேகை சோதிடம் என்னில் உண்மைதான் என்று ஒப்புக் கொண்டாலும் அது எவ்வளவு மோசமாக உள்ளத்தையே ஒடித்து நொறுக்கி நாசமாக்கி விடுகிறது? படித்தவளாகிய நீயே இப்படி ஆராயாமல் அழுது புலம்பினால் சாதாரணப் பாமர மக்களின் கதியெல்லாம் என்ன ஆவது? சரி அப்படியே... அப்படியே உனக்குத் தாலி பாக்கியமே இல்லை என்று வைத்து கொள்; அந்தக் கைரேகைக் காரன் பேச்சை மீறி நான் உனக்குத் தாலி கட்டுவதால் உடனே இறந்து போகிறேன் என்றும் வைத்துக்கொள். அதனால் இந்த உலகமே கவிழ்ந்துபோய் விடுமா? ''ஒரு நாளாவது ஒரு கணமாவது அவரோடு நெஞ்சார நிம்மதியாக வாழ்ந்தேன்; அதுவே எனக்குப் போதும்''—என்கிற நிறைவோடு நீ மற்றவர்களுக்கு உதவியாக வாழக் கூடாதா? முடியாதா? இந்தக் காதல் — கத்தரிக்காய் — திருமணம்—குடும்பம் என்பதெல்லாம் எதற்காக? ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தாங்கள் மட்டுமே இன்பம் அனுபவித்துக் குதியாட்டம் போடவா? மற்ற மற்ற மனிதர்களுக்கும் உயிர்களுக்கும் உதவியாக இருக்கத்தானே? இரண்டு பேர் சேர்ந்தும் சமுதாயத்திற்குப் பயன்படலாம்; முடியாதபோது தனித்து நின்றும் தன்னால் ஆனதைச் செய்யலாம்.

''என்ன இருந்தாலும் நானே உங்களுக்கு எமனாக மாறலாமா? எனக்குத் தாலி கட்டாமல் இன்னொருத்திக்கு நீங்கள் தாலி கட்டினால் நீங்கள் உயிரோடு வாழலாம் இல்லையா?''

''வாதத்திற்காக'' உன்னைவிட்டு விட்டு நான் இன்னொருத்திக்குத் தாலி கட்டுவதால் சாகமாட்டேன் என்றே வைத்துக்கொள்வோம். அது ஒரு நிம்மதியான வாழ்க்கை ஆகிவிடும் என்று நினைக்கிறாயா? ஒரு மனிதன் உயிரோடு வாழ்ந்தால் மட்டும் போதுமா? அவன் தன் இதயத்திற்கு உண்மையுள்ளவனாகவும் வாழ வேண்டாமா? நீ என் மனைவியாக ஆகாததாலேயே உன்னை என்னால் மறந்துவிட முடியும் என்று நினைக்கிறாயா?''

மணவாளன் இப்படிச் சொன்னதும் துவண்டு கிடந்த நிர்மலா துள்ளியெழுந்து சட்டென்று அவனது வாயைப் பொத்துகிறாள்.

அவளுக்கும் ஒரு துணிவு—உறுதிப்பாடு—வந்து விட்டதோ?

''சரி, அத்தான், இனிமேல் நாம் இப்படியெல்லாம் சாவைப் பற்றியே பேசிக்கொள்ள வேண்டாம். என்ன ஆனாலும் சரி; நீங்கள் எனக்குத்தான் தாலி கட்ட வேண்டும்; ஒரு நாளாவது நீங்கள் சொன்னமாதிரி ஒன்றாகவே வாழ்வோம்; ஒன்றாகவே சாவோம்!''

''ஆனால் நிர்மலா, நான் உனக்கு இனிமேல் தாலி கட்டப் போவதில்லை'' என்று சிரிக்கிறான் அவன்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' திடுக்கிட்டுக் கேட்கிறாள் அவள்.

''என்னதான் நீ துணிவை வரவழைத்துக் கொண்டாலும், நான் அணிவிக்கின்ற தாலியைக் காணும்பொழுதெல்லாம், நான் எங்கே இறந்து விடுவேனோ என்கிற அச்சம் உன் நெஞ்சை நெருடிக்கொண்டு இருக்காதா? அதனாலே....!?''

''அதனாலே....?''

''ஒரு புதிய திட்டத்தில் இறங்கப்போகிறேன்.''

...ட்டமா?''

''ஆமாம். நம்முடைய தமிழ் இன மக்கள் மடமை இருட்டை விட்டு வெளிச்சத்திற்கு வருவதற்காக அயராது பாடுபடுகிறாரே 'அய்யா' (பெரியார்), அவர் வகுத்த அருமையான திட்டந்தான் அது. அந்தப் புரட்சிகரமான திருமண முறைக்கு அண்மையில்தான் தமிழக அரசு சட்ட வடிவமும் கொடுத்துவிட்டது. அந்தத் திட்டப்படி, தாலி கட்ட வேண்டிய அவசியமில்லை, மாலை மாற்றிக்கொண்டாலேபோதும்!''

''அப்படியா? ரொம்ப ரொம்ப, நல்லதாப் போச்சே! அப்ப நான் கொடுத்து வைத்தவள் தான், அத்தான்!''

—என்றவாறே ஆசைபொங்க அவனை ஆரத் தழுவிக்கொள்கிறாள் நிர்மலா.

''அப்புறம், இன்னொரு உண்மையை உனக்குச் சொல்லப் போகிறேன்; அதைக் கேட்டு நீ இப்போது அதிர்ச்சி அடையக் கூடாது.''

—என்று அவளைத் தன் மார்போடு இறுகப் பிணைத்துக் கொண்டவாறே அவள் காதோரத்தை உதடுகளால் வருடுகிறான் அவன்.

''என்ன அத்தான், அது?'

—திகைப்பு மேலிட அவள் முகத்தை நிமிர்த்திப் பார்க்கிறாள்.

''பக்கத்து அறையில் தங்கியிருக்கிறாளே நளினி அவளுக்குப் பல ஆண்டுகளாகவே என் மீது ஒரு கண்; அவள் வலையில் நான் சிக்கவில்லை. அந்த ஆத்திரத்தில் நீ என்னை அடையக்கூடாது என்பதற்காக அவள் சூழ்ச்சி செய்திருக்கிறாள் என்று நினைக்கிறேன். அவளைப் பற்றிச் சொல்லி உன் மனத்தைச் சலனப் படுத்த வேண்டாம் என்று நினைத்தேன்.''

''அப்படியா, அத்தான்?'' நிர்மலாவுக்கு வியப்புமட்டுமல்ல, மகிழ்ச்சியும் தாங்க வில்லை.

தம்மை மறந்து சிட்டுக்குருவிகள் சிரிக்கின்றன. வெளியே வேப்பங்கிளையில் மட்டுமா? அந்த அழகான அறையிலேயுந்தான்.

# அண்ணா மொழி கேளீர்!

" தமிழ்மீது, நாம் பற்று வைப்பது, இயற்கை நியதி யாகும். ஆனால் அதற்குமேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம் மொழி என்பது தெரிகிறது. அந்த மொழிமீது வைக்கப்படு கின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறை களிலும் ஏற்றம் பெறவேண்டு மென்று விரும்புகிறோம். ஏற்றத் திற்குத் தடையாக, ஏதேனும் வருமானால், நம்மையும் அறி யாமல் உள்ளம் கொதிப்படை கிறது."

*தமிழ் நூல் வெளியீட்டு விழா* 14-4-1967

* * *

"ஆப்பிரிக்க நாட்டில் ஏராள மான தங்கம் கிடைத்துக்கொண் டிருந்தது. இப்போதும் கிடைத்து வருகிறது. ஆனால், அந்தத் தங்கம் விளையும் நிலத்தை, ஆப்பிரிக்கர்கள் வெள்ளையரி டம் குறைந்த விலைக்கு விற்றார் கள்.

இன்று அந்தத் தங்கத்தை ஆப்பிரிக்காவில் உள்ளவர்கள் வாங்குவதில்லை—அது எங்கோ செல்கிறது. காரணம், தங்கம் வாங்குகிற அளவுக்கு ஆப்பிரிக்க மக்கள், பொருளாதார வசதி பெற்றிருக்க வில்லை.

அவர்கள் தங்கத்தின்மீது தான் நடக்கிறார்கள், ஆனால் தரித்திரத்தோடு நடக்கிறார்கள்.

ஆகவே, நமது மக்களுடைய பொருளாதாரம் முதலில் பலப் படுத்தப்பட வேண்டும். மக்க ளுக்கு வருவாய் இருந்தால் தான், வியாபாரம் நடக்கும். வியாபாரம் நடந்தால் தான் லாபம்; பிறகுதான், லாப விகிதம் ஐந்தா ஆறா என்ப தெல்லாம்."

*பங்கீட்டுக் கடை வியாபாரிகள் கூட்டம்* 18-4-1967

* * *

"நமது நாட்டில் ஒரு கெட்ட பழக்கம்—படிப்பவன் வேலை செய்யமாட்டான். வேலை செய்ப வன் படிக்கமாட்டான். ஆனால் இந்த நிலை மெள்ள மெள்ள மாறி, தொழிலாளர்கள், தங் கள் வேலை நேரம் போக, ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த் துக் கொண்டாக வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது, அவர்கள் தொழி லுக்கே பயன்படும்.

அதோடு கூட, மற்ற பொது அறிவைப் பெறுவது நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலைமையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால், அளவுக்கு மீறிய கோரிக்கைகளை எழுப்ப மாட்டார்கள். "நாம் கேட்டால்கூட, அவர்கள் எங்கி ருந்து தருவார்கள்?" என்பது தெரிந்து விட்டால், கேட்கவே மாட்டார்கள்".

*அரசு அச்சக ஊழியர் கூட்டம்* 25-6-1967

* * *

நாட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதா. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறை யும் மட்டும் போதாது. சமூ கம் முழுவதும் எழுச்சிபெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கி னைச் செலுத்தி, புது நிலையினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ள வேண்டும்.

தமது உழைப்பினை மன முவந்து ஈந்திட, பலப்பல ஆயி ரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமை யும். "எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செல விட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடு வேன்" என்ற உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளர்ந்திடுவதுஉறுதி.

*வரவு செலவுத் திட்ட அறிக்கை* 17-6-1967

* * *

"எந் நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருள கன்று ஏற்றம் பெற்று இருந் திட வேண்டுமெனில், அந் நாட்டினில் தொடராய் அறி வாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்று இது, தீது இது. நமதிது, பிறர் தந்ததிது. மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அடிப்படை எழுந்தபடி இருந்திட வேண்டும்."

*மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா* 7-9-1967

* * *

"தமிழ்மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வ தோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர் கள் நோக்கி இந்தத் தமிழ் மொழி உங்களுக்கு மட்டும் உரிய மொழி அல்ல. எங்க ளுக்கும் அதுதான் மொழி. அதுதான் இணைப்பு மொழி, அதுதான் ஆட்சிமொழி என்று கூறும் காலம் வரும்!

அந்தக்காலம் அவசர நடை யால் வருவதல்ல! அவசரக் கோலத்தில் கிட்டுவதல்ல!

தூண்டில் போடுபவன் முள் அருகில் மீன் வரும் வரை எப்படிப் பொறுமையுடன், இருப்பானோ, அத்தகைய பொறுமையை நாம் கைக் கொள்ளவேண்டும், கற்றுக் கொள்ளவேண்டும். தமிழ் மறையிலும் தமிழ் நெறி யிலும், காலம்—இடம்—வகை —பொருள் அறிந்து செய்ய வேண்டும் என்று கூறப்பட் டிருக்கிறது. அந்த வழி நடந்து, தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்திடக் கூடிய நன்னாளை நாம் உரு வாக்குவோம்."

*உலகத் தமிழ் மாநாடு சனவரி* 1968

* * *

# ஆற்றோரம்





படைகிழிக்கும் பேராற்றல் பெற்றிருந்த
பகவனொரு சிற்றரசன்; மதத்தால் புத்தன்;
வடகிழக்கே அவன்நாடு; சிறிய நாடு.
மலையுண்டாம் அதனாலே குறிஞ்சி நாடு.
நடைவழுக்கும் மழைஇரவில் ஓர்நாள், அந்த
நல்லவனைப் பிச்சுக்கள் காண வந்தார்.
குடிசெழிக்க வழிவகுத்தோன் வணங்கி நின்று
குறையுண்டோ? முறையுண்டோ? என்று கேட்டான்;

மயில்விழித்து விளையாடிப் பொழுது போக்கும்
மலைச்சாரல் மன்னவனே! அகரம் போன்ற
உயிரெழுத்தாய் நீயிருந்து வருவ தாலே
ஒரு குறையும் எமக்கில்லை; நேற்று நாங்கள்
வெயில்விழித்த வேளையிலோர் செடியைக் கண்டோம்
விதைகண்டோம்; அவ்விதையில் எண்ணெய்கண்டோம்;
இயல்விழித்தால் காவியங்கள் விழிக்கும்; அந்த
எள்விழிக்க அதில்கண்டோம் எண்ணெய் வெள்ளம்!

இலுப்பையிலும் நெய்யுண்டு; செடியில் தோன்றும்
எள்ளினிலும் நெய்யுண்டு வேந்தே! அந்த
இலுப்பைதரும் நெய்யைவிடப் புள்ளி போன்ற
எள்வழங்கும் நறுநெய்யே சிறந்த தாகும்.
கலப்படமே இல்லாத எண்ணெய் என்னும்
காரணத்தால் நல்லெண்ணெய் எனப்பே ரிட்டோம்
எலிப்புழுக்கை எள்ளோடு சேரு மாயின்
எள்ளினது தனிப்பெருமை குன்றிப் போகும்.

ஆத்திரத்தின் உச்சியிலே நிமிர்ந்து நின்றால்
அழிவுவரும் என்றுணர்த்தும் வேந்தே! இந்தப்
பாத்திரத்தில் குடியிருக்கும் எண்ணெய், இங்கே
பலர்தலையில் குடியேறு மாயின், அன்னார்
நேத்திரத்தில் ஒளிபெருகும்; மேனி மின்னும்;
நிச்சயமாய் உடற்சூடும் தணிந்து போகும்
கூத்தடிக்கும் கபவாத பித்த மெல்லாம்
குளிர்நாளில் பாதிரிப்பூப் போலே வாடும்!

கிண்ணத்தில் சந்தனத்தைப் பார்க்கும் போதும்;
கிளிமூக்கு வெற்றிலையை மெல்லும் போதும்;
பண்ணத்தி என்னுமிசை கேட்கும் போதும்;
பருவவெறி உண்டாகும்; எண்ணெய் தேய்த்துக்
கொண்டிங்கே தலைமுழுகும் நாளில் மட்டும்
கொஞ்சுவதோ கூடுவதோ ஆபத் தாகும்!





புண்ணென்று தெரிந்தாலும், ஈக்கள் அந்தப்
புண்மீது மொய்த்திடுமோ இரவில்? என்றான்.

கொடைபழகும் கரமுடையான் அதனைக் கேட்டுக்
குதூகலித்தான்; பிறர்க்கதனை எடுத்து ரைத்தான்;
படைபழகும் வீரர்களும் அவனும், பச்சைப்
பசலைநிலாச் சிறுவர்களும் பிறரும்; முல்லைக்
கொடிபழகும் கோதையரும் எண்ணெய் தேய்த்துக்
கொண்டெழுந்து நதிநீரில் குளித்தெ ழுந்தார்.
அடிபழகும் அன்னத்தைப் போன்ற பெண்கள்
ஆற்றோரம் எண்ணெய்விளக் கேற்றி வைத்தார்.

தைப்பனி நீர் போலுள்ளம் குளிர்ந்த மன்னன்
தாமரையைப் போல்மலர்ந்தோர் தம்மை நோக்கி
ஐப்பசியில் சதுர்த்தசியாம் திதியில் மெச்சும்
அறிவுடையோர் எள்கண்டு பிடித்த தாலே,
நெய்ப்பசையின் பயனறிந்தோம்! எண்ணெய் தேய்த்து
நீராடி ஆனந்தக் களிப்பும் கண்டோம்!
பொய்ப்பசியை வளர்க்காதீர்! வையம் போற்றும்
புகழ்ப்பசியை வளர்த்திடுவீர்! இதுதான் தேவை.

பனித்திருநாள் நமக்குண்டு; வேங்கை வீரர்
படைத்திருநாள் நம்நாட்டில் வளர்ப்ப துண்டு
கனித்திருநாள் நாமறிவோம்; போதி புத்தர்
கதைத் திருநாள் நமக்கெல்லாம் பெருநா ளாகும்;
மனைத்திருநாள் ஆகட்டும் இனிமேல் இந்நாள்
வரநதியில் மிதக்கட்டும் எண்ணெய்த் தேமல்!
தனித்திருநாள் புதுத்திருநாள் இந்நாள்! எள்ளின்
சரித்திரந்தான் நல்லெண்ணெய்த் திருநாள் என்றான்;

தள்ளாடும் கிழவர்களும் பிறரும்; புத்த
சங்கத்துச் சான்றோரை வாழ்த்த லானார்.
எள்ளே நீ நீடூழி வாழ்க! எங்கே
இருந்தாலும் நீ வாழ்க! என்றார் மாதர்!
கள்ளேநீ நாட்டை விட்டே ஒழிக! எள்ளின்
கண்ணீரே நீ வாழ்க!—என்றார் மேலோர்
உள்ளீடாம் கருத்தமைந்த கவிதை போலே
ஒளித்திருநாள் வாழட்டும் என்றான் வேந்தன்.



கவிஞர் சுரதா

# இங்கே எல்லாம் கிடைக்கும்!




காஞ்சிபுரம், காஞ்சீ, காஞ்சி, கச்சி, கச்சிப்பேடு, கச்சியம்பதி, காஞ்சீபுரம், காஞ்சனபுரம், காஞ்சீபுரி, பல்லவேந்திரபுரி என்று பல பெயர்கள் காஞ்சீபுரத்திற்கு வழங்கி வந்திருக்கின்றன. காஞ்சி என்னும் சொல் எண்கோவையுள்ள மகளிர் இடையணி என்ற பொருளையும், எதிர்த்துப் பொருதல் என்ற பொருளையும் உடையது. காஞ்சி மரங்கள் மிக்கிருந்த இடமாதலால், இவ்வூர் காஞ்சீபுரம் எனப் பெயர் பெற்றது என்பர்.

* * *

ஜப்பான் மொழியில் உள்ள ஒரு செய்தியை, ரஷ்ய மொழியில் ஒரு நிமிட நேரத்தில் மொழி பெயர்த்து விடுகிறது ஒரு புதுவகைக் கருவி. மனிதர்கள் கூட மொழிபெயர்க்கும் பணியில் தவறிவிடுகிறார்கள். ஆனால் இந்தப் புதுவகைக் கருவி தவறுவதில்லை. மொழியின் பொருள் சிறிதும் தவறாத வண்ணம் விரைவாகவும் தெளிவாகவும் மொழி பெயர்த்து விடுகிறதாம். மாஸ்கோவில் உள்ள பௌதிகப் பொறியியல் நிலையம் இந்தக் கருவியைக் கண்டுபிடித்திருக்கிறதாம்.

* * *

250 வருடங்களாகப் பலன் தந்து வரும் ஆப்பிள் மரம் ஒன்றினை சோவியத் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். தெற்கு கிர்க்கிசிய மலைகளில் இந்த மரம் இருக்கிறதாம். ஆப்பிள் மரம் இத்தனை ஆண்டுகள் இருப்பது உலக அதிசயங்களில் ஒன்று என்று கருதப்படுகிறது. உயர்ந்த மலைப்பகுதியிலும், நல்ல சூரிய வெளிச்சத்திலும் அந்த மரம் அமைந்திருந்ததுதான் அதன் 250 ஆண்டு வாழ்வுக்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

* * *

நியூயார்க் நகரத்திலே விநாயகர் ஆலயம் ஒன்று நிறுவுவதற்கு அங்கே உள்ள இந்தியர்கள் முயற்சி செய்கிறார்கள். அந்த ஆலயப்பணிக்கு, தமிழ் நாட்டிலுள்ள தெய்வீகப் பேரவை என்னும் மன்றம் 25 ஆயிரம் ரூபாய் நன்கொடை தரப்போகிறதாம்!

* * *

இங்கிலாந்தில் உள்ள அர்சில் பீஸ்லி என்பவர், கடந்த 46 ஆண்டுகளாகத் தினமும் ஒரு தவளையை விழுங்கி வருகிறாராம். அவருக்கு எந்த விதத் தீங்கும் ஏற்படவில்லையாம். அவர் தின்னும் தவளையின் அளவு சுமார் ஒரு அங்குலத்துக்கும் குறைவானதாம். "தவளைக்குஞ்சு எனது குடலைச் சுத்தம் செய்கிறது" என்கிறார் அவர்.

* * *

சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்ட பாறையில் இருந்து ஓர் உப்புக் கண்டு பிடித்திருக்கிறார்களாம். அதற்கு ஆர்மல் கோலைட் என்றுபெயர்வைத்திருக்கிறார்கள். அப்பாலோ 11-ன் துணைகொண்டு, சந்திரனைத் தொட்டு வந்த விஞ்ஞானிகள் ஆர்ம்ஸ்ட்ராங், ஆல்டரின், கோலின்ஸ் என்ற மூவரின் பெயர்களின் முதற்பகுதிகளை இணைத்துத்தான் ஆர்மல்கோலைட் என்ற பெயரை உருவாக்கியிருக்கிறார்கள்.

* * *

பிரிட்டனில் கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகிய முப்படைகளில் ஆடவர் மட்டுமல்ல, பெண்களும் அங்கம் வகிக்கிறார்கள்—நாட்டுப் பாதுகாப்புக்கு நல்ல விதத்தில் பணி புரிகிறார்கள்.

* * *

கிரீஸ் நாட்டில் மிகமிகப் பழங்காலத்திலேயே கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே, நானூறு பேர் அமரக்கூடிய நாடக அரங்கம் ஒன்றினை உருவாக்கியிருந்தார்களாம். அந்த அரங்கத்தில் அமர்ந்து நாடகங்களைக் கண்டு அகமகிழ்ந்து வந்தார்களாம் அந்நாட்டுச் செல்வந்தர்கள்.

* * *

ராஜஸ்தானத்திலே ஒரு புது வகைக் கோதுமையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். மிகவும் குள்ளமாகக் காணப்படும் அந்தக் கோதுமை ரகத்திற்கு லால் பகதூர் என்று பெயரிட்டிக்கிறார்களாம்.

* * *

1922-ம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 25 கோடியாக இருந்தது. 1947-ல் இந்தியா விடுதலை அடைந்தபோது, பாகிஸ்தானையும் சேர்த்து, மக்கள் தொகை 30 கோடி; 1951-ல் (பாகிஸ்தானில்லாமல்) இந்தியாவின் மக்கள் தொகை 36 கோடி; பின்பு 1961-ல் 44 கோடியாகப் பெருகியது; 1966-ல் 50 கோடியை எட்டிப் பிடித்து, 1968-ல் 52 கோடியாக மாறியது. தற்போது 55 கோடியை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

* * *

தென் இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ள பலருடைய வாழ்க்கை காஞ்சீபுரத்தோடு ஒன்றியது. திப்புவும், ஹைதரும் இங்கே படுதோல்வி அடைந்தனர். கிளைவ் இவ்வூரில் போரிட்டுப் புகழ் பெற்றார். சீரும் சிறப்பும் பெற்றிருந்த கருநாடக நவாப் சாதத் உல்லாகான் சமாதியடைந்தது இவ்வூரிலேதான்.

# நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்



மழலையின் சொல்லில் குழலிசையையும் யாழிசையையும் கேட்க வேண்டுமெனில், மக்கட் செல்வம் அளவுக்குட்பட்டிருத்தல் அவசியம்.

பெற்ற குழந்தைகளுக்கு ஏற்றமிகு கல்வி தர, வளமான வாழ்வு அளித்திடத், திட்டமிட்ட குடும்பத்தால்தான் முடியும்.

இதனைக் கருத்தில் கொண்டுதான், குடும்ப நலத் திட்டத்தில் தீவிரமாக ஈடு பட்டிருக்கிறது, நமது அரசு !

குடும்ப நலத் திட்டத்தின் முதல்படி, அத்திட்டத்தின் நன்மைகளை வாழ்க்கைத் தரத்தின் பல்வேறு படிகளிலும் மக்களுக்கு எடுத்துரைப்பது, அதில் அவர்களை ஈடுபடத் தூண்டுவது.

அதற்காக, அத்துறையில் ஈடுபடும் பல்வேறு அலுவலர்களுக்கும்—டாக்டர்கள், நர்சுகள் சுகாதார அதிகாரிகள், குடும்ப நலக் களப் பணியாளர்கள் போன்றவர்களுக்கும்— தனிப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்காகத் தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் (சென்னை, சேலம், காந்திகிராமம்) வட்டாரக் குடும்ப நலப் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

அதில் முக்கியத்துவம் வாய்ந்தது சென்னை எழும்பூரில் உள்ள பயிற்சி நிலையம். அமெரிக்கா சென்று அங்குள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களில் குடும்ப நலத் திட்டத்தின் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றுத் திரும்பியவர், இந்தப் பயிற்சி நிலையத்தின் முதல்வர் டாக்டர் சம்பூரணம். பயிற்சி நிலையப் பணிகள் பற்றி,

டாக்டர் சம்பூரணம் விளக்குகிறார் :

‘‘ஒரு கோடி மக்கள் தொகைக்கு ஒரு பயிற்சி நிலையம் என்ற அடிப்படையில் இந்தியா முழுமைக்கும் 46 பயிற்சி நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அதில் தமிழகத்தில் 3 நிலையங்கள் இயங்குகின்றன.

தமிழகத்தில் உள்ளவற்றில் எழும்பூரில் உள்ள இந்தப் பயிற்சி நிலையத்திற்குத் தனித்தன்மை உண்டு. இங்குதான் தமிழகம் முழுவதுமுள்ள டாக்டர்களுக்கும் நர்சுகளுக்கும் லூப் முறைகள், வில்லைகளைப் பயன்படுத்தும் முறைகள் ஆகியவைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

அவர்கள் மட்டுமின்றி, சுகாதார ஆய்வாளர்கள், வட்டாரப் பயிற்றுவிப்போர், குடும்ப நலப் பணியாளர்கள் ஆகியோரும் இங்கு பயிற்சி பெறுகின்றனர். மக்கள் தொகை, குடும்பநலத் திட்டம், பாலினக்கல்வி ஆகியவைகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வகுப்புகளில் பாடங்கள் சொல்லித் தருவதோடு, கிராமங்களுக்கும் நகரப் பகுதிகளுக்கும் சென்று இத் திட்டம் செயல்படும் முறையை நேரில் கண்டறியவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

*1-4-66* முதல் *31-3-70* வரையுள்ள 4 ஆண்டுகளில் பயிற்சி பெற்றோர் *1837* பேர். இந்த ஆண்டு (1969-70) 875 பேருக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழிற் கூடங்களைச் சேர்ந்த குழுத் தலைவர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்காகக் குடும்ப நலக் கருத்தரங்குகள் நடத்துகிறோம்.

இங்குள்ள விரிவுரையாளர் தவிர சென்னை மாநகரிலுள்ள பல்வேறு மருத்துவ நிலையங்களைச் சேர்ந்த நிபுணர்களை அழைத்து விரிவுரை ஆற்ற ஏற்பாடு செய்கிறோம்.

சமீபத்தில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த குடும்ப நலத்திட்ட நிபுணர் டாக்டர் மாக்டோனல்ட் இங்கு வந்து பயிற்சியாளர்களுக்கு விரிவுரையாற்றினார், ஊசி முறை பற்றி.

தற்போது இங்கு பயிற்சி பெறுபவர்கள் தங்குவதற்கு விடுதி வசதியில்லை. மேலும், மருத்துவமனை அனுபவம் (Clinical Experience) பெறப் பக்கத்திலுள்ள தாய்-சேய் மருத்துவமனையை நாட வேண்டியுள்ளது.

இக்குறைபாட்டை நீக்கிடத் தற்போது ஐந்து இலட்ச ரூபாய் செலவில் இந்த இடத்தில் புதிய கட்டடங்கள் நிறுவப்படுகின்றன. அதில் ‘லூப்’ முறை, அறுவைச் சிகிச்சை ஆகியவற்றிற்கான கூடங்கள், பயிற்சி



கிராமத்துப் பெண்கள், குடும்பநலத் திட்டத்தை ஆவலோடு கேட்கிறார்கள்.

யாளருக்கான விடுதிகள் அனைத்தும் இருக்கும். அதோடு இரண்டு இலட்ச ரூபாயில் கருத்தரங்கு மண்டபமும் இங்கு நிறுவப் படும்.''

இதோ! சேலம் தலைமை நிலைய மருத்துவமனையைச் சேர்ந்த உதவி-சர்ஜன் டாக்டர் எஸ். ராஜலட்சுமி—தற்போது பயிற்சி பெறும் லேடி டாக்டர்களில் இவரும் ஒருவர்; உங்களுடன் உரையாடுவார்:

டாக்டர் ராஜலட்சுமி.

நான் ஆகஸ்டு 1-ம் தேதியில் பயிற்சிக்காக வந்தேன். எங்கள் குழுவில் சுமார் 30 பேர் இருக்கிறார்கள். எங்களுக்கு 30 நாட்கள் பயிற்சி. அதில் 7 நாட்கள் நேர் முகப் பயிற்சி. நான் பெரியபாளையம், பூந்தமல்லி ஆகிய இடங்களிலுள்ள சுகாதார நிலையங்களுக்குச் சென்று வந்திருக்கிறேன். அடுத்ததாக சைதாப்பேட்டைக்கும் நந்தனம் பகுதிக்கும் செல்லவிருக்கிறோம்.

பொதுவாக எம். பி. பி. எஸ். படிப்பில் குடும்பக் கட்டுப்பாடு பற்றித் தனியாகப் பயிற்சி அளிப்பது கிடையாது. எனவே இந்தப் பயிற்சி எங்களுக்கு மிகவும் பயன் தருமென நான் கருதுகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு, நமது நாட்டிற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. நமது பொருளாதார நிலைக்கு இரு குழந்தைகளுக்குமேல் தாங்காது. எனவே, இத்திட்டம் நமக்கு மிகமிகத் தேவை.

மற்ற நோய்களெனில் மக்கள் டாக்டரைத் தேடி வருகிறார்கள். ஆனால் குடும்ப நலத்திட்டத்திற்கு டாக்டர்களும், திட்ட ஊழியர்களும் மனுநீதித் திட்டம் போல் மக்களை நாடிச் சென்று எடுத்துரைக்க வேண்டியுள்ளது.

இந்நிலை மாற வேண்டும். குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை மக்கள் உணர வேண்டும். ஏனெனில் குடும்பத்தைப் பெருக்குவதோ, குறைப்பதோ அவர்கள் கையில்தான் இருக்கிறது. மக்களின் பரிபூரண ஒத்துழைப்பு இதற்கு மிகவும் தேவை.

குடும்ப நல ஊழியர்கள் பதின் மூவரை ஏற்றிக்கொண்டு ஓர் ஊர்தி பெரியபாளையம் செல்கிறது. அதில் எழுவர் பெண்கள். அறுவர் ஆடவர். மிகவும் உற்சாகத்தோடு பணியாற்றப் புறப்படுகின்றனர். அவர்கள் உள்ளமறிந்து வண்டியும் கடிது செல்கிறது. குழுவினரில் ஆண்கள் இரு பிரிவுகளாகவும் பெண்கள் இருபிரிவுகளாகவும் சென்று பெரியபாளையம் மக்களிடம் குடும்ப நலத்திட்டம் பற்றி எடுத்துரைக்கின்றனர். மக்களும் ஆர்வத்தோடு அவர்களின் உரைகளைச் செவி மடுக்கின்றனர்.

குழுவினை நடத்திச் செல்லும் சுகாதார ஆய்வாளர் ராஜேந்திரன் கூறுகிறார்:—

''ஆந்திர மகிளசபா, குஜராத்தி சகாய் மருத்துவமனை, ரெயினி மருத்துவமனை, வி.எச்.எஸ். ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இந்த குடும்பநலப் பணியாளர்கள். இவர்களுக்கு 15 நாட்கள் பயிற்சி தரப்படுகிறது. அதில் 5 நாட்கள் இப்படி வெளி கிராமங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் அழைத்துச் சென்று பயிற்சி அளிப்போம். மருத்துவமனைகளிலிருந்து பயில்வது, வீடுவீடாகச் சென்று, பெண்களையும், ஆடவரையும் சந்தித்துக் குடும்ப நலத்திட்டம் பற்றி எடுத்

பெண் டாக்டர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



துரைத்து, அதனைக் கடைப் பிடிக்கத் தூண்டுவது ஆகிய வற்றிலும் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

டெரியபாளேயம் முதல் நிலை மருத்துவ நிலைய டாக்டர் **ரமாதேவியின் அனுபவம்:—**

''நான் இந்த மருத்துவ நிலையத்திற்கு வந்து ஓராண்டுக் காலமாகிறது. மருத்துவ நிலையத்திற்கு மற்ற நோய்களுக்காக வருவதோடு குடும்ப நல ஆலோசனைக்கும் வருகின்றனர். அதோடு நானும் அவ்வப்போது சுற்றுப்புறக் கிராமங்களுக்குச் சென்று மகளிர் மன்றங்கள் மூலமாகப் பெண்களைச் சந்தித்துக் குடும்பநலத் திட்டம் பற்றி எடுத்துரைப்பது உண்டு.

'லூப்' மற்றும் பிற கருத்தடை முறைகளுக்கு இங்கேயே ஏற்பாடுகள் செய்கிறோம். அறுவைச் சிகிச்சைக்கு மட்டும் சென்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறோம்.

பொதுவாக எனது அனுபவத்தில் இப்பகுதியில் பெண்கள் குடும்பநலத் திட்டத்தில் மிகுதியாக ஈடுபாடு காட்டுகின்றனர். நாம் மிகுந்த முயற்சி எடுத்தால் அதற்குத் தக்கபடி பலனும் கிடைக்கிறது.

ஊத்துக் கோட்டையில் ஒரு பெண், குடும்பநல ஆலோசனைக்கு வந்தாள். நான் அறுவைச் சிகிச்சைக்கு ஆலோசனை கூறினேன். அவள் முதலில் இணங்கவில்லை. மற்றைய கருத்தடை முறைகளைப் பின்பற்றி வந்தாள். ஆனால் அதனை ஒழுங்கான முறையில் கடைப் பிடிக்காததால் கர்ப்பமாகி விட்டாள். அதன்பின் என்னிடம் மிகவும் வருத்தப் பட்டாள். அடுத்த குழந்தை பிறந்ததும், முதல் வேலையாக அறுவைச் சிகிச்சைக்கு ஒப்புக் கொண்டாள். இப்போது மகிழ்ச்சியோடு குடும்பம் நடத்துகிருள்.

பாகல்மேட்டில் ஒரு அம்மையாருக்கு, ஓர் ஆண் குழந்தையும் 2 பெண் குழந்தைகளும் இருந்தன. இருப்பினும், இன்னொரு ஆண் குழந்தை வேண்டுமென்று விரும்பினர். குடும்ப நலத் திட்டத்திற்கு இணங்கவில்லை.

அடுத்ததும் பெண் குழந்தையே பிறந்தது. உடனே அறுவைச் சிகிச்சைக்குச் சம்மதம் தெரிவித்து விட்டார் அந்த அம்மையார்.

ஆண்பிள்ளை வேண்டும் என்ற வீண் பேராசையினால் பலர் தங்களது குடும்பத்தை அளவுக்கு மீறிப் பெருக விட்டுவிடுகின்றனர். அவர்களைச் சம்மதிக்க வைப்பது தான் மிகவும் சிரமமாகவுள்ளது.

வேறு சிலர் மற்றவர்களின் பேச்சைக் கேட்டு மனம் தடுமாறுகின்றனர். அவர்களுக்குக் குடும்பநலத் திட்டத்தில் ஆர்வம் இருப்பினும், அறுவைச் சிகிச்சை செய்திடும் எண்ணம் இருந்தாலும், கடைசிவரை முடிவு எடுப்பதில்லை. அறுவைச் சிகிச்சைக்கு வந்து, படுத்துத் தயாரான பிறகு கூட, மனக் குழப்பம் அடைந்து, முடிவை மாற்றிக் கொள்ளும் குழப்பவாதிகளும் உண்டு. இவர்களைச் சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகி விடும்.

இதற்கு அடிப்படைக் காரணம் கல்வியறிவுக் குறைவும் ஒன்று. அதோடு குடும்ப நலத் திட்டத்தின் பலனை நன்கு உணராமல், இங்கொன்றும் அங்கொன்றுமாக நிகழும் சில சிறு தவறுகளைப் பெரிதாக்கிக் கற்பனை செய்து பார்ப்பதும் ஒரு காரணம்.

ஐயப்பாடுகளை நீக்க இந்தக் குடும்ப நலப் பயிற்சித் திட்டம் ஊழியர்களுக்கும், அவர்கள் மூலமாக மக்களுக்கும் பெரிதும் உதவுகிறது.

இது சமூகப் பிரச்சினை— மனோதத்துவப் பிரச்சினை. எனவே பக்குவமாக, லாவகமாகக் கையாண்டால்தான் நல்ல பலன் கிடைக்கும். இதில் மிகவும் அக்கறையோடு, நல்லுணர்வோடு ஈடுபட்டால், நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை. எனக்கு நிரம்பவும் இருக்கிறது''

பெரியபாளையம் தனம் சொல்கிறார்:—

நாங்க ஏழைப்பட்ட குடும்பங்க! எங்க வீட்டுக்காரர்தான் சம்பாதிக்கிறாரு! எங்களுக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இருந்திச்சு. வயிற்றிலே கர்ப்பம். இந்தப் பிள்ளைகளை வைச்சுக்கிட்டே ரொம்பக் கஷ்டப்படுகிறோம். இனிமே பிள்ளை பிறந்தா எப்படின்னு எனக்கு ரொம்பக் கவலை. எங்க வீட்டுக்காரருக்கும் அப்படித்தான். இதே கவலையிலே அவரு தாடியும் மீசையும் வைச்சுட்டு அலைவாரு! எனக்கு மிகுந்த மனக் கஷ்டமாப்போயிடும்.

அப்போ ஒரு நாள் இந்தக் குடும்பநல ஐயா வந்தாங்க. இந்தமாதிரி அறுவைச் சிகிச்சை செய்திடலாம்னு சொன்னாங்க.

நாங்க டாக்டரம்மாவைப் பார்த்துப் பேசினோம். அவங்களும் குழந்தை பிறந்ததும் செய்திடலாம்னாங்க. அவங்க பேச்சின்படி எனக்கு மூன்றாவது குழந்தை பிறந்ததும் கர்ப்பத் தடை பண்ணிக்கிட்டேன். இப்போ ஒரு பயமும் இல்லை. சவுக்கியமா இருக்கிறோம்.



ஊழியர்களை ஏற்றிக் கொண்டு ஊர்தி கிராமங்களுக்குச் செல்கிறது.



ஓர் இளம் தாய்க்கு, குடும்பநல முறைகளை விளக்குகிறார் டாக்டர்.

# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும் பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

வெளியீடு:

## கதர் கிராமத் தொழில் துறை

௨, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

# அவரது 62-வது பிறந்த தின விழாவின் போது

# அமரர் அண்ணாவிற்கு

## எமது அஞ்சலி!

அவர் நினைவிற்கு எமது **நிரந்தரக் காணிக்கை!!**
அறிஞர் அண்ணாவின் அழகிய உருவம் தாங்கிய

# அண்ணா பிளாஸ்க்

மனைவி, மக்களுடன் வீட்டில் உணவு உண்டு மகிழும்போதும், உல்லாசப் பிக்னிக்குகளின் போதும், அறிஞர் அண்ணாவை நினைக்கவும், அவரது இலட்சியங்களான **'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'** ஆகியவற்றை எண்ணவும் உதவுபவை இந்த 'அண்ணா பிளாஸ்குகள்'

**Jg** METTLE

**Jg கிளாஸ் இண்டஸ்ட்ரீஸ்**
பிரைவேட் லிமிடெட்
பிம்பிரி—பூனா.




இன்றே வாங்குங்கள்
**அண்ணா பிளாஸ்க்**
எங்கும் கிடைக்கும்

EP.J31



பிறந்த மண்ணுக்குப்

பெரும் புகழ் ஈட்டித்தந்த

பேரறிஞர் அண்ணாவின்

பிறந்தநாளில்

அவரை நினைவு கூர்ந்து

வாழ்த்துரைத்துப்

பெருமை கொள்ளும்

காஞ்சிபுரத்து

நிறுவனங்கள்

தொலை பேசி எண்: 457

எஸ்வி சர்வீஸ் ஸ்டேஷன்

ரெயில்வே ரோடு,

காஞ்சிபுரம்.

குமரன் ரைஸ்மில்

L. No. *118* H. கணபதி முதலியார்

L. No. *154* K. சுப்பிரமணிய நாயகர்

L. No. *53* L. செல்வராஜ்

L. No. *153* S. மாணிக்கம்

நெல் & அரிசி வியாபாரம்

7. கைலாசநாதர் கோயில் தெரு,

காஞ்சிபுரம்.

தந்தி: ட்ருத் தொலை பேசி எண்: 559

ஏ. சபாபதி முதலியார் & கோ.

நெல், அரிசி, பருப்பு வியாபாரம்

24. பஞ்சிபேட் பெரிய தெரு,

காஞ்சிபுரம்–2.



கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு

என்ற மூன்று தாரக மந்திரங்களை
இத்தரணிக்கு விட்டுச் சென்ற தானைத்தலைவா!
நின் இறவாப் புகழ் வாழ்க!
உன் நினைவு எங்கள் நெஞ்சங்களில்
நிலைத்து நிற்க
உன் பாத மலர்களை வணங்குகிறோம்.

ஆர்வீஸ் காபி

காஞ்சிபுரம்–2.

உரிமையாளர்: இரா. வெங்கடேசன்



தொலை பேசி எண்: 38

A. குப்புசாமி

நெல், அரிசி வியாபாரம்

3/5 சரவண முதலி தெரு,

வாலாஜாபாத்,

செங்கற்பட்டு மாவட்டம்.



இருபதாம் நூற்றுண்டின் ஒளிவிளக்கே!
உலகப் புகழ்பெற்ற உத்தமத் தலைவா!
உன் புகழ் வாழ்க!

அரசூஸ் ராணி காபி

534. 537 B, காந்தி ரோடு,

காஞ்சிபுரம்–1.

உரிமையாளர்: R. திருநாவுக்கரசு.

தொலைபேசி எண் : 763

A. D. ராஜா அரிசி ஆலை

நெல் & அரிசி வாணிபம்

உரிமையாளர் : A. தேவராய முதலியார்.

64 B, சாலைத் தெரு,

காஞ்சிபுரம்-2.

தொலைபேசி எண் : 113

அசோகா ரைஸ் மில்

உரிமையாளர் : S. P. ஜெகதீசன்

நெல், அரிசி, வியாபாரம்

வெள்ள குளம் தெரு,

பெரிய காஞ்சிபுரம்-2.

தந்தி : திருகோசில்க் தொலைபேசி எண் : 222

பட்டு, கைத்தறிக்காக அரும்பாடு பெற்ற

அறிஞர் பெருந்தகை அண்ணாவின்

திருநாமம் வாழ்க ! வாழ்க !

காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி

நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி

விற்பனைச் சங்கம் லிட். நெ. G· 2054

207, காந்தி ரோடு (தேரடி எதிரில்)

காஞ்சிபுரம்.

அறிஞர் பெருந்தகையால் திறந்து வைக்கப் பெற்ற எங்கள் புதிய விற்பனை நிலையத்திற்கு தங்கள் தேவைகளுக்கு வருகை தாருங்கள்.

தொலைபேசி எண் : 410

அரங்கசாமி அரிசி ஆலை

நெல் & அரிசி வாணிபம்

உரிமையாளர் : R. ஜானகிராமன்

64-D, சாலைத் தெரு,

காஞ்சிபுரம்-2.

# குடும்ப நலத் திட்ட இரு வார விழா!

இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு சதுர மைலுக்கு மக்கள் நெருக்கம் சராசரி 340 ஆகும். ஆனால், தமிழகத்தில் ஒரு சதுர மைலுக்கு 600-க்கு மேலெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

*　*　*

இந்தியத் துணைக் கண்டத்தில் குழந்தைகள் பிறப்பு விகிதம் 1,000–க்கு 40 ஆக உள்ளது. அதனை 1,000 க்கு 25 ஆகக் குறைத்திட வேண்டுமென்பது குடும்ப நலத் திட்டத்தின் குறிக்கோள்.

*　*　*

வேளாண்மை பெருகி உணவு உற்பத்தி வளர்ந்து உள்ளது ; தொழில் துறையில் உற்பத்திப் பெருக்கம் 150 சதவீதம் உயர்ந்துள்ளது ; தேசிய வருமானம் 75 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இருந்தும், நாட்டில் இல்லாமை அகலாதது ஏன் ? மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாததே காரணம் !

*　*　*

குடும்ப நலத் திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம்தான் முன்னணியில் நிற்கின்றது. தமிழ் நாட்டில் இதுவரை சுமார் 8,50,000 ஆண்களும், 68,700 பெண்களும், குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். இந்தியா முழுவதற்கும் இவ் வகையில் அறுவைச் சிகிச்சை பெற்றிருப்போரின் எண்ணிக்கை 70 லட்சம்.

*　*　*

தமிழகத்தில் 566 அறுவைச் சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இவை ஆண்களுக்கான 'வாசக்டமி' என்ற அறுவைச் சிகிச்சையையும், பெண்களுக்கான 'டூபெக்டமி' என்ற அறுவைச் சிகிச்சையையும் செய்கின்றன.

*　*　*

இவற்றில் 212 மருத்துவ மனைகளிலும், 292 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 38 தனியார் மருத்துவ நிலையங்களிலும், 9 தேயிலைத் தோட்டப் பகுதிகளிலும், 8 நிலையங்கள் நகராட்சிகளின் கீழும், 7 ரெயில்வே துறையிலும் இயங்கி வருகின்றன.

*　*　*

உலகத்தின் மொத்த நிலப் பரப்பில் 2·4 சத விகிதம் நிலப் பரப்புத்தான் இந்தியாவிடமுள்ளது. ஆனால், உலக மக்கள் தொகையில், 14 சத விகிதம் பேர் இந்தியாவில் இருக்கிறார்கள்.

நம் நாட்டில் ஒவ்வொரு ஒன்றரை வினாடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது. ஆண்டுக்கு இரண்டு கோடியே பத்து லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன.

*　*　*

ஒவ்வோர் ஆண்டும் நம் நாட்டில் இறப்பவர்களின் எண்ணிக்கை 80 லட்சம். ஆகையால் ஒவ்வோர் ஆண்டும் நம் நாட்டின் மக்கள் தொகை ஒரு கோடியே முப்பது லட்சம் என்ற கணக்கில் கூடுதலாகிறது. இவ்வெண்ணிக்கை ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கள் தொகையை விட அதிகமாகும்.

*　*　*

மக்கள் தொகை 1966 ஆம் ஆண்டு 50 கோடியை அடைவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் பிடித்தது.

*　*　*

1968 ஆம் ஆண்டு மக்கள் தொகை 52 கோடியாகும். இப்போதுள்ள விகிதத்தில் மக்கள் தொகை பெருகுமானால் இன்னும் இருபத்தாறே ஆண்டுகளில் அது 100 கோடியாகிவிடும்.

தொகுப்பு—தோன்றல்.

செப் 14ஆம் நாள் முதல் 27ஆம் நாள் முடிய


உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?
ஆறு! அஞ்சு பொண்ணு! ஒரு பையன்!
ஏன்? குழந்தைகள் எல்லாம் மெலிஞ்சு போய் நோஞ்சான்களா இருக்கு?
அளவோடு இருந்தாத்தானே கவனிச்சு வளர்க்க முடியும் தம்பி!
யாரு அந்தப் பாட்டியம்மா? உங்க அம்மாவா?
உஸ்.. அவள் காதிலே விழுந்தா சோறு கிடைக்காது! அவள் என் மனைவி!


மன்னிக்கணும்! உங்களுக்குப் பிறந்தது எத்தனை குழந்தைகள்?
பிறந்தது பத்துங்க! ஒன்பது பொண்ணாப் பிறந்துச்சு! எப்பவும் பையன் வேணும்னு இவரு பிடிவாதமா இருந்தாரு! கடைசியில் பையன் பிறந்தான்!
ஆஸ்திக்கு ஒண்ணு வேணும்னு கண்ணா இருந்திருக்காரு!
நீங்க ஒண்ணு! சொந்தத்திலே வீடு கிடையாது! கழுத்திலே பொட்டுத் தங்கம் கிடையாது! பிள்ளையைப் பெத்து பெத்து என் உடம்புதான் ஓடாப் போச்சுது! 40 வயசிலே 60 வயசு கிழவியாட்டம் ஆகிட்டேன்!
அவன் கிடக்கிறு தம்பி! எங்க தேவைகள் என்னன்னு கேட்க வந்ததா சொன்னீங்க! அதை விட்டுட்டு....
உங்களது முதல் தேவை குடும்பக் கட்டுப்பாடு! அதைக் கடைப் பிடிக்காததால் தான் இந்தத் தட்டுப்பாடு!



# குடும்ப நலக் குறள் பத்து!

புலவர் மு. சிக்கந்தர்

குடும்ப நலத்திட்டம் கூறும் முறையால்
இடும்பை தவிர்த்தல் எளிது.

கருவுரு வாகாமல் காக்கும் முறைதான்
அறுவைச் சிகிச்சை முறை.

இருமல், வலிப்புநோய், தொண்டைநோய் மூன்றும்
வருமுன் தடுப்பூசி நாடு.

இடைவெளி இன்றிக் குழந்தைகள் ஈன்றுல்
உடல்நலங் குன்றும்; உணர்.

அளவாகப் பெற்று வளமாக வாழ
நலங்கூறும் திட்டத்தை நாடு.

திட்டமிட்ட நற்குடும்பம் தேய்வுரு இன்பத்தைக்
கட்டாயம் நல்கல் கடன்.

எற்றுக்கு வேண்டும்? இரண்டு குழந்தைகள்
பெற்றபின் மீண்டும் தொடர்ந்து.

உறைகொண்டும் நல்ல நுரைகொண்டும் இன்பம்
குறைவின்றிச் செய்தல் சிறப்பு.

தாய்சேய் நலம்பெறவும் தாய்நாடு மேம்படவும்
ஆய்ந்தறிந்த திட்டம் அறி.

அளவான நற்குடும்பம் ஆனந்த இல்லம்
அளவினை விஞ்சேல் அறிந்து.


பண்டங்கள்

தரம் நிறைந்தவை
விலை குறைந்தவை

எல்லாம் ஒரே இடத்தில்
அலைச்சல் மிச்சம்
செலவு மிச்சம்

பணத்தைச் சிந்தாமல் சிதறாமல்
செலவு செய்ய..

நாடுங்கள்

காமதேனு

கூட்டுறவு சூப்பர் மார்க்கட்
தேனாம்பேட்டை,
சென்னை 18
(டி. யூ. சி. எஸ். நிறுவனம்)

கலைத்திறன் கொண்ட வெள்ளிப் பொருள்களுக்கும்
வெற்றிச் சின்னங்களுக்கும்
தங்க நகைகளுக்கும்
நம்பிக்கையான இடம்

உம்மிடியார் ஜுவல்லர்ஸ்

உம்மிடி ராமையா செட்டி, குருசாமி செட்டி & கோ.,


வைர நகை, வெள்ளிப் பொருள் விற்பனை நிலையம்,

23-25, N. S. C. போஸ் ரோடு, சென்னை-1.



ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.

# எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்



## செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வருங் காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இன்பச் சூழ்நிலை எப்படி வந்தது ? பிறக்கும் போதே அதிர்ஷ்டத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர் ? இல்லை.

வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றோர், திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவில்லை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர் ; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில் பத்து லட்சம் பேர் குடும்ப நலத் திட்டத்தால் பயனடைந்துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்ரு இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றோரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர்காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்,

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம் ; பாதுகாத்திடுங்கள் ! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள் ; நண்பர்களிடம் கேளுங்கள் !

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர்; கருத்துரை தருவர்; கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக !

*திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்*

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

MOULIS

Registered No. M. 8657



